ரிஜிஸ்டர் நெ. M. 2992. "PURATCHI" தனிப்பிரதி விலை ஒரு அணா

புரட்சி



ஞாயிறுதோறும் வெளிவரும்.

ஆசிரியர்:— ஈ. வெ. கிருஷ்ணசாமி.

மாலை 1.	ஈரோடு, ஸ்ரீமுக-வரு மாசி-மீ 28-உ (11—3—1934)	மலர் 16.

(பாட்டாளி படுதுயர்)

முத்துராமலிங்கபுரம் சு. ம. பாவலர் அழகியநல்லூர்
தி. அ. வேங்கடசாமி

"தேயிலைத் தோட்டத்திலே" என்ற மெட்டு.

பாட்டாளி சின்பல்லே—பற்
பட்டுப்பணக்காரன் பக்கம்வலுத்தது, (பாட்)

1. கூட்டாளியாம் அரசும்—மதமும்
கொடுமைப் படுத்தி அடிமை வளர்த்தது
கேட்டாளர் தம்வயிறு—நினம்
தேடித் தேடித்தின்போர்க் கிட்டோட்டிவாடுது
[பாட்]

2. மாடங்கள் கட்டுகிறார்—தொழில்
மக்கள் கரையான் அமைக்கும்புற் றுள் அரவம்
ஓடிப் புகுந்திடல்போல்—அதின்
உட்புகுந் தேபுழைத் தோரை விரட்டுறார் [பாட்]

3. உழைப்பவர் தம் தேவிமார்—கட்ட
ஓட்டுத்துணியின்றிப் பட்டுத்தவித்திட
மூழுச்சோம்பர் தம் தேவிமார்—பட்டும்
முத்தும்பொன் னும்கொண் டுடம்பெங்கும்
[மூடுறார் [பாட்]

4. நித்தநித் தம்உழைப்போர்—பாலர்
நீர்க்கும்வெங் கூழ்க்கும் நிதமும்திண்டாடிட
எத்தர்தம் பாலகன்மார்—மிட்டாய்
(இ)லட்டுவர்க் கம்உண்டுண் டேப்பம்இடுகிறார்
[பாட்]

5. ஓயா துழைத்திடு வோர்—சற்றும்
ஓண்டக் குடிசையும் இன்றித் தவித்திட
ஆயாசமுற்றுச் சும்மர்—முத
லாளிவர்க் கம்எட் டடுக்கில் கிடக்கிறார் [பாட்]

6. பீச்தல்பா யும்இன்றி யே—தொழிற்
பேதை புடம்புமண் மீது புண்படு
வாய்த்த பணக்காரர்கள்—சப்ர
மஞ்சம்பொன் னுஞ்சலில் கொஞ்சிக்குலாவுறார்
[பாட்]

7. கைவிளக் கும்இன்றி யே—தொழிற்
காரன் மனோவிமக் கள்கண் கலங்கிட
ஐயோமின் சார்விளக்கம்—வீணாய்
ஆயிர மேற்றியா டம்பரம் செய்கின்றார் [பாட்]

8. ஏழைமக்கள் செருப்பும்—காலுக்
கின்றி வெயிலில்கல் லில்முள்ளில் தள்ளாட
பாழும் பணக்காரர்கள்—தலைக்குப்
பத்துக்குமேல் மோட்டார்வைத்தெக் களிக்கிறார்
[பாட்]

9. கால்வயிற் றுக்கஞ்சியே—இன்றிக்
கஷ்டப்பட் டேஉழல் காலந்தப் பிமாள
சால்ஓபின் பீர்குடியால்—அகாலம்
தன்னிலேசாகின்றார் பன்முதலாளிமார் [பாட்]

10. எங்கும் சமதர்மமே—எய்தில்
இந்தத்தொல் லையில்லை யில்லையென் றுசொன்னால்
உங்களை நாமொழிப்போம்—என
னுனை விடுகுவ பாரும் பணம்மதம்
[பாட்]

இதுதானே தேவை?

போகப் பிரியர்களுக்கு

தாதுபுஷ்டியை அளிக்கக்கூடிய

மன்மதக் குளிகை.

இணையற்ற மாத்திரையென யாவராலும் புகழப்பெற்று எண்ணிக்கையிலா ஆர்டர்கள் வந்து கொண்டிருக்கும் ஒப்பு யர்வற்றது. மாதர்கள் மனதைத்திருப்தி பண்ணும் மாண்பு வாய்ந்ததென்றால் இதைப்பற்றி அதிகம் விளக்குவானேன்?

இது மேகச்சூடு, வெட்டை, ஆண்மைக் குறைவு, வீரியக் குறைவு, நரம்புத்தளர்ச்சி, கோசந் தவளல், இளைப்பு, தாகம் முதலிய வைகளை நீக்கி வீரியவிருத்தி, போக சக்தி, இந்திரியக்கட்டு முதலியவைகளைக் கொடுக்கும்.

60-குளிகை ரூ. 5. 20-குளிகை ரூ. 2. வி. பி. வேறு.

குருதாம்பர பஸ்பம்.

திமிர், குஷ்டம், மதமதப்பு, பவுத்திரம், தடிப்பு, ரணம், குன்மம் முதலிய சகல வியாதியும் தீரும்.

25-நாள் பஸ்பம் ரூ. 12—8—0.

அன்னியநாட்டார் முன்பணம் அனுப்பவேண்டும்.

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி S. I.

டாக்டர் சிங்காரம் அவர்களின் கெந்தக நெய்.

இம்மருந்தால் குணமாகும் நோய்கள்.

செம்மேகம், கருமேகம், மேக ஊரல், தடிப்புடன் கூடிய மேகப்படைகள், கன்டமாலை, விப்புருதி கட்டிகள், வலி குன்மம், இரந்தி, குஷ்டம், லிங்கப்புற்று, சூல கணுச்சூலை, பாரிச வாய்வு, முடக்கு வாய்வு, சாமத்தில் ஸ்பரிச உணர்ச்சியில்லாதிருத்தல், கை கால் பிடிப்பு, மதமதப்பு, திமிர் வாய்வு, புண், புரைகள் ஆராத ரணங்கள், நரம்பு பிடிப்பு முதலிய பலவித கடின நோய்களை குணம் செய்யும். இரத்தத்திலுள்ள எவ்வித தூர் நீரையும் போக்கி சரீரத்திற்கு நல்ல தேஜஸைக் கொடுக்கும். பத்தியமில்லை.

60 வேளை மருந்து விலை ரு. 10—0—0.
20 ,, ,, 4—0—0.

வ. பி. தபால் சிலவு பிரத்தியேகம்.

மலாய்நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவும்.

முழுவிலாசம் தெரிவிப்பவர்களுக்கு கேட்லாக் இனாமாய் அனுப்பப்படும்.

டி. சி. சிங்காரம் அன் கோ.,

சித்த-ஆயுர்வேத வைத்தியசாலை,

தேப்பக்குளம் போஸ்ட், திருச்சி

"நவசக்தி" ஆசிரியர் தோழர் திரு. வி.

கலியாணசுந்தரமுதலியார் அவர்களால்

—:0:—

தமிழ் மணம், விடுதலை, பெண்ணுரிமை, தீண்டாமை ஒழிதல், சமரசம், சன்மார்க்கம் ஆகியவைகள் தழுவ எழுதப்பட்ட அறிய அந்நூல்கள்:—

	ரூ.	அ.
பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை ...	2	0
தமிழ்த் தென்றல்	2	0
முருகன் அல்லது அழகு	1	0
இராமலிங்கசுவாமிகள் திருவுள்ளம்	0	12
மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்	2	8
என்கடன் பணி செய்து கிடப்பதே	0	8
சைவத்தின் சமரசம்	0	8
சைவத்திறவு	0	8
கடவுள் காட்சியும் தாயுமானாரும்	0	4
தமிழ் நூல்களில் பௌத்தம்	0	4
தீர்த்திருத்தம் அல்லது இன்மை விருந்து	0	8
நாயன்மார்	0	3
சைவ சமய சாரம்	0	1
இமயமலை அல்லது தியானம்	0	6
தமிழ் நாடும் நம்மாழ்வாரும்	0	4
உரிமைவேட்கை அல்லது நாட்டுப்பாடல் ...	0	4
முருகன் அருள் வேட்டல்	0	4

இந்நூல்கள் எல்லாவற்றையும் ஒரே காலத்தில் வாங்குவோர்க்குத் தபாற் செலவின்றி மணியார்டர் கமிஷன் கழித்து வி. பி-யில் அனுப்பப்படும்.

முருகவேள் புத்தகசாலை,

12, கணபதி முதலித்தெரு, இராயப்பேட்டை, சென்னை.

விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1.	சுதம்பர ரகசியம் ...	0—8—0
2.	சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை	0—4—0
3.	மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை	0—8—0
4.	பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை	0—6—0
5.	மோட்டார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோக பயிற்சி முறையும் ...	2—0—0
8.	ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் விலை	0—6—0
	சுயராஜ்யம் யாருக்கு ...	0—1—0
	சாதிகளின் அடிமைகள் ...	0—12—0
	சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ...	2—0—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 7 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒருவருஷமாலை செய்தது கிரயம் ரூ. 4—0—0

விலாசம்:—

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

பயிரிடும் பாட்டாளிக்கும் பிறருக்கும் தனக்கும் பணக்காரர் செய்யாமற் செய்யும் உதவி.

(தோழர் C. D. நாயகம்)

நம் நாட்டில் தன்னுடைய தல்லாத நிலத்தைக் கூலிக்கோ வாரத்திற்கோ பயிரிட்டு வயிறுகழுவுவோரே அதிகம். தந்நிலத்தைத் தானும் தன் மனைவி மக்களுமாகப் பயிரிட்டு வயிறார உண்டு தலை நிமிர்ந்து நடப்போர் மிகச்சுருக்கம். தந்நிலத்தைத்தானே பயிரிடுகிறவன் அந்நிலத்தை மேம்படுத்துவதில் கண்ணுங் கருத்துமாக இருந்து தனக்கோ, தன் மனைவிமக்களுக்கோ இருக்கும் நேரத்தை எல்லாம் அதிலேயே செலவிட்டு இரவு பகலாய் உழைத்து நிலத்தையும் மேன்மைப்படுத்தி நிலவரும்படியையும் அதிகப்படுத்துகிறான். இதனால் நில வருப்படியும், நில மதிப்பும் ஆண்டு தோறும் உயர்ந்துகொண்டே போகிறது. நிலத்திலிருந்து ஒருவன் பெறக்கூடிய உச்சவரும்படியும் அவனுக்குக் கிடைக்கிறது. வரிப் பழுவென்ற உணர்ச்சியும் அவனுக்குத் தெரியாது.

இப்படிப்பட்டவர்கள் பெருகியிருந்த காலத்தில் தான் நம் நாட்டிற்குப் பொன்விளையும் நாடு என்ற பெயர் இருந்தது. தாங்கள் உண்டதுபோக மீதமானதை விற்கவேண்டியிருந்தபடியால் பிறருக்கும் உதவினவர்களானார்கள். தந்நிலத்தைப் பயிரிடப் பிறரிடம் ஒப்படைத்து விட்டுச் சோம்பேறித் தனத்திலும், சூதாட்டத்திலும் கூத்திலும் களிப்பிலும் நேரத்தைப் போக்குவோர் பெருகப் பெருகத் தங்களுக்கும் தங்களை அண்டினோருக்கும் வறுமை பெருகிற்று.

தங்கள்நிலத்தைத்தாங்களேபயிரிடுபவர்கள் தங்கள்வேலையில்காட்டுகிற ஊக்கம், பிறர்நிலத்தைப்பயிரிடுபவர்கள் அவ்வேலையில் காட்டாதது இயல்பே. அதில் அதிசயம் ஒன்றுமே இல்லை. பிறர் நிலத்தைப் பயிரிடுபவனுக்கு அந்நிலம் அடுத்த ஆண்டு தன்னிடம் இருக்குமென்ற உறுதி கிடையாது. நிலத்தைப் பண்படுத்திக் கொழுக்கவைக்க வேண்டுமென்ற எண்ணமும் அவனுக்கு வராது. நிலத்திலுள்ளதைக் கிடைத்தவரை சுரண்டிக்கொண்டு போவதே அவன் நோக்கமாக இருக்கும். இதினால் நில வரும்படியும், நில மதிப்பும் ஆண்டுதோறும் குறைந்து வருவதும் இயற்கை. தான் உழைக்கும் நிலத்து வரும்படி தனக்கும், தன் மனைவி மக்களுக்கும்போதாது போகவே, தானும் அவர்களும் தங்கள் உழைப்பால் வேறு வரும்படி செய்யவேண்டி வருகிறது. தங்களுக்குக் கிடைத்தநேரத்தையெல்லாம்பயிரிடும்நிலத்தில் உழைப்பிற்குப் பதிலாகவரும்படி தரக்கூடிய வேறு வேலையில்லாத நேரத்தில்தான் நிலத்தை எட்டிப் பார்க்க வருகிறார்கள். இதனால் நிலவரும்படியும், நில மதிப்பும் இன்னும் கீழ்நோக்கியே போக இடமாகிறது. தவிரவும் தந்நிலத்தைத் தானே பயிரிடுகிற நிலத்திலிருந்துவரும் வரும்படி அவனுடைய ஒரு குடும்பத்தை மாத்திரம் காப்பாற்றவேண்டியிருப்பதால் அக் குடும்பம் சிரமற்று வாழ்கிறது. சொந்தக்காரனல்லாதவனால் பயிரிடப்படுகிற நிலவரும்படி பயிரிடுகிறவன், சொந்தக்காரன் ஆகிய இருவர் குடும்பத்தையும் காப்பாற்றவேண்டியிருப்பதாலும் அது இருவருக்குப் போதாமையாலும் ஒருவரை ஒருவர் பிடுங்கித் தின்னுகிற நிலைமைக்கு ஆளாகிறார்கள்.

இந்நிலைமை மாறினால் இக் குடும்பங்களும் மேன்மையுற்று நாடும் நலம் பெறும். அதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அதாவது எந்தக் காரணத்தாலாவது தந் நிலத்தைப் பயிரிடமுடியாத நிலைமையிலுள்ளவர்கள் பயிரிடுபவர்களுக்குத் தங்கள் நிலத்தை விற்றுவிடுவதுதான். அப்படி விற்றுவந்த பணத்தைக் கூட்டுறவு நிலையங்களிலாவது, நுரைத்தவைத்தாரிடமாவது வட்டிக்குப் போட்டிருந்தால் அவ்வரும்படியைக்கொண்டு தாங்கள் முன்மாதிரியே மேனி கோகாமல் வாழலாம், பயிரிடுபவர்களைப் பிடுங்கித் தின்ற பழியிலிருந்து மீளுவார்கள். வியாபாரமோ வேறு தொழிலோ செய்யவேண்டுமென்ற எண்ணமும் அதற்குரிய அறிவும் ஆற்றலும் உடையவர்கள் நிலம் விற்ற பணத்தைக்கொண்டு அத் தொழிலைச் செப்து தங்களுக்கும் நாட்டுக்கும் ஆக்கம் தேடிக்கொள்ளட்டும். தானும் பயிரிடாமல் பயிரிடுபவன் சொந்தக்காரனுவதற்கும் இடங்கொடாமல் வைக்கோல் போரின்மேல் படுத்திருக்கும் நாய்குணத்தை விட்டுவிட வேண்டியது நிலக்காரின் கடமையாகும்.

மேலே சொன்ன நன்நோக்கத்துடனே, அல்லது வேறு காரணத்தாலோ தன்நிலத்தைத் தானே பயிரிடமுடியாத முதலாளி அந்நிலத்தை விற்க முன்வரும்பொழுது பயிரிடும் பாட்டாளி வாங்கினால் தானும் பலன்பட்டு நாடும் நலம்பெற இடமாகும். அந்நிலைமை வராதபடித் தடுக்க வேறு சில இடையூறுகள் இருக்கின்றன. பழைய முதலாளிகள் நிலத்தை விற்க எண்ணும்பொழுது பக்கத்திலுள்ள வேறு முதலாளிகளும் புதிதாகத் தோன்றிய சில குட்டி முதலாளிகளும் பயிரிடும் பாட்டாளியுடன் போட்டி போட்டுக்கொண்டு நிலவிலையைத் தூக்கிவிடுகிறார்கள். இந்தப் போட்டியையும் எதிர்த்து நிலத்தை வாங்கக்கூடிய பயிரிடும் பாட்டாளி பெரிதும் சுருக்கம். அப்படிச் சுருங்கிய பாட்டாளியிடம் வந்த நிலம்போக மீத நிலத்திற்குப் பழைய பாடம்தான். நாட்டிற்கும், பாட்டாளிக்கும், முதலாளிக்கும் பழைய வறுமைதான். குலத்துக் குலத்து அலுத்துப் போய் வயிரோட்டி ஒரு நாய் போரிலிருந்து கீழே இறங்கியவுடன் பக்கத்துப் போரின்மேல் நின்று சற்று உரத்த குரலுடன் குரைத்துக்கொண்டிருந்த வயிற்றில் பசையுள்ள இன்னொரு நாய் இரண்டு போரின்மேலும் மாறி மாறிக் குதித்துக் குரைத்தது போலவும், அல்லது கீழே வயிறார உண்டு ஓடி ஆடிக்கொண்டிருந்த புதிய நாய் ஒன்று போரின்மேல் தொத்தி ஏறிக்கொண்டு குரைக்க ஆரம்பித்தது போலவும் ஆகும் நாட்டின் நிலைமை. வைக்கோலைத் தின்னைக்கூடிய பசு வயிறாரத் தின்றபாடுமில்லை, பசுக்காரரும் ஊராரும் பசி ஆறப் பால் குடித்தபாடுமில்லை.

இத் துர் நிலைமை மாறுவதால் பயன்பெறக்கூடிய நாட்டு மக்கள் அதை மாற்றுவதற்கு முயலாமல் கையைக் கட்டிக்கொண்டிருப்பது சரியல்ல. சட்டத்தை மாற்றுவதும், அதற்குவேண்டிய கொந்தளிப்பு செய்வதும் ஒரு புறமிருக்க, நாட்டின் நன்மையை விரும்புகிற ஒவ்வொருவரும் செய்யக்கூடிய எளிதான வழி ஒன்றுளது. அதாவது மேற்கூறிய இரு பழிகளுக்கும் ஆளாகாமல் தன்னே முதலில் காப்பாற்றிக்கொண்டு தன் பக்கத்திலுள்ளவர்களுக்கு மனதில் படுமாறு எடுத்துச்சொல்லி அவர்களை அப்பழியிலிருந்து விலக்கவும், தடுக்கவும் முயல்வதுடன், பயிரிடும் பாட்டாளிக்கு நிலம் கிடைக்க முயலுவதுமேதான். இந் நன் முயற்சியில் ஈடுபடக்கூடியவர்கள் ஒவ்வொரு ஊரிலும் கணிசமானவர்கள் இருப்பார்கள். பொது உடமை, சமதர்மம், சுயமரியாதை, அறிவுவளர்ச்சி, உண்மை நாடுதல் முதலிய நோக்கங்களுடன் சங்கங்கள் வைத்திருப்போர் இவ்வழியில் முயலப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறார்கள். தாங்கள் வாயால் சொல்லிக்கொண்டிருப்பதை செய்கையில் காட்ட இது ஒரு சிறந்த வழியாகும். ஒவ்வொரு சங்கத்தாரும் தங்கள் தங்கள் ஊரில் அல்லது இன்னும் குறுகிய எல்லையில் உள்ள பயிரிடும் நிலம் எவ்வளவு, நிலவரும்படி எவ்வளவு, அவ்விடத்தில் வாழும் குடும்பங்கள் எத்தனை, அவர்களுள் தன் நிலத்தைத்தானே பயிரிடுவோர் எத்தனை, அந்நிலத்தின் கிரய மதிப்பென்ன, வரும்படி என்ன, பிறரிடம் பயிரிட அடைத்திருப்போர் எத்தனை அந் நிலத்தின் கிரயமதிப்பென்ன, வரும்படி என்ன, தனக்கென நிலமில்லாது பயிரிட்டுக் காலங்கழிப்போர் எத்தனை, அந்நிலத்தின்

தொடர்ச்சி 10ம் பக்கம் பாக்க.

உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்.
நீங்கள் இழக்கவேண்டியது
உங்கள் அடிமை விலங்கேயன்றி வேறல்ல.
நீங்கள் இவ்வுலகத்தை
வெல்லவேண்டியவராயிருக்கிறீர்கள்.
(காரல் மார்க்ஸ்)

ரோஜா முத்தையா

மன்னார்குடி மகாநாட்டு வரவேற்புத்தலைவர் தோழர் தர்மலிங்கம் அவர்களின் வரவேற்புப்பிரசங்கம்.

1934-ஆவது மார்ச்சு மாதம் 4-தேதியில் நடைபெற்ற தமிழ் மாகாண முதலாவது சமதர்ம மகாநாட்டின் வரவேற்புக்கழகத் தலைவர் தோழர் தர்மலிங்கம்அவர்களின் வரவேற்புப்பிரசங்கம்:—

தோழர்களே!

இன்று ஒரு பெரிய மாறுதல் தினமாகும். நமது இயக்கஸ்தாபகர் ஈ. வெ. இராமசாமி சமதர்மப்பிரசாரம் செய்த ஒரு பாவத்திற்காகச் சிறைவாசம் செய்து கொண்டிருக்கிறார். தோழர் ஈ. வெ. இராமசாமியின் சமதர்ம பேச்சை இராஜ துவேஷம் என்று சொல்லி எந்த அரசாங்கம் வியாக்கியானம் செய்ததோ, அந்த அரசாங்கத்தின் குடை நிழலிலே மீண்டும் சமதர்ம மகாநாடு கூடத்த முன் வந்திருக்கிறோம். இம்மகாநாட்டுக்கு மாகாணத்தின் பல பாகங்களிலிருந்து உற்சாகத்தோடு விஜயம் செய்திருக்கும் சமதர்மத் தோழர்களாகிய உங்களை மகிழ்ச்சியோடு வர வேற்கிறேன்.

கடந்த டிசம்பர் மாதத்தில் தோழர் சிங்காரவேலு தலைமையில் மாகாணநாஸ்திகர் மகாநாடு சென்னையில் கூடிக்கலைந்தது. அடுத்த கொஞ்ச நாளில் மாகாண சமதர்ம மகாநாடு தோழர் சிங்காரவேலு அவர்களை தலைமையாகக் கொண்டே இன்று மன்னார்குடியில் கூடுகிறது. இந்தியாவுக்கு முதல் தடவையாக சென்னையில் கூடிய மாகாண நாஸ்திகர் மகாநாட்டில் அதாவது 'கடவுள்' ஒழிப்பு மகாநாட்டில் தலைமைவகித்த தோழரே, இம் மகாநாட்டிற்குத்தலைமை வகிக்க இருந்தும் அவர் திரேக அசௌகரியத்தால் வராவிடினும் அவரின் அக்கிராசனப்பிரசங்கத்தை தோழர் எஸ். ராமநாதன் அவர்கள் படிக்க ஒருப்பட்டு, மகாநாட்டுக்கும் தலைமை வகித்து நடத்தித்தர முன் வந்ததுக்கு நாம் பெருமையடைய வேண்டும். தலைவர் தோழர் சிங்கார வேலு நமது சென்னை நாஸ்திகமகாநாட்டில், கடவுள் என்பது வார்த்தை அளவில் இல்லாமல் அதையொழிப்பதைப் பொறுத்தே சமதர்மத்தின் வெற்றி இருக்கிறது என்றார். சென்றவருஷம் தஞ்சை ஜில்லா இரண்டாவது சுயமரியாதை மகாநாடு தோழர் எஸ். குஞ்சிதம் பி. ஏ., எல். டி., அவர்கள் தலைமையில் இங்கு கூடியது. அந்த சமயத்துக்கு முன் எல்லாம் மன்னார்குடியைப் பொறுத்த அளவில் வெளியார் அபிப்பிராயம் மிக மிக மோசமாக இருந்தது. இந்த பொது அபிப்பிராயத்துக்கு கொஞ்சம் உண்மை உண்டு என்றாலும் சமதர்ம லக்ஷியத்தின் வேகமே அடுத்த ஒரு வருஷத்துக்குள் மாகாணம் பூராவுக்குமே சமதர்மத்துக்கு ஒரு திட்டத்தை வகுக்க மன்னார்குடி நகரம் முன் வந்திருக்கிறது.

சமதர்மம்:

அகில உலகத்திலும் நிறந்தரமாக சமதர்மக்கிளர்ச்சி நடந்து கொண்டு வருகிறதுஎன்றாலும், அக்கிளர்ச்சியை அடியோடு அழித்து விட மத வாதிகளும்கடவுள் பக்தர்களும் பகீதரப்பிரயத்தினம் செய்து வருகிறார்கள். இப்பிரயத்தினங்களுக்கு எல்லா ஏகாதிபத்யச்செருக்கு கொண்ட அரசாங்கங்களும் சலுகை காட்டுவதோடு மல்லாமல், சமதர்மத்தை தலைகாட்டாமல் செய்து விட கொடுமையான அடக்கு முறைகளையும் கையாண்டு வருகிறார்கள். சமதர்மம் வீறிட்டு எழுவதிலிருந்து முதலாளி மத ஆதிக்கர்களின் நிலையும் வர வர மோசமாகிக் கொண்டிருக்கிறது என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. நமது இந்தியா தேசத்திலும் மக்களிடையே சமதர்ம உணர்ச்சி வளர்ந்து பலப்பட்டு வருகிறது. என் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையிலும் சமதர்ம உணர்ச்சியை மக்களுக்கு தெரியப்படுத்துவதற்கு சுயமரியாதை இயக்கம் மூலகருவியாக வந்து சேர்ந்தது. உங்களைப்போலவே பல்லாயிரக்கணக்கான சமதர்மிகள் தமிழ் நாட்டில் தோன்றி விட்டார்கள்.

சமதர்மம் ஏன்.

இன்று உலகில் ஒரு சிறிய கூட்டம் அர்த்த மற்ற சில ஆதாரங்களைச் சொல்லிக்கொண்டு உடல் நோகாமல் ஆடம்பர வாழ்வில் சுக போகத்தை அனுபவித்துக் கொண்டு இருக்கிறார்கள். இவர்களில் அரசர், சிற்றரசர், வல்லரசர், சமஸ்தானம், ஜமீன், மிராசுதார், பண்ணை, மடாதிபதி, ஆச்சாரி போன்ற பல பெயர்களோடு அடியும் நுனியும் இல்லாத காரணங்காட்டி சுகஜீவிகளாய் காலங்கழிக்கிறார்கள். மற்றொரு பெரும் கூட்டம் அன்னம், தண்ணீர் ஆகாரத்தளவில் பூர்ண சுதந்திரம் இல்லாமல் இராப்பட்டினி, கால்வயறு அரை வயிறு, என்றளவில் வயிற்றுச் சோற்றுக்கு வழியில்லாமலும், படுக்க பாய், இருக்க வீடு, உடுக்க உடை இவை போன்ற மக்கள் சமூகத்துக்கு அவசியமான இதர சாதனங்களுமின்றி பரிதாபப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். சாலையோரம், மர நிழல், சத்திரம், சாவடி இவைகளில் தலைவிரிகோலமாக சஞ்சரிப்பதே இந்தியாவின் அடிப்படையான அலங்காரமாயிருந்து கொண்டிருக்கிறது. கடவுள் அவதாரம் செய்து ஆட்சி புரிந்ததாகச் சொல்லப்படும் இந்தியாவில் பாரத பூமி, புண்ணிய பூமி என்ற பட்டப்பெயர்களுக்குப்பாத்திரப்பட்டிருக்கும் இந்தியாவில், இந்த தலைவிரி கோலத்தின் மகிமை எதன் பாற்பட்டதென்று சொல்வதோ தெரியவில்லை. இவ்விரு சாரார்களுடைய நிலையிலும் சமதர்ம வாதிகளுடையவிசேஷகவனம் செல்ல வேண்டியிருக்கிறது. பணக்காரர்களுக்குப் பரம்பரையாகத்தோன்றி யிருக்கும் சோம்பேறித்தனமான வாழ்வினும் ஏழைகளின் பசிப்பிணியை நிவர்த்தி செய்ய வேண்டியதும் சர்வ மக்களும் மனிதத்தன்மையை உடையவர்கள் தான் என்ற ஒரு புதிய சகாப்தத்தை உண்டு பண்ணும் பொறுப்பு சமதர்ம வாதிகளுடைய தாகும். அதோடு வருங்காலததில் எற்படப் போகும்புது உலகத்தாரால் புறக்கணிக்கப்படும் பணக்காரர்களுக்கு அபயம் அளிக்க வேண்டியதும் சமதர்ம வாதிகளுடைய கடமையாகும். பரம்பரை பழக்க வாசனையால் பணக்காரத்தன்மை என்பது தெயவீக சம்மதம் உடையதாக இருக்குமோ என்று ஐயுறுகிறார்கள். பணக்காரர்களின் பகுத்தறி யாத்தன்மையால் ஏற்படும் இந்த ஐயத்தை போக்கித் தக்க புத்திகொடுக்க வேண்டியதும் சமதர்ம வாதிகளுடைய முதல் வேலையாகும்.

ஏழை பணக்காரன் என்ற உலகக் கொடுமைக்கு உதாரணமாக தமிழ் நாட்டை எடுத்துக்கொண்டு பாருங்கள். லக்ஷ்மி புத்திரர்கள் என்று சொல்லப்படும் மிராசுதார்கள், பட்டதாரிகள், மிட்டாதாரிகள் போன்றவர்களையும், அவர்களுக்கு அடிமைகளாக இருந்து ஊழியம் செய்யும் பள்ளன் பறையன் போன்றவர்களையும் எடுத்துக்கொண்டு பாருங்கள். வருஷம் பூராவும் ஆணும் பெண்ணுமாகச் சேர்ந்து பண்ணையடிக்கிறார்கள். அவர்களின் தினசரி வருவாய் இரண்டு படி தானியந்தான். அதாவது பட்டணம் படிக்கு ஒரு படியாகும். மானியம் மடப்பள்ளி உள்பட சகல வருவாயும் ஒரு அடிமைக் குடும்பத்திற்கு வருஷத்திற்கு 25கலம் நெல் என்று கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. இந்த வருமானத்தையும் குருணி பதக்காகக் கொடுக்கப்படுமே தவிர, உருச்சேரும் வகையில் மொத்தமாகக் கொடுப்பதில்லை. இத்தக் கொஞ்சக்கூலியிலும் கூலி மரக்கால் எனற சின்ன மரக்கால் போட்டு கொள்ளை கொள்ளும் மிராசுதார்களின் கொடுமை நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர்களிடம் சாதாரணமாக நடக்கும் சம்பவமாகும். இந்த வருமானத்தில் கொலுக்குடி காட்டில் நின்றான், தோப்புத்தறவில் நின்றான், என்பதுபோன்ற குற்றங்களைப்பிரஸ்தாப அடிமைகளிடத்தில் சுமத்தி, அபராதம் விதிக்கப்படுவதையும், இந்த 25-கலத்தில் கழிக்கப்பட வேண்டும். ஆடையிலும் கோடையிலும், சேற்றிலும் காற்றிலும் உழைத்தது பிரஸ்தாப அடிமைகள் என்றாலும், தானியம் குவிந்ததைப் பருவத்தில் அவர்களுடைய தரித்திரதுக்குக் கடுகளவாவது விமோசனம் உண்டா என்பதைக்கூர்ந்து கவனித்துப்பாருங்கள். மிராசுதார்கள்வீட்டுச்சேரடியில்ஆயிரக்கணக்கான நெல் மூட்டைகள் கட்டுகிடை செய்திருந்தாலும், பாட்டாளி வீட்டில் இரண்டு மரக்கால் நெல் சேர்ந்தாற்போல் பார்க்க முடியாது என்பதும் உங்களுக்குத்தெரியும். ஆடையில் வறுத்துக் குத்துவதும், அறுவடை முடிந்த கோடையில் எலி வளைதோண்டுவதுமான வறுமையே நம் கண்முன் காணும் காக்ஷியாகும். கல் நெஞ்சம் படைத்த மிராசுதார்களின் கொடுமையிலிருந்து தப்பி மிருகியாவதைக் கொண்டு தான் அடிமைக்குடும்பத்தின் வாழ்வு நடைபெற வேண்டும். நாலா பக்கமும் நீர் சூழ்ந்த சதுப்பு நிலத்தில் கட்டியிருக்கும் அவர்களுடைய இருப்பிடமோ, மழைக்காலத்தில் ஒழுகும் கோடைக் காலத்தில் காற்றிலும் அல்லல்படும் நிலையிலேயே அமைந்திருக்கும். கௌபீனம் தரித்த ஒரு அழுக்கடைந்த கந்தலோடு அவர்களின் ஆடை விஷயம் தீர்ந்து விடுகிறது. அதாவது அரை நிர்வாணப் பக்கிரிகள் என்றும் சொல்லலாம்! நல்ல பெயர் வைத்துக்கொள்ளவோ, நல்ல உணவு தயாரித்து புசிக்கவோ, முடியாது என்பதோடும், அப்படிச் செய்து கொண்டாலும் அடிமை என்ற ஜாதி ஆசாரத்துக்கு பாபம் சம்பவிக்கும் என்று பரம்பரையாக சொல்லிக் கொடுத்திருப்பதால், கஞ்சி காச்சிக் குடிப்பதைத்தவிர வேறு ஒன்றும் அனுபவித்துப்பார்க்க நியாயமுமில்லை. அவர்கள் வீட்டு புத்திர பாகியங்களுக்கு "மாட்டுக்காரப் பையல்கள்" என்ற திருநாமத்தை வம்ச பரம்பரையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அடிமை ஜாதி குழந்தைப்பருவமே மாடு மேய்ப்பதிலிருந்து அபிவிருத்தி யாவதால், அவர்களுடைய வாழ்வின் இதர அம்சங்களில் ஏற்படும் துன்பங்களைப்பற்றி அதாவதுகுடி தண்ணீர் இல்லாமை குளிக்க வசதி இல்லாமை, தீண்டாமை, அண்டாமை, போன்ற கடவுள் மதக் கொடுமைகளைப்பற்றி விவரிப்பது என்றால் நேரம் போதாமல் போய்விடுமென்றஞ்சி விடுவதற்கு மன்னிக்கவும்.

தொடர்ச்சி 16ம்பக்கம் பார்க்க.

அக்ரஹாரத்துப் பேச்சு.

ஓர் சம்பாஷணை.

(C. I. D.)

சொப்பு:- என்ன சங்கதி? ரொம்ப நாளாகக் காணோமே! வேலை அதிகமோ?

லோட்டா:- ஆமாப்பா! இரண்டு மாதமா வக்கீல் வீட்டுக்கு நடந்து நடந்து கால்கூட எரிச்சல் கண்டுபோச்சு.

சொ:- சரி! ஊரில் என்ன விசேஷம்?

லோ;- என்ன விசேஷம்! ஒன்றுமில்லே. நம்ம ஊர் அக்ரஹாரம் தான் நெறுதூளிப்படுது!

சொ:- என்ன சங்கதி? இந்த பீகார் பூகம்பத்தைப்பற்றித்தானே!

லோ:- சே! நீ ஒரு பயித்தியக்காரனப்பா. பூகம்பத்தைப்பற்றி அக்ரஹாரத்து மனுஷாளுக்கு ரொம்பக் கவலையோ! அதைவிட ரொம்பக் கவலையான விஷயம் எத்தனையோ இருக்குதப்பா அவர்களுக்கு.

சொ,- வேறு என்ன அக்ரஹாரத்திலே அவ்வளவு மும்முரமாய் பேசுகிறார்கள்.

லோ:- தெரியாதா! சமீபத்தில் நம்ப தேசத்தில் இரண்டு பெரிய ஆபத்துக்கள் ஏற்பட்டுவிட்டதல்லவா; அதைப்பற்றித்தான்.

சொ:- அதென்ன அப்போப் பட்ட ஆபத்து?

லோ;- ஷண்முகஞ் செட்டியார் இந்திய சட்டசபைத் தலைவராய்ப் போய்விட்டாரல்லவா? அது ஒன்று.

சொ;- ஓஹோ! சரி! அப்புறம்!

லோ:- உஸ்மான் சாஹிப் கவர்னராய் நியமிக்கப்பட்டிருக்கிறாமே. அது இரண்டு.

சொ:- ஆமா! இதிலென்ன ஆபத்து வந்திருக்கிறது.

லோ:- சே! இவ்வளவுதானா! உனக்கு உலக அனுபவமே போதாதப்பா சொல்கிறேன் கேள்!

நீ இந்தப் பார்ப்பாரப் பத்திரிகையெல்லாம் படித்துப் பார்க்கிறதுண்டா?

சொ:- அதென்ன! பத்திரிகையில்கூட பார்ப்பாரப் பத்திரிக்கை யென்று இருக்கிறது? அதெது?

லோ:- அதுதான் சுதந்திரச் சங்கு, சுதேசமித்திரன், ஹிந்து, ஜெயபாரதி, ஆனந்தவிகடன், வகையறா.

இவைகளைப் படித்துப் பார்த்தால் இந்தியா தேசத்திற்கு ஷண்முகஞ் செட்டியாரினாலும், உஸ்மான் சாகிபுவாலும் வந்த ஆபத்து நன்றாய்த் தெரியும்.

சொ:- இப்படி கிண்டலாய்ப் பேசினால் எனக்குப் புரியவேயப்பா. நல்லா தெளிவா சொல்லு.

லோ;- சொல்றேன் கேள். எல்லா அக்ரஹாரத்திலேயும் இப்போ இதே பேச்சுத்தான். அதாவது, ஷண்முகஞ் செட்டியார் ஓட்டாவாவிலே நமது தேசத்தைக் காட்டிக் கொடுத்து இந்திய சட்டசபைத் தலைவரானாராம். உஸ்மான் சாகிபு காங்கிரஸ்காரர்களை போலீசைவிட்டு அடிக்கச் செய்து தனது உத்தியோகத்தை நீட்டிக்கொண்டு இப்போது கவர்னர் வேலையும் பார்க்கப் போகிறாராம். ஆகையினால் இந்த இரண்டு பேரும் பெரிய தேசத் துரோகிகளாம். தெரிஞ்சதா?

சொ:- ஆமாம்! அவர்கள் சொல்றது சரிதானே!

லோ;- அடெ பயித்தியமே! பார்த்தியா! இந்த பூணூல் கூட்டம் போடுற தூபத்திலே நம்ப "பிசாசுகளெல்லாம் கூட ஆடுது பார்! உனக்கு எதையும் யோசனை செய்து பார்க்கவே தெரியாதப்பா! கொஞ்சம் கவனமாய்க் கேள்,

ஷண்முகஞ் செட்டியாருக்கும், உஸ்மான் சாகிபுக்கும் இந்த இரண்டு வேலையையும் பார்க்கத் தெறமை இல்லேயாம். எந்த ஆபீசிலே போனாலும் பார்ப்பாரக் கூட்டம் முழுதும் இதே பேச்சுத்தான். "என்ன சார்! உஸ்மானுக்கு என்ன தெரியும்? இவனுக்கு கவர்னர் வேலையாமே! சர்க்காருக்குக் கண்ணில்லே சார்." என்று குமாஸ்தா பார்ப்பான முதல், பெரிய உத்தியோகத்திலிருக்கும் பார்ப்பான்வரையில் பேசிக்கொள்வது உனக்குத் தெரியும்? போதாக்குறைக்கு ஜெயில் இன்ஸ்பெக்டர் என்ற ஒரு பெரிய பதவிக்கும் இப்போது ஒரு முஸ்லீம் வந்துவிட்டார். பார்ப்பார் வயிறெல்லாம் எரிகிற எரிச்சல் தெரியுமா உனக்கு?

சொ:- இதிலென்ன வயிறு எரிவதற்கு இருக்கிறது? பார்ப்பார்கள் சொல்றபடி, எல்லாம் நம்ம இந்தியர்கள்தானே பெரிய உத்தியோகத்திலிருப்பது? இதிலென்ன நமக்குப் பெருமைதானே'

லோ,- சே! பயித்தியமே! நீ ஒரு பழைய காலத்து மனுஷன்! இந்தியனுவது ஒண்ணுவது! ஷண்முகஞ் செட்டியாருக்குப் பதிலா, ஒரு சர். சி. பி. ராமசாமி அய்யர், ஒரு ஜி. எ. நடேசய்யர் இந்திய சட்டசபைத் தலைவராயிருந்து உஸ்மான் சாகிபுக்குப் பதிலா ஒரு சீனிவாச சாஸ்திரி, அல்லது ஒரு வெங்கட்ராம சாஸ்திரி கவர்னர் வேலை பார்க்கிறதாயிருந்தா அப்போ அக்ரஹாரத்துப் பேச்சு எப்படியிருக்கும் தெரியுமா? சொல்றேன் கேள்.

"படேல்சிங்கம் உட்கார்ந்த அஸ்செம்ப்ளி நாற்காலியில் சி. பி. ராமசாமி அய்யரைத் தவிர வேறு தகுதியுள்ளவர்கள் இந்த நாட்டிலுமில்லே. எந்த நாட்டிலுமில்லே.....சீனிவாச சாஸ்திரியார் சென்னை மாகாணக் கவர்னராய் வந்ததானது இந்தியர்களுக்கே அதுவும் சென்னை ராஜதானிகே ஒரு பெருமை என்பதில் சிறிதும் ஆட்சேபணையில்லே.....' என்று இந்தப் பேச்சில் இருக்கும் தெரியுமா?

சொ,- அப்போ, நீ சொல்றதைப் பார்த்தால் இந்த பூணூல் கூட்டங்களும், பூணூல் பத்திரிக்கைகளும் பொறாமையால்தான் இந்த ரெண்டுபேரையும் திட்டுகின்றன என்று சொல்கிறாயா?

லோ:- ஆமாம். அதிலென்ன சந்தேகம். சர். சி. பி. ராமசாமி அய்யர் சட்டமெம்பராயிருந்திருந்தால்தான் கீரத் தண்டு தின்கிற இந்தப் பார்ப்பார வீரர்களுக்கெல்லாம் போலீஸ் சூப்ரண்டெண்டு வேலையும், சப் இன்ஸ்பெக்டர் வேலையும் 100-க்கு 90 கிடைத்தது. இல்லாட்டி, போலீஸ் உத்தியோகத்துக்கும், பார்ப்பாருக்கும் என்ன சம்பந்தம்?

இதுமாத்திரமா? இன்னொரு ரகசியம் சொல்றேன் கேள். "ஹிந்து" பத்திரிக்கை தெரியுமா? அதிலே இந்திய சட்டசபை இன்னார் தலைமையில் கடந்தது என்று சமீபத்தில் எப்போதாவது வந்து பார்த்திருக்கிறாயா? இது கிடக்கட்டும். ஷண்முகஞ் செட்டியாருக்கு சர்பட்டம் கிடைத்தபோது பார்ப்பாரக் குட்டிப் பத்திரிக்கைகள் குலைத்த குலைப் பெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தாயல்லவா? ஆனால் இதேபட்டம் சி. பி. ராமசாமி அய்யருக்கு வந்தபோது அக்ரஹாரம் என்ன பாடு பட்டது தெரியுமா? தேசிய வீரர்கள், தேசியப் பத்திரிக்கைகள் எல்லாம் உப்புக் கண்டம் திருட்டுக் கொடுத்த பாப்பாத்திமாதிரி இருந்தது உனக்குத் தெரியுமா?

இன்னும் சொல்றேன் கேள். சர். சி. பி. ராமசாமி அய்யர் சென்னை சட்ட மெம்பராயிருந்த போது அடக்குமுறைகளைப் பிரயோகித்ததற்காக இந்தப் பார்ப்பனர்கள் அதாவது தேசியவாதிகள் யாரைத் திட்டினார்கள் தெரியுமா?—ஜஸ்டிஸ் கட்சியை. ஏனென்றால் ஜஸ்டிஸ்கட்சி அரசாங்கத்தில் கொடுமை நடக்கிறதாம்! ஆனால் உஸ்மான் சாகிபு விஷயத்தில் என்ன சொன்னார்கள் தெரியுமா? உஸ்மான் சாகிபுவையே திட்டினார்கள். தேசத் துரோகி என்றார்கள். இரக்கமில்லாதவர் என்றார்கள்.

சொ;-அப்படியானால் இப்போ திருக்கிற ஜஸ்டிஸ் கட்சியை பார்ப்பாரப்பத்திரிக்கைகளும் பார்ப்பார்களும் அவ்வளவு திட்டுவதில்லையே ஏன்?

லோ:- அது தெரியாதா? இப்போதிருக்கிற ஜஸ்டிஸ் கட்சிதான் பார்ப்பார் பார்த்து, "போடு தோப்புக்கரணம்" என்றால், "எண்ணிக்கிங்க, சாமி" என்கிற கட்சியாச்சே,

1. சங்கராச்சாரியாருக்கு வரவேற்பு வாசிக்க வேண்டுமா? ஜஸ்டிஸ் கட்சி செய்யும்.

2. வகுப்புவாரி உத்தியோகத்தை நிறுத்தவேண்டுமா? வேண்டிய முயற்சி இப்போதே கடந்துகொண்டிருக்கிறது.

3. பார்ப்பாருக்கு உத்தியோகம் வேண்டுமா? இரண்டு மந்திரி

தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க

பொதுவுடமை பரவப்பரவ நாகரீகம் வளரும்.
பொதுவுடமையின்றி நாம் வாழ முடியாது.
நாளேற நாளேற பொதுவுடமை
வாழ்வு மலர்ந்து வருகிறது.
(பர்னர்ட்ஷா)

தமிழ் மாகாண சமதர்ம மகாநாடு.

தோழர்கள் எஸ். ராமநாதன், ஈ. வெ. கிருஷ்ணசாமி தலைமை வகித்தார்கள்.

நிறைவேறிய தீர்மானங்கள்.

4—3—34ந் தேதி காலை 9-மணிக்கு கிருபாநிதி நாடக சாலையில் நடைபெற்றது. ஆயிரத்திற்கதிகமான பிரதிநிதிகள் விஜயமாயிருந்தார்கள். மகாநாட்டிற்குத் திரேகஅசௌகரியத்தால் தோழர் எம். சிங்காரவேலு அவர்கள் வரமுடியாமல்போனதால் தோழர் எஸ். ராமநாதன் அவர்கள் தலைமைவகித்தார். மாலை மகாநாட்டுக்கு தோழர் ஈ. வெ. கிருஷ்ணமாயி அவர்கள் தலைமை வகித்தார். தீர்மானங்கள் முடிந்தும் அக்கிராசன முடிவுரையுடன் மகாநாடு இனிதுமுடிந்தது.

தீர்மானங்கள்.

சமீபத்தில் ஈரோட்டில் கூடிய சுயமரியாதை தோழர்களின் கூட்டத்தில் முடிவுசெய்த சுயமரியாதை இயக்க லட்சியத்தையும், வேலைத் திட்டத்தையும் இம்மகாநாடு முழுமனதுடன் ஆதரிக்கிறது.

பிரேரேபித்தவர்:-
தோழர் சி. நடராஜன்
ஆமோதித்தவர்:-
தோழர் அ. பொன்னம்பலம்

2 தமிழ் நாட்டிலுள்ள சகலஜில்லாக்களிலும் சமதர்ம சங்கங்கள் திருவ வேண்டுமென்றும் சங்கத்துக்குஏராளமான அங்கத்தினர்களைச் சேர்த்து சமதர்ம இயக்கத்தைப்பரப்ப வேண்டுமென்றும் இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

பிரரேபித்தவர்:—
எல். நீலாவதி.
ஆமோதித்தவர்:—
என். பி. காளியப்பன்.

(3) சமதர்ம பிரசாரம் செய்யவும் சமதர்ம சங்கங்களை ஏற்படுத்தவும் தோழர்களான:- ஈ. வி. கிருஷ்ணசாமி, எம். சிங்காரவேலு, எல். நீலாவதி, ஆர். அன்னபூரணி, ப. ஜீவானந்தம், கே. வி. அழகர்சாமி, எ பொன்னம்பலம், ராம சுப்பிரமணியம், சி. நடராசன், எ. இராதினசபாபதி, எஸ். வி. லிங்கம் முதலியவர்களை இம்மகாநாடு கேட்டுக்கொள்வதது.

பிரரேபித்தவர்:—
எ. பொன்னம்பலனார்.
ஆமோதித்தவர்:—
எஸ். பி. கிருஷ்ணன்.

(4) சமதர்ம பத்திரிகைகளான 'சோஷலிஸ்ட்' 'பிரசண்டமாருதம்' 'தமிழன்' 'புரட்சி' முதலிய பத்திரிகைகளை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறது.

பிரரேபித்தவர்.—
ராமசுப்பிரமணியம்.
ஆமோதித்தவர்:—
எஸ். பி. கிருஷ்ணசாமி.

(5) ஈரோட்டில் "பகுத்தறிவு" என்ற தினசரியை ஆரம்பிக்க முன்வந்ததற்கு இம்மகாநாடு மகிழ்ச்சியுறுவதுடன் அதை எங்கும் பரப்ப சகலரும் தீவிர முயற்சி எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறது.

பிரேரேபித்தவர்:—
சுப்பிரமணியம்
ஆமோதித்தவர்:—
டி. பி. ராமசாமி

(6) சமதர்மத்தத்துவங்களை போதிக்கும், நாடகங்களையும், சினிமாகதைகளையும், தயார்செய்து பிரசாரம் செய்ய முயலக் கோருகிறது.

பிரரேபிப்பவர்:—
என் பி. காளியப்பன்
ஆமோதிப்பவர்:—
டேவிஸ் பி. எ.

சமதர்ம மாகாண சங்கத்துக்கு தலைவர்:—
எம். சிங்காரவேலு
காரியதரிசி:—
எம். தர்மலிங்கம்
பொக்கிஷதார்:—
எஸ். பி. கிருஷ்ணன்

இவர்களை நியமிப்பதுடன் அடியிற்கண்ட 30 பேர்களையும் நியமிக்கிறது.

தோழர்கள்,

சி. நடராஜன், கே வி. அழகர்சாமி, வி. பார்த்தசாரதி, நாஸ்திக குப்புசாமி, பி. வி. விஜய கஸ்தூரி, ஆர். கிஸன், சித்தையன், ராமசாமி, ப. ஜீவானந்தம், அ. ராகவன், கோவிந்தசாமி, நீலாவதி, அ. பொன்னம்பலம், எஸ்.வி.லிங்கம், டி. எஸ். மணி, எஸ். ஜி. சொக்கலிங்கம், எ. வி. டாதாசாமி, டி ஆர். குப்புசாமி, லக்காஸ், டி. கிருஷ்ணசாமி, டி. எஸ். சுப்பிரமணியம், ஆர். டி. அய்யாகண்ணு, எகாம்பரம், கே. கே. நீலமேகம், எ. சுப்பையா, எம். வைகுண்டம்.

பிரரேபிப்பவர்—டி. மணி.
ஆமோதிப்பவர்—எஸ். ஜி. சொக்கலிங்கம்.

"மோட்சமில்லை.
நரகமில்லை.
மறுபிறப்பும் இல்லை.

டாக்டர் ராமன் கருத்து.

டாக்டர் சி. வி. இராமன் சென்ற 18-ந் தேதி இரவி மங்களூர் இராமகிருஷ்ண ஆசிரமத்தில் "மோட்சம் நரகம், மறுபிறப்பு" உண்டென்ற நம்பிக்கையைக் குறிப்பிட்டு பின் வருமாறு கூறுகிறார்:—

"மோசட்சம்என்பதும் நரகம் என்பதும் கிடையாது. மறுபிறப்பும் இல்லை. அழியாத ஆத்மா என்பதும் இல்லை. மனிதன் பிறக்கிறான் உயிரோடு வாழ்கிறான். பிறகு செத்துப்போகிறான். இதுதான் உண்மையேயன்றி வேறில்லை. ஆகையால் மனிதர் ஒழுங்காக நடந்துகொள்ள வேண்டும். மறுபிறப்பு உண்டு என்ற நம்பிக்கையே சன்மார்க்க வாழ்க்கைக்கு இடையூறாக இருக்கிறது. இந்தப்பிறப்புத்தான், இப்போது, வாழ்கிற வாழ்வுதான் முக்கியமானது என்று ஜனங்கள் நம்புவார்களானால், அவர்கள் பகுத்தறிவுடன் நடந்து கொள்ளுவார்கள்.

தூத்துக்குடி சுயமரியாதைச்சங்கம்.

சுயமரியாதைச்சங்கத்தின் பொதுக்கூட்டம் 4-3-34 இரவு 7மணிக்கு தூத்துக்குடி நாகம்மாள் சமதர்ம வாசக சாலையில் சங்கத்தலைவர் தோழர் என். எம். மிராண்ட அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சமதர்மம் என்பதுபற்றி திருமங்கலம் தோழர் மணிமாறன், தோழர் எம். வைகுண்டம் ஆகியவர்கள் மிகவும் விரிவாகப்பேசியபின் கீழ்கண்ட தீர்மானங்கள் வைகுண்டம் அவர்களால் கொண்டு வரப்பட்டு தோழர் கூ. கா. ஆ. பெரியசாமி அவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஏக மனதாய் நிறைவேறியது.

தீர்மானங்கள்.

1. இப்போதிருக்கும் கல்வி முறை ஏழைமக்களுக்கு போதிய பலனளிக்க வில்லை யென்றும், வரப்போகும் சீர்திருத்தத்தில் எச்சரிக்கையாயிருந்து சட்ட சபைக்கு பிரதிநிதிகளை தெரிந்தெடுத்து அனுப்ப வேண்டு மென்றும் விளக்கி எழுதிய கட்டுரைக்காக சிறை தண்டனை அனுபவித்து வரும் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களை இக் கூட்டம் பாராட்டுகிறது.

2. காலஞ்சென்ற தோழர்கள் ஓ. சி. சீனிவாசன், அ மாணிக்கம், எஸ். நரசிம்மன் எம். ஏ., இவர்களின் மரணத்திற்குத் தங்கள் துக்கத்தை தெரிவித்துக் கொள்கிறது.

3. பிகார் பூகம்ப கஷ்ட நிவாரணநிதிக்கு நமது சங்கத்திலிருந்து ரூ. 51 அனுப்புதென்று தீர்மானிக்கப்பட்டது. தலைவர் முடிவுரைக்குப்பின்வந்தஞ்சோசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது. என காரிய தரிசி எழுதுகிறார்.

மேதினம்

1—5—34 செவ்வாயன்று மேதினமாகும். உலகதொழிலாளர் தினத்தை எங்கும் சிறப்பாக கொண்டாடுங்கள்.

ரூஸ்வெல்ட்.

உஷார்! உஷார்!!

சென்னையில்
சமீபத்தில் தமிழன்பர் மகாநாட்டைக்கூட்டி
பார்ப்பனீயத்தை வளர்க்கச் சிலர் முயன்றார்கள்.

இம்மாதக்கடைசியில்
திருநெல்வேலியில் தமிழர் மகாநாட்டைக்
கூட்டி சிலர் வேளாளச்சைவத்தை
வளர்க்க முயன்று வருகிறார்கள்.

தமிழர்களே! உங்கள் பெயரால்
சைவவேளாளர்கள் செய்துவரும்
சூழ்ச்சிக்கு இடமளிக்கப்
போகின்றீர்களா?

சேலத்தில் பொதுக்கூட்டம்.

தோழர் ப. ஜீவானந்தம் பிரசங்கம்.

சேலம் செவ்வாய்ப்பேட்டையில் சமதர்மசங்கம் ஒன்று அமைக்க, எழுத்தக்கார த்தெருவில் சமதர்ம தேகாப்பியாச சாலைக்கும், மீனாட்சி அம்மன் கோவிலுக்கு எதிரில் உள்ள பெரிய மைதானத்தில் ஆரம்பக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. கூட்டத்திற்கு சுயமரியாதைச் சங்கம், அரிசிப்பாளையம் சமதர்ம வாலிபர் சங்கம் (Athile-tic Associaton) (உடற்பயிற்சி சங்கம்) இன்னும் பல சங்கங்களிலிருந்தும் ஏராளமான அங்கத்தினர்களும், நகரத்தின் முக்கியமான பல பிரமுகர்களும் வியாபாரிகளும் மாணவர்களும் வாலிபர்களும்திரளாக விஜயம் செய்திருந்தார்கள். கூட்டத்திற்கு எதிர்பாராத நூற்றுக்கணக்கான பெண்கள் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது. மாலை 5-30 மணிக்கு தோழர் வருதராஜுலு அவர்களால் சமதர்மக் கீதங்கள் பாடி முடிந்ததும், தோழர் எஸ். வி. லிங்கம் அவர்கள் சமதர்மத்தைப் பற்றி விளக்கிப்பேசிய தோடு சுயமரியாதை இயக்கத்தைப் பற்றி சிலர் தப்பாக நினைத்திருப்பது தவறு என்றும், சுயமரியாதை இயக்கம் மனித முன்னேற்றத்தின் அவசியத்தையே கருத்தாகக்கொண்டதென்றும், சுயமரியாதை இயக்கம், என் மனித வர்க்கத்தை அடிமையாக்கிய மூடப்பழக்க வழக்கங்களையும், மனிதர்களைப் பலவாறாக பிரித்து உயர்வு தாழ்வுகளைக் கற்பிக்கும் ஜாதி மதக் கட்டுபாடுகளையும் விபசார விடுதிகளாக இருக்கும்தேவையற்ற கோவில்களையும், மனிதன் உழைப்பின் பெரும் பலனை அனுபவித்து மனித வர்க்கத்தைப் பற்றியே கவலையற்று இருக்கும் கடவுள்களையும் இன்றைய வாழ்க்கையில் உள்ள கொடிய பழக்க வழக்கங்களையும் தாக்கி பேசினால் சிலர் பொதுமகளிடையே கொள்கையைத் திரித்துக் கூறுவதையாரும் நம்பக் கூடாதென்றும் கூறிவிட்டு சமதர்ம சங்கம் ஒன்று அமைக்க மிக உணர்ச்சியுடனும் உரச்சாகத்துடனும் வேலை செய்த தோழர்கள் சிவசாமி, நாராயணன், நடேசன், ராமலிங்கம், துரைசாமி, பாலு, இன்னும் மற்ற வாலிபர்களையும் போற்றி, விரைவில் சங்கத்திற்காக ஒரு கட்டிடம் அமைத்து வாசகசாலையும் ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லி முடித்தார். பிறகு தோழர் ஜீவானந்தம் பெருத்தகரகோஷத்தினிடையே யெழுந்து பேசியதின் சுருக்கம்.

தாய்மார்களே! தோழர்களே!!

சில தினங்களாக சேலத்தில் சமதர்ம முரசொலி எங்கும் கேட்கப்படுகிறது. நகரத்தில் பெரும் பரபரப்பு அடைந்துள்ளது. சென்ற மூன்று நாட்களின் சமதர்ம முழக்கத்தால் இன்று இம்மாபெரும் கூட்டம கூடியுள்ளது. தோழர்களே! எனக்குசரியென்று பட்டதை, நியாயம் என்று உணர்ந்ததை, தேவை என்று நினைத்ததை, தயவு தாக்ஷண்யமின்றி, அச்சமற்று என்றும் சொல்வேன். இன்றும் சொல்லுகிறேன். முதலாளித்துவம் கொண்ட ஏகாதிபத்ய அரசாங்கங்களும், மக்களின் ரத்தத்தை உறிஞ்சும், கடவுள்களும், அவைகளில் தூதர்களாகிய மதக்கிறுக்கர்களும் ஒன்று சேர்ந்து எதிர்ப்பினும் துப்பாக்கு முனையிலும் தூக்கு மேடையிலும் எனக்குச் சரியென்று பட்டதைச் சொல்லித்தான் தீருவேன். மனித வாழ்க்கை இருக்க இருக்கமிருகத்தினும் கேடாக போய்க்கொண்டு இருக்கிறது. சிறிது காலத்திற்குள் மனிதப் பூண்டே அழிந்து ஒழிந்துபோகும் போல் இருக்கிறது. இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் மானத்தோடு, மரியாதையோடு, சுதந்திரத்தோடு, பகுத்தறிவோடு மனிதன் இருக்க வேண்டிய அவசியத்தைப் பற்றிப் பேசுவது குற்றமாகுமா தோழர்களே! யோசித்துப் பாருங்கள். நான் சொல்லுவதை அப்படியே யாரும் நம்பவேண்டாம் நான் சொல்வதை எல்லோரும் ஒத்துக்கொண்டு இருந்தால் இன்று தொழிலாளியை இரக்கமற்று மிதித்து உயிர் வாங்கும் முதலாளித்தன்மையும், உலக சுகபோகங்களை அனுபவிக்கும் பணக்காரத்தன்மையும், மக்களை மடையர்களாக்கி எய்த்துப் பிழைக்கும் வைதீக மதத் தன்மையும், மாண்டு மண்ணோடுமண்ணாகிப்போய் இருக்கும். ஆனால் இதுவரையில் அவ்வாறு ஆகவில்லை.

தோழர்களே! நமக்கு இன்று வேண்டியது சங்கம். கட்டுப்பாடான வேலை நமது நாடு விடுதலை அடைய சங்கங்கள் மிக, மிக அவசியம். சங்கங்களால் தான் உலகத்தில் உள்ள எல்லா நாடுகளும் முன்னேறின. இன்று உலகத்தையே பிரமிக்க செய்யும் ஓர் நாடு (ருஷ்யா) பல சங்கங்களால் தான் ஆளப்பட்டு வருகிறது. நேற்று நடந்த இந்திய தேசீயப் போராட்டத்திற்குக் காரணம் காங்கிரஸ் சங்கத்தின் தீவிர முயற்சியே. சங்கமென்பது கட்டிடம் அல்ல. மக்களின் கூடுறவுதான். ஒரு கொள்கைக்காக பலர் உழைப்பதும் சங்கமே, ஒரு கொள்கைக்காக பேசுவதும் சங்கமேயே. மனித வர்க்கம் கூட்டுறவால் தான் வாழமுடியுமாதலால் உலகம் உள்ள வரையிலும் சங்கங்கள் இருந்தே தீரும். மனித வர்க்கத்திற்குக் கீழ்பட்டதாகிய பக்ஷி, மிருகம் முதலிய பிராணிகளில் பல கூட்டமாகத்தான் வாழுகின்றன.

எறும்பு கூட்டம் கூட்டமாக வாழ்கின்றது. தன் இனத்தைக் காப்பாற்றிக்கொள்ளவும், உயிரோடு இருக்கவும் எல்லாம் ஒன்று சேர்ந்து இரை தேடி, எல்லாம் சேர்ந்து உண்டு வாழ்கின்றன. ஓநாய்களும் கூட்டம் கூட்டமாகவே வாழ்கின்றன. காக்கைகளும் அதேமாதிரிதான் ஒரு காக்கை இறந்துபட்டால் எல்லாமாகச் சேர்ந்து விசனப்படுவதும், இரையைக்கண்டால் தன் தோழர்களை அன்போடு அழைத்து தானேத்தும் ஆசையோடு உண்பதையும் பார்க்கிறோம். கூட்டுறவின் அவசியத்தையும்,பொதுஉடமையையும் பக்ஷிகள் உணர்ந்துள்ளது! ஆனால் கலிமை பொருந்திய தும், மற்றைய பிராணிகளையடித்திரிந்து வேட்டையாடி சாது ஜந்துக்களின் மேல் பாய்ந்து கிழித்து ரத்தத்தை உறிஞ்சும் மதம் கொண்ட சிங்கம், புலி இவைகள் கூட்டமாக இருப்பதில்லை. இருக்க அவசியமும் இல்லை. ஆகவே வாழ்க்கையில் அடிமைப்படுத்தப்பட்டு, கொடுமைப்படுத்தப்பட்டு, ஏமாற்றப்பட்டு, எவ்விதத்திற்கும் தோழர்களுக்கு கூட்டுறவு சங்கம், ஒற்றுமை வேண்டாமா? என்று கேட்கிறேன்.

மனித வர்க்கம் சேர்ந்து வாழ்ந்தால் தான் வாழ்க்கையை நடத்த முடியும். மனிதன் கூடி வாழும் பிராணி(Social being)னாம். இருந்து வசிக்கிறோம். வியாபாரத் தோரணை மக்களை ஒன்றுகக் கலக்கச் செய்கிறது. மற்றப் பொதுக் காரியங்கள் எல்லாம் கூட்ட ஒற்றுமையை உண்டாக்கி கூட்டுறவான செய்கையை உண்டாக்கிறது. ஆகவே அவசியமும் அமைப்பும் மனித ஒற்றுமையை உண்டாக்குகிறது.சங்கமென்பது சேர்ந்திருக்கிற கூட்டமேயாகும். இன்று ஆரம்பிக்கப்பட்ட சமதர்ம சங்கமும்மிக அவசியமானது. சேலத்தில் சமதர்ம வாலிபர் சங்கம் ஒன்றும் இருக்கிறது. என்னுடைய ஆசை, ஒவ்வொரு ஜில்லாவிலும் நூற்றுக்கணக்கான சங்கங்கள் தோன்ற வெண்டுமென்பதே.வல்லரசுகள் எல்லோரும் நடுக்கமுற்று விழித்து நோக்கும் சமதர்ம ராஷ்யாவாட்டில் 50000 சமதர்ம சங்கங்களும், லக்ஷக்கணக்கான இலவச வாசகசாலைகளும் ஆயிரக்கணக்கான பொது(Library) புஸ்தக நிலையங்களும் இருக்கின்றன. நமது மக்கள் வீர உணர்ச்சியோடு, சமதர்மக் கிளர்ச்சி செய்து, மடங்கள் கோவில்கள் இன்னும் மற்ற பொது இடங்களிலும்; ஒவ்வொரு தெருவிலும் சமதர்மச் சங்கங்களை அமைத்தால் நம் மக்கள், அனைவரும் சமதர்ம தத்துவத்தை அறிந்து கொண்டால், விரைவில் இந்தியா, சமதர்ம இந்தியாவாகத்திகழும்.

தோழர்களே, சமதர்மம் என்ற உடனே சீக்கிரமாக அவசரப்பட்டு எவ்வித தத்துப்பிதமான முடிவுக்கும் வரவேண்டாம். அன்னிய ஆட்சியின் கீழ் முதலாளி தத்துவம் கொண்ட அரசாங்கத்தின் கீழ் பட்டினியும, வேலையில்லாத் திண்டாட்டமும் தாண்டவமாடும் பொறுப்பாட்சியின் கீழ், ஒரு கூட்டத்தின் நலனுப்பற்றியே கவலைப்படும் சுயராஜ்யத்தின் கீழ், மக்கள் என்றும் வாழ வேண்டுமென்று சமதர்மம் சொன்னால் அச்சமதர்மத்தை குழிவெட்டிப் புதைத்திடுவோம். மனிதவர்க்கத்தை பழைய காட்டு மிராண்டித்தனத்திற்கு இழுத்து பழைய கொடுமையான கட்டுப்பாடுகளைக் காக்கத்தான் சமதர்மம் என்றால், அதையும்தவிடுபொடியாக்கிடுவோம். ஒரு தனிப்பட்டக் கூட்டத்தை எதிர்த்து அவர்களுக்கு பாதகம் விளைப்பதுதான் சமதர்மம் என்றால் அதை இங்காட்டில் அண்டாமல் துரத்திவிடுவோம். சமதர்மம் என்பது மனித முயற்சியால் முடியாதென்றும், அது பகுத்தறிவுக்கு முரணுகவும் இருந்தால் அதைப்பற்றியும் கவலைப்படவேண்டாம். ஆனால் உலகத்தில், முதலாளி, தொழிலாளி, பணக்காரன், ஏழை, அனுபவன், அவனப்படுவோன். என்ற பேதமற்று உலக மக்கள் அனைவரின் அபிவிர்த்தியை துரிதப்படுத்தவும், உலகத்தில் உள்ள எல்லோரும், கவலையற்று, பரிப்பணியற்று, வெறுப்பற்று, ஒற்றுமையோடு, பகுத்தறிவோடு சுதந்தரத்தோடு, என்றும் இன்பத்தோடு இருக்க வேண்டுமென்பது சமதர்மத்தின் லட்சியம் என்றால் அதை அறிவுள்ள மனிதன் ஆக்ஷேபிக்க முடியுமா?

உலகத்தில் உள்ள அனைவரும் உழைக்க வேண்டும். உழைப்பின் பலனால் எற்பட்ட சமூகத்தின் பொது உபயோகத்திற்குரிய சகல பொருள்களையும் பொதுடைமையாக்க வேண்டும். உழைத்தவர்கள் அனைவரும் உழைப்பின் பலனை அனுபவிக்க வேண்டும் உழைப்பவனுக்குத்தான் எல்லா அதிகாரமும் இருக்க வேண்டுமென்று சமதர்மம் சொல்லுகிறது

தோழர்களே! மனித வாழ்க்கைக்கு பல பொருள்கள் அவசியமானவை. ஆனால் எல்லா சௌகரியத்தையும் ஒரே மனிதன் செய்ய முடியாது. மனிதன் குடிஇருப்பத்திற்காக, சீதோஷ்ணத்திற்குத்தக்கவாறுமண்ணினால் வீடுகளும், மாடமாளிகைகளும், கொடிய விஷஜந்துக்கள் பலவாசம் செய்யும் பூமியில் மூங்கிலினால், மரத்தி

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.

டாக்டர் எம். கிருஷ்ணசாமி.

திருப்பத்தூர் தாலூகா
சுயமரியாதை மகாநாடு.

தலைவர், டாக்டர்
எம். கிருஷ்ணசாமி தலைமை உரை.

11-3-34ல் உடைபெற்ற இராம நதபுரம்ஜில்லா திருப்பத்தூர்தாலூகா சுயமரியாதை மகாநாட்டின் தலைவர் டாக்டர் எம். கிருஷ்ணசாமி அவர்களின்தலைமைப்பிரசங்கம்வருமாறு:—

தோழர்களே!

நமது சுயமரியாதை இயக்க வளர்ச்சிக்கு முக்கியஸ்தர்களில் முதல்வரும், தூற்றுக்கணக்கான புத்தம்புது இளைஞர் களைத்தட்டி எழுப்பி நம்முடன் சேர்த்த பெரும் வீரருமான கோழூர் இராமச்சந்திரன் அவர்கள் நம்முடன் இன்றில்லாதது பெரும் நஷ்டமாகும். அந்நஷ்டம் ஈடு செய்யமுடியாததாகும். அவ்வீடு செய்யமுடியாத நஷ்டத்தை பூர்த்திசெய்ய இவ்விதம் அடிக்கடி இப்பகுதியில் மகாநாடுகள் நடைபெற்றுவருவது அவசியம்.

பொது உடமை.

சிறிதுகாலத்திற்குமுன் ஜனநாயக ஆட்சியின் மகத்துவமும், சுதந்திர தாகமும் வீரமுள்ள வாலிபர்களுக்கு பெரும் லக்ஷ்யமாய் இருந்து அவர்களை இயக்கிவந்தது. ஆனால் இக்காளிலோ பொதுவுடமை என்னும் மாபெரும் தத்துவம் அவ்வாலிபர்களை விழுங்க ஆரம்பித்திருக்கிறது. மனிதன் தன் அறிவினால், முயற்சியினால், ஆராய்ச்சியினால் கண்டுபிடித்த அறிய பெரிய நூதன விஷயங்களில் இப் பொதுவுடமைத் தத்துவம் தலை சிறந்தது என்பது அறிஞர்களின் துணிபு. இதைத்தவிர மற்றெந்தத் தத்துவமும், மானிடர் நிரந்தரமாய், சுகஜீவிகளாய் இருக்க மார்க்கம் காட்டியதில்லை என்பது எமது தீவிரமான நம்பிக்கை. பொதுவுடமையால் நன்மையடைப்வர் கஷ்டப்படும் ஏழைமக்கள் மட்டுமல்ல, துன்புறும் தொழிலாளிகள் மட்டுமல்ல, வருந்திக் கொண்டிருக்கும் விவசாயிகள் மட்டுமல்ல, மற்றும் பணத்தைக் குவித்துக்கொண்டு டாம்பீகமான கஷ்டம் நிறைந்த வாழ்க்கை நடத்துபவரும், முதலாளி என்று இரவு பகலாய்ப்பணம் திரட்டுவதில் சஞ்சலித்திருப்போரும், பூமி காணிகளை வைத்துக்கொண்டு பயிரிட வகையறியாத அன்யோன்ய சமத்துவ வாழ்க்கையின் நுகர்ச்சி யறியாதவரும் நன்மையடைவர். வெள்ளி உதயமாகுமுன் எழுந்து வெய்யிலிலும் மழையிலும் அரும்பாடுபட்டு, கூழ்என்று சொல்லும் உப்பிட்ட கண்ணீரைக் குடித்துக் கொண்டு அழுக்குநிறைந்த கந்தலை உடுத்திக்கொண்டு கோழிக் கூட்டிலும், சிறியகுடிசையில் வசிப்போரும்கூட இன்று களித்திருப்பதை, தங்கள் நிலையில் மனமொப்பியிருப்பதை, கஷ்டமனுபவிப்பதை உணராமலிருப்பதை, நாளைக்கு என்ன செய்வோம் என்று கவலைபற்று நண்பரின் கழுத்தில் காலைவைத்துக்கொண்டு விரோதிகளிடம் சரண் புகுந்திருப்பதைக் காணலாம்.

குதூகலமாக வாழ்ந்தாலும் வாழாவிட்டாலும் இவ்வேழை மக்கள் மனிதன் என்ற பெயருக்குத்தக்கவாழ்வு நடத்துகிறார்களா? மனிதவாழ்விற்கும், விலங்கு வாழ்விற்கும் வித்தியாசம் இல்லையா? பரிணமம் அல்லது முன்னேற்றம் (Evolution) என்பதை நுகர்ந்தறிந்தாண்டா? நாகரீகம் என்பதை எம்மட்டில் அடைந்தனர்? விவேகி, வன்மையாளன் என்பதைச்சற்றேனும் உணர்த்தினார்களா? இவற்றையெல்லாம் ஆழ்ந்து கவனித்தல் அவசியம். பணக்காரரோ மமதை என்ற பயித்தியத்தின் காரணமாய், ஒருவரோடொருவர் குலாவி இன்புற்று வாழ்வதைவிட்டு எத்தனைகோடி மக்களை ஏழைகள் எனறு பிரித்து இழந்தனர். இப்பணக்கார வர்க்கம் தங்களுக்குள்ளேயே வலுத்தவன் இளைத்தவன் என்ற போட்டாபோட்டியால் வியாகூலம் நிறைந்திருக்கின்றது. இருக்கும் மாளிகை சிறியதென்றுநினைக்கின்றனர். லக்ஷக்கணக்காய் உள்ள சொத்து குறைவென்று எண்ணுகின்றனர். வெள்ளித்தட்டில் சாப்பிடுவதிலும், தங்கத்தட்டில் சாப்பிடுவதும் மேலென்று நினைக்கின்றனர். இவர்கள் தாங்கள் இன்புற அவசியமென்று நினைக்கும் பொருள்கள் எல்லாம் இவர்களைச் சதாகவலையில் ஆழ்த்தி ஏங்கவைக்கின்றன. சொத்துரிமை என்ற பெருநோய் மற்றும் என்ன செய்துள்ளது பாருங்கள். உலகில் ஒருவரை ஒருவர் கழுத்தை வெட்டியது எவ்வளவு இச்சொத்துரிமையின் காரணமாய்? இதனால் துப்பாக்கியாலும், பீரங்கியாலும் விஷப்புகையாலும் சொல்லப்பட்டவர் எத்தனைபேர்? மற்றும் இச் சொத்துரிமை எத்தனை வாலிபர்களைத் தூக்குமேடைக்கு ஏற்றியிருக்கிறது. இன்னும் எத்தனை வாலிபர்களின் கழுத்திற்கு சுருக்குத்தயார் செய்துகொண்டு இருக்கிறது பாருங்கள்!

ஏழ்மையின் கொடுமையை சொல்லவேண்டுமா? அது எவரேனும் அறியாத புதுமையான விஷயமா? ஒவ்வொருவரும் இரவு பகலாய்ப்பணம் திரட்டுவதற்கே கஷ்டப்பட்டு வாழ்கிறோமென்றால் ஏழ்மையை ஏன் விரட்டித் துரத்துகிறோம் என்பது தெற்றென விளங்கும். ஆனால் நாம் ஒரு பைசா சம்பாதித்தோமானால் மற்றொருவர் ஒருபைசா இழந்திருக்கவேண்டும். ஆகவே ஒவ்வொருவரும் இவ்வேழ்மையைத் தம்மிடமிருந்து துரத்தி பிறரை ஏழ்மைப்படுத்துகின்றனர். இதை விட்டு ஓர் மேலான நோக்கம், மனித சுபாவத்தின் ஒப்பற்ற மேன்மையைக் காண்பிக்கும் நோக்கம், என்னவென்றால் இவ்வேழ்மை என்பது இவ்வுலகில் மனித சமுதாயத்தில் எந்த இடத்திலும் இல்லாமல் செய்வதே. அதுவே பொதுவுடமை என்னும் மகத்தான நோக்கம். இதற்கு ஆராய்ச்சி எதற்கு? உதாரணம் எதற்கு? நிரூபிக்க வேண்டுவதெதற்கு? கைப்புண்ணிற்கு கண்ணாடி வேண்டுமா? ரஷ்யாவைப்பற்றி அறிந்த பின்தானா நமதுகண் இற க்கப்படவேண்டும். நாம் அவ்வளவு அறிவுகுன்றியவர்களா?

பொதுவுடமையைப்பற்றி கூறப்படும் குறைகள் பெரும்பாலும் சற்பனைக கதைகள். ஒரிரண்டு உண்மையானால் அவைகளைக்களைந் தெறிவது சாத்தியம். இல்லையானால் அவற்றால் பெரும்பாதகமாதுமில்லை. தனிச்சுதந்திரம் குறையுமென்று குறை சொல்லப்படுகிறது. மனிதன் சுயநலத்தை மறந்து சமூகநன்மையைச் சிரமேற்கொண்டு வாழுங்கால் சுதந்திரம் குறையுமாயின் எந்த சமுதாயத்திட்டத்தில் சுதந்திரம் குறையவில்லை என்று கேட்கிறோம். பசித்தவன் குவித்து வைக்கப்பட்டிருக்கும் ஆகாரத்தைப் புசிக்க சுதந்திரம் இலலை. ஆனால் பசியில்லாதவன் அவசியத்திற்கு மேல் குவித்து வைத்துக்கொள்ள சுதந்திரமுண்டாம். சுதந்திரத்தின் விபரீதப் போக்குத்தான் என்னே!

லாபமில்லையென்றால் மனிதர் அரும்பாடுபடாமல் சோம்பேறிகளாய்ப் போய்விடுவார்களாம். ஹிமயமலை யுச்சியைப்பார்க்கச் சென்றவர்கள் எந்த லாபத்தைக் கருதிச்சென்றனர். டார்பிடோ என்ற வெடிகுண்டை வழி செலுத்துகையில் அக்குண்டு வெடிக்கையில் தான் சின்னப்பட்டு இறப்பது நிண்ணம் என்று தெரிந்தும் அவ்வாறு செலுத்தத் துணிந்து உறுதி கூறும் ஜப்பானிய வாலிபர்கள் எந்த லாபத்தைக்கருதினர்? பொது நன்மையின் பொருட்டுத் தூக்கு மேடையேறி தூக்கில் கழுத்தைக் கொடுக்கும் வாலிபர் எந்த லாபத்தைக் கருதினர்?

பொது உடமை என்றால் எல்லோரும் சரிசம பாகம் போட்டுக் கொள்வது என்ற நோக்கம் மாத்திரம் அல்ல. உழைக்காத, உழைக்க மனமில்லாத, சோம்பேறியை உழைக்க வைத்து உழைப்பாளிக்கு சுகத்தைக் கொடுத்து இவ்வுலகை பெரும் பணக்காரக் குடும்ப மாக்குவது என்ற நோக்கங்கள் கொண்டதே பொதுவுடமை. இன்றையதினம் உலகத்தை எடுத்துக்கொண்டால் இது ஒரு ஏழை குடும்பமாகும். பயன் தரும் அனேகபொருள்கள் வீணில் இருக்கின்றன. உழைக்க வல்லமையுள்ளோர்பலர் வீணிற்குழைக்கின்றனர். பணம் திரட்டுமவேலையில் அனேக விரயங்கள் உள்ளன. போட்டா போட்டியின் நிமித்தம், டாம்பீகதின் நிமித்தம், ஒருவருக் கொருவர் ஏற்படும் தகராறுகளின் நிமித்தம், கூட்டு வாழ்க்கை குன்றியதின் நிமித்தம், எவ்வளவு பொருளும் உழைப்பும் சேதமாக்கப் படுகிறது என்று பாருங்கள்! வியாபா

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.

சந்தேகத்தெளிவு.

The Cult of Nudism in Modern Life.

தற்கால வாழ்க்கையில் நிர்வாணக்கொள்கை.

(தோழர். ம. சிங்காரவேலு பி. ஏ. பி. எல்.)

இந்த நிர்வாணக் கொள்கை உலகில் சிற்சில இடங்களில் அனுஷ்டிக்கப்பட்டு வருவது நமக்கு ஆச்சரியமாகத் தோன்றவில்லை. புத்தர் காலத்திற்கு முந்திய வேதயாகங்களில் [Vedic Age] சிலர் நிர்வாணமாக நின்று தவம் புரிந்துவந்ததாகக் காணப்படுகிறது. புத்தர் காலத்திலும் கங்கை, யமுனை நதிக்கரைகளிலும், நெருங்கிய காடு குகைகளிலும் நிர்வாண இருடிகள் ரிஷிகள் தவஞ் செய்து வந்ததாகவும் படிக்கின்றோம். கிருஸ்துக்குப் பின் யுகங்களிலும் [Christian era] கத்தோலிகப் பாதிரிகள் நிர்வாணமாகத் தங்கள் அறைகளில் [Cells] உத்திராட்ச ஜபம் செய்துவந்ததாகவும் வரைந்துளது. நமது காலத்திலும் சில சமணச்சந்நியாசிகள் [Jains] நிர்வாணமாக இருந்துவருவதாகக் கேள்விப்படுகின்றோம். புத்தர் காலத்தில் [600 B. C.] இரண்டு விதச் சமண சந்நியாசிகள் இருந்துவந்தனர். அவர்கள் திகம்பரர்களென்றும [Digambaras] சுவேதாம்பராஸ் [Swetambaras] என்று வழங்கிவந்தனர். இவ்விரண்டு சமணக் கோஷ்டிகளில் முதல்வகுப்பார் நிர்வாணக் கொள்கையைக் கையாண்டுவந்தவர்கள். மகமதிய காலத்தில் நமது இந்தியநாட்டில் நிர்வாண சந்நியாசிகள்[Naked Asceeties] என்ற ஓர் கூட்டத்தார் இருந்துவந்ததாகவும் சரித்திரக்காரர்கள் தெரிவிக்கின்றார்கள். நமது இந்திய தேசத்தில் இன்றைக்கும் அங்கும் இங்கும் நிர்வாண சந்நியாசிகளைக் காணலாம். சென்னையில் சில இடங்களில் நிர்வாணமாக இருந்த சில சந்நியாசிகளை நாமும் பார்த்துமிருக்கின்றோம்;

நிர்வாணத்தை (Nakedness) நமது நாட்டில் தெய்வீகமாகக் கருதுகின்றார்கள். கான்பூர் சதியாலோசனைக் கேஸ் விஷயமாக அங்கு நாம் போனபோது (1924) கான்பூர் கங்கைக் கரையில் ஓர் அழகிய புருஷன் நிர்வாணமாக உட்கார்ந்திருக்க அவனை ஆண்களும், பெண்களும் தொழுவதைக் கண்டுமிருக்கின்றோம். உற்சவகாலங்களில் கௌபீனத்தை மாத்திரம் அணிந்துகொண்டு பிச்சை எடுத்துண்ணும் வேஷக்காரர்களைப் பார்ப்பது சாதாரணக் காட்சி.

இந்த நிர்வாணக் கொள்கை நமது நாட்டின் பண்டைக் கால மதக் கொள்கையாகும். அகோரமான (Bizzare) ஆபாசமுள்ள(Absurd) விபரீதமான (Strange) பழக்கவழக்கங்கள் நமது நாட்டில் சாதாரண மதக் கொள்கைகளாகப் பாவிக்கப்படுகின்றன. இத்தியாதி வாழ்க்கை தெய்வத்தன்மை (Sacredness) பொருந்தியதாகவும்,சாமான்ய மக்கள் கருதுகின்றார்கள். தாற்றம், அசங்கிதம் Indecency) நிர்வாணம் அசுத்தம் முதலிய அனுச்சாரப் பழக்கவொழுக்கங்கள், அதனை அனுசரிக்கும் மனிதனை தெய்வப் புருஷனாக (Saint) நமது நாட்டில் மதிக்கச் செய்கின்றன. திம்மிசாமி, சட்டிப் பரதேசி, மஸ்தான் சாகிபு இவர்கள் அழுக்கடைந்த கந்தைகளை அணிந்து தாற்றமுற்ற புழுப் பூத்த சாதத்தை உண்டு எச்சல் சுருட்டுகளைப் பிடித்து அருவறுக்கத் தக்க காரியங்களைச் செய்துவந்தனர். இவர்களை நமது மக்கள் ஆயிரக்கணக்காகத் தொழுதுவந்தனர். ஒரு நிர்வாண சந்நியாசியின் கால் பெருவிரலுக்குத் தினம் அபிஷேகம் செய்துவந்தனர். நமது நாட்டுமக்கள் எந்த அகோர அசங்கிதமான வாழ்க்கையில்தான் கட்டுப்படமாட்டார்கள்!!

நமது நாட்டுப் பழக்கம் இவ்வாறு இருக்கஐரோப்பா,அமெரிக்கா நாடுகளில் சில அகோரப் பழக்க வழக்கங்கல் வழங்கிவருவது ஆச்சரியமல்ல. அவர்களிடமும் அசங்கிதப் பழக்கங்கள் பல இருந்துவருகின்றன. சில பொதுவான குளங்களில் (Public Tanks) ஏரிகளில் ஆறுகளில் ஆணும் பெண்ணும் நிர்வாணமாகக் குளிக்கின்றார்கள். இதனை வர்ணிக்கும் சில கோஷ்டியார் அந்த நாடுகளிலிருந்துவருகின்றனர். ஆனல் நமது நாட்டில் அகோரப் பழக்கங்கள் மதத்தின்பேரால் அனுஷ்டிக்கப்படுகின்றது. அந் நாடுகளில் அகோரப் பழக்கங்கள் சுகாதாரத்தின் பெயரால் வழங்கப்பட்டுவருகிறது. இதுதான் அந் நாட்டு அசங்கிதங்களுக்கும், நம் நாட்டு அசங்கிதங்களுக்கு முள்ள வித்தியாசம்.

உலகில் மனிதர் தற்காலத்தில் அடைந்துள்ள வாழ்க்கையின்படி நிர்வாணம் அசங்கிதமென்றே கருதப்படுகின்றது. இதனைத் தூர்ப் பழக்க வழக்கத்தால் சில மூடமக்களால் அநுஷ்டித்துவருவதுமுண்டு. இவ்வித அசங்கிதங்கள் உலகில் சிலசில காலங்களில் கொரேச் சம்பவங்களாக மாறுகின்றன. ஒருகாலத்தில் மந்திரக்காரர்களை கண்டவிடத்திலெல்லாம் அடித்துக்கொன்றனர், இதனை Burning of witches) என்று சரித்திரங்களில் வழங்கும். மதப்பித்தத்தால் கோடானகோடி மாண்டனர். (Crusades) என்ற முகம்மதியர்களைத் தாக்கும் பித்தம் ஒருகாலத்தில் 500, 600 வருஷங்களாக ஐரோப்பியர்களை ஆட்டிவைத்தது கிருஸ்துவர்கள் ஐந்துமுடி சாட்டையால் அடித்துக் கொண்டனர். இவர்களை (Flaggellents) என்று வழங்கினர்கள். மத்தியகாலத்தில் (Middle Ages) உலக முழுவதையுமே (Dancing Mania) அதாவது நடனபித்தம் மக்களை பிடித்து ஆட்டியது. எங்குபார்த்தாலும் இந்த (Dancing Mania) கூத்தாடும் பித்தத்தால் ஆணும், பெண்ணும், குழந்தைகளும் நினைத்தபோதெல்லாம் ஆட ஆரம்பித்தார்கள். நமது தென்ஞட்டிலுள்ள ஒவ்வொரு கிராமங்களிலும் யாராகிலும் "தெய்வமாடினால்" இதனைக் கண்டோரெல்லாம் தெய்வமாட ஆரம்பிக்கின்றனர். அழ ஆரம்பித்தும் கூட இருக்கும் எல்லோரும் அழத் துவக்குகின்றார்கள். இதற்கு ஓர்விதப் பித்தமென்று வழங்குவர். (Kidnapping Mania) அதாவது ஆளைத் திருடிச் செல்லல் என்ற பித்தமொன்றுண்டு. இந்த பித்தம், தற்போது அமெரிக்காவில் அதிகமாயிருந்து வருகிறது. அனேக ஆயிரம் பேரை திருடிச் செல்கின்றார்கள் இதுவும் ஓர் பித்தமாகும்.(Suicidal mania) என்று பலரோ தற்கொலை புரியச் செய்யும் பித்தமொன்று சில காலங்களில் மக்களைப் பிடித்தாட்டுவதுண்டு. ஒருவன் தற்கொலை புரிவதைப் பார்த்து அல்லது கேட்டு அனேகர் தற்கொலைபுரிந்து கொள்கின்றார்கள். இத்தியாதி கொடுமையான பித்தங்கள் சிற்சில காலங்களில் மாத்தரை வருத்துவதுண்டு. இந்தப் பித்தம் ஒருவனைப் பிடித்தால் கண்டவர்கள் கேட்டவர்களுக்கெல்லாம் இந்தப் பித்தம் தோன்றுவது சகஜம். இதன் காரணத்தை மானவ நூலோர் (Suggestion) அதாவது உசுப்பு என்று அழைப்பார்கள். இவ்விதப் பித்தங்களைப் போலவே தற்கால நிர்வாணத் தோற்றமும் வொன்றெனக் கருதல்வேண்டும். உலகில் தற்போது அனேகமான மயக்கத் தோற்றங்கள் (Phenameno) உலாவுகின்றன- இதனை (Fads) அதாவது ஒருவன் இச்சைக்குவந்த கொள்கையென்று வழங்குவர். தற்போது பத்திரிகைகளில் நடமாடும் கர்ப்பத் தடையும் ஓர்வித Fad என்றே கருதப்படும். இது ஓர் (Bourgeois Fraud) அதாவது முதலாளிகளின் பித்தலாட்டமேனவுணர்க. இத்தப்பித்தைப்போலவே நிர்வாணப் பித்தும் ஒன்று.

நமது அபிப்பிராயம் இவ்வாறு நிற்க திருச்சி நிருபர் ஒருவர் "குடி அரசி"ன் இறுதி இதழின் இரண்டாரு வியாசத்தில் நிர்வாணக் கிளர்ச்சியைப்பற்றி எழுதியுள்ளதைக் கண்டு திடுக்கிட்டது போல் அதனைப்பற்றி நமது அபிப்பிராயத்தைக் குறிக்க வினயத்துடன் கேட்கின்றார். இந்த நிர்வாணக் கிளர்ச்சி நவநாகரீகத்தின் போக்கா? என்னும் வினவுகின்றார். சு. ம. சஞ்சிகையில் வந்த கட்டுரைகளால் பயந்தவரைப்போல் நமது காடு எல்லாவித இயக்கங்களுக்கும் உறைவிட்மா என்றும் கேட்கின்றார்.

29-10-33 'குடிஅரசி'ல்வந்துள்ள தற்கால வாழ்க்கையில்நிர்வாணம் என்ற நூலின் மதிப்புரை (Review) செய்தி அடங்கியிருக்கிறது. அதனைவாசித்தோம்.அந்த மதிப்புரையில்நிர்வாணக் கொள்கையை "குடிஅரசு" அனுசரித்து எழுதியதாக நமக்கு ஏற்படவில்லை. இளைஞர்களுக்கு ஓர் எச்சரிக்கையாக வரைந்துள்ளதாகத் தோன்றுகிறது. கடைசியில் "இந்நூலிலுள்ளசில விஷயங்கள் எழுதப்படாமலிருந்தால் தினவுகொண்ட பலமற்ற மனதைக்கொண்ட மக்களின் மனதை அலைக்காமலிருக்கு"மென்று எழுதப்பட்டதென்றதனாலேயே "குடி அரசு" இந்தக் கொள்கையை ஆதரிக்க வில்லையென்று ஸ்பஷ்டமாக விளங்குகிறது. இத்தியாதி தோற்றங்கள் உலகில் தோன்றியுள்ளதைத் தெரிந்துகொள்வது அவசியமென்றே நமக்குத் தோன்றுகின்றது, இதுகாறும் ஆங்கிலப் பத்திரிகைகளில் மாத்திரந்தான், இத்தியாதி விஷயங்களைப்பற்றி எழுதப்பட்டுவந்திருந்தது- நமது "குடி அரசு" தோன்றியபிறகே இத்தியாதி இயக்கங்கள் உலகில் கிளம்பும் காட்சிகள் தமிழ் நாட்டுக்கு எட்ட ஆரம்பித்ததென்றும் சொல்லலாம்.

மனிதனுக்கு ஆடை(Clothing) அவசியமா? ஆடை நாகரீக வாழ்க்கைக்கு அத்தியாவசியமா? என்று கேட்கலாம். ஆடையைத் தரிப்பது (Artificial) அதாவது செயற்கையால் என்றும் இயற்கை அல்லவென்றும் சிலருடைய கருத்து. இம்மாதிரியாகவே சமைத்து உண்பது செயற்கையென்றும் காய்கனிகளை (Raw) அதாவது சமைக்காமல் பச்சையாக உண்பதும் இயற்கை என்றும் சிலர் கருதுகின்றார்கள். இத்தக் கருத்துடன் நிற்காமல் பச்சையாக உண்ணவும் பிரசாரம் செய்துகொண்டுருகின்றனர். இந்தக் கோஷ்டியாரில் நமது காந்தியாரும் ஒருவர். இவர்

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க

புரட்சி

ஈரோடு 1934- மார்ச்சு மீ 11-உ

மன்னார்குடி மகாநாடு.

—:o:—

நமது மாகாண சமதர்ம மகாநாடானது 4-தேதி ஞாயிறன்று மன்னார்குடியில் சிறப்பாக நடந்தது. மகாநாட்டுக்கு சமதர்ம தோழர் எம். சிங்காரவேலு அவர்கள் தலைமை வகிப்பதாக இருந்தும் திரேக அசௌகரியத்தினால் அவர் வரமுடியாமல் போனதினால் 3 தேதியன்று மகாநாடு நடைபெறவில்லை. ஆனால் அன்று மகாநாட்டுக் கொட்டகையில் தோழர் ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில், வந்திருந்த இரண்டாயிரத்துக்கதிகமான பிரதிநிதிகளோக்கொண்டு ஓர் பொதுக் கூட்டம் நடந்தேறியது.

4 தேதியன்று மகாநாட்டுக் கொட்டகையில் மகாநாடு ஆரம்பமாயிற்று வரவேற்புத்தலைவர் தோழர் எம். தாமலிங்கம் அவர்களின் வரவேற்புத் தலைவர் பிரசங்கம் நடந்ததும், தோழர் எஸ். ராமநாதன் எம். ஏ. பி. எல். அவர்கள் மகாநாட்டுக்குத் தலைமை வகித்தார். முன் தலைமை வகிக்கவிருந்த தோழர் எம். சிங்காரவேலு பி. ஏ. பி. எல்., அவர்களால் தயாரிக்கப்பட்டிருந்த அச்சடித்திருந்த அக்கிராசனப் பிரசங்கத்தைத் தோழர். எஸ். இராமநாதன் அவர்கள் வாசித்தார். அக்கிராசனர் முன்னுரைக்குப்பின் மகாநாட்டுத் தீர்மானங்களை தயாரிப்பதற்கு விஷயாலோசனைக் கமிட்டி நியமிக்கப்பட்டது. பகல் 11 மணியிலிருந்து பிற்பகல் மூன்று மணிவரை விஷயாலோசனை கமிட்டிக் கூட்டம் தோழர் எஸ். ராமநாதன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. விஷயாலோசனைக்கமிட்டிக்கூட்டத்தில் முதலில்ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது நமது ஈரோடு சமதர்ம வேலைத் திட்டத் தீர்மானமாகும்.

தோழர் எஸ். ராமநாதன் அவர்கள் வழக்கம்போல் வேலைத் திட்டத்தை எதிர்த்தார். இரண்டொரு தோழர்கள் அவர் கூறியதற்கு ஆதரவு காட்டினர்கள். நீண்ட விவாதத்திற்குப் பின்பு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மற்ற தீர்மானங்கள் தயாரிக்கப்பட்ட பின்பு விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டம் முடிந்தது.

மாலை மகாநாட்டுக்குத் தோழர் ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில் மகாநாடு ஆரம்பமாயிற்று. சகல தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாகாண மகாநாட்டுக்குப் போதுமான விளம்பரம் இல்லாவிட்டாலும் பல ஜில்லாக்களிலிருந்தும் 200, 300க்கு மேற்பட்ட பிரதிநிதிகளும் ஜில்லாவின் பல பாகங்களிலிருந்தும் 500, 600க்கு மேற்பட்ட பிரதிநிதிகளும் விஜயஞ் செய்தது குறிப்பிடத் தக்கதாகும்.

சமதர்ம வேலைத் திட்டமானது தயாரிக்கப்பட்ட ஒரேண்டு முடிவுக்குள் மாகாணச் சமதர்ம மகாநாட்டைக் கூட்டி வேலைத் திட்டத் தீர்மானங்களை நிறைவேற்ற முன்வந்த மன்னார்குடி வரவேற்புக் கமிட்டியைப் பாராட்டுகிறோம்.

சமதர்மத் திட்டமோ, லட்சியமோ பயனற்றது என்றும் அத்தீர்மானங்கள் ஒழுங்குப்படி அமைக்கப்படவில்லை யென்றும் வீண் புகார் கூறுகிறவர்களுக்கு தலைவர் எம். சிங்காரவேலு அவர்களின் ஆராய்ச்சிமிகுந்த தலைமைப் பிரசங்கமானது தக்கப் பதிலளிக்கப் போதுமானதாகும்.

அறியாமையாலோ, பொறுமையாலோ, பயத்தினாலோ இவைகள் ஒன்றுமில்லை என்றால் சுயநலத்தாலோ நமது திட்டத்தைப் பற்றி வீண் புகார் சொல்லும் நண்பர்கள் இருந்தால் அவர்களுக்கும் தலைவரின் பிரசங்கமானது தக்க பதிலை எடுத்துக் கூறுவது போல் தயாரிக்கப்பட்டிருக்கிறது. சமதர்ம திட்டம் ஒன்றினாலல்ல வேறுஎத்திட்டத்தாலும் ஒரு காது ஓடிந்த ஊசி அளவுகூட இந் நாட்டு ஏழை மக்களுக்கு பலன் இல்லை என்பதற்கு தலைவரின் நீண்ட பிரசங்கமே போதுமானதாகும்.

வரவேற்புகழத் தலைவர் தோழர் தாமலிங்கம் அவர்களைப் பற்றி தஞ்சை ஜில்லா வாசிகள் நன்கறிவார்கள். அந்த ஜில்லா அரசியல் பார்ப்பனர்களால் பல விதகஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாகியும் தமது கொள்கையில் விடாப்பிடியாக உருதியுடன் நிற்கு மவரின் பிரசங்கம் வேறொரு இடத்தில் பிரசுரித்திருக்கிறோம்.

மன்னார்குடியில் வரவேற்பு கமிட்டியார் எதிர் பார்த்ததை விட ஏராளமான பிரதிநிதிகள் விஜயம் செய்தும் சகலருக்கும் தக்க விதம் சௌகரியங்கள் அமைத்துக் கொடுத்த வரவேற்பு கழக தலைவர் எம். தாமலிங்கமவர்களை பாராட்டுவதுபோல் காரிய தரிசிகளையும் பாராட்டுகிறோம். மகாநாட்டுக்கு தீவிர முயற்சி எடுத்துக்கொண்டவர்களின் தலைவர்களாக உள்ளவர்களில் தோழர் இராமையாவையும். சொக்கண்ணவையும் பாராட்டுகிறோம்.

நமது தலைவர் சிறைபுகுந்த ஒரு மாதத்துக்குள் இரண்டு தாலூகா மகாநாடுகளும் ஒரு மாகாண மகாநாடும் நடந்தொன்றே நமதி யக்கமானது தலைவருடன் மறையும் என்ற பொய் பிரசாரர்களுக்கு தக்க பதிலாக இருக்கு மென்று நம்புகிறோம்.

தமிழ்நாடெங்குமுள்ள நமது தோழர்களும் சங்கங்களும் மாகாண மகாநாட்டின் தீர்மானங்களை கவனித்து அநுஷ்டானத்தில் கொண்டுவர முயல ஆசைப்படுகிறோம்.

மாகாண சுயமரியாதைச் சங்க நிர்வாக கமிட்டிக்கூட்டம்.

இன்று 11-3-34 ஞாயிறன்று சென்னையிலுள்ள "ராஷனலிஸ்ட்" பத்திரிகாலயத்தில் நமது மாகாண சுயமரியாதைச் சங்கத்தின் நிர்வாக கமிட்டியின் முதல் கூட்டம் நடைபெறும்.

அதுசமயம், மாகாண மகாநாட்டை நடத்துவதைப் பற்றியும் மற்றும் விஷயங்களைப் பற்றியும் ஆலோசிக்கப்படும்.

சர்வஜன வாக்கா?

தொட்டதற்கெல்லாம் சர்க்கார் பொதுஜன அபிப்பிராயம் அறிந்து அது சாதகமாக இருந்தால்தான் தாங்கள் செய்வதாக சொல்லுகிறார்கள். அத்துடன் மட்டுமல்ல, ஒன்றைப் பற்றி யோசிக்கூட சர்வஜன வாக்கு கேட்கிறார்கள். நாம் உணர்ந்தவரையில் என்றும் சர்க்கார் சர்வஜன வாக்குப்படி நடந்ததாகக்கூறமுடியாது. சென்ற பத்து ஆண்டுகளு முன்பு பத்துவயது பெண்களை இடுப்பொடிக்கக்கூடாதுபொட்டுகட்டக்கூடாது என்று பிரசினை உண்டான காலத்தில் கூட சர்வஜன வாக்கு எடுக்க வேண்டுமென்றார்கள். எடுத்தார்கள். சிறு பெண்களுக்கு பொட்டுகட்டுவதை ஆதரிப்பதாக கூறினர்கள். பொதுஜனங்களுக்கு விரோதமாகவே அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்பின் பல சீர்திருத்த தீர்மானங்களிலும் பொதுஜன வாக்கு விரோதமாக இருந்தும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஆனால் சர்க்கார் அவைகளை நிறைவேற்ற உட்பட்டதற்கு காரணம் ஜன சமூக நன்மை என்பதற்கும் பொதுஜன வாக்கு என்று இவர்கள் எடுப்பதற்கும் சம்மந்தமில்லை என்பதை நன்குணர்ந்ததேயாகும்.

இங்கிலீயில் இரண்டுமாதம் காந்தி பாபு ஆலயப்பிரவேசத்துக்கு ஆதி திராவிடர்கட்கு இடமளிக்கவேண்டுமென்று இம்மாகாண முழுதும் பிரசாரம் செய்தபின் பொதுஜன அபிப்பிராயம் அறிந்தும் அது விரோதமாக இருப்பதாக கூறுகிறார்கள். காந்தியடிகளின் நேரான பிரசாரத்திற்கு பின்பும், லக்ஷக்கணக்கான மக்கள் வரவேற்ற பின்பும், இரண்டு லக்ஷ ரூபாய் பாதகாணிக்கைக்குப் பின்பும், காந்தி சொன்ன ஆலயப்பிரவேச ஆதரவுக்கு கைதட்டுதலுக்குப பின்பும், ஓட்டு எடுப்பதில் விரோதம் என்றால் இதற்கு சரியான சமாதானம் சொல்ல நமக்கு தெரிய வில்லை. போகட்டும். இத்தீர்மானத்துக்கு வந்த கெதியானது, நாளைய ஜூன் மாதம் வரவிருக்கு தீண்டாமை விலக்கு மசோதாவுக்கும் வந்துவிடாதிருக்க சர்காரும் ஆதிதிராவிட சகோதரர்களும் முயலுவார்களாக. ஆலயங்கட்ட ஹரிஜன நிதியை உபயோகிக்க கூடாதென்ற நமது மாகாண ஹரிஜன கமிட்டியும் தனது சக்தியை தீண்டாமை விலக்கு மசோதாவுக்கு சாதகமாக வேலை செய்வார்கள் என்று நன்புகிறோம்.

---

3 லக்ஷமா?

ரஷியநாட்டில் தீக்கிரையாக்கப்பட்டது போக மிஞ்சிய சில புத்தகங்களில் புராதனகாலத்து கையெழுத்து பிரதியான "பைபிள்" ஒன்று பிரிட்டிஷ் பொதுஜனங்கள் 3-லக்ஷ ரூபாய் கொடுத்து வாங்கினர்களாம் இது அங்குள்ள மதத்தின்பேரால் உள்ள செல்வசெறுக்கை காட்டுகிறது. அதே தினத்தில் தான் பதினையிறக் கணக்கான வேலையற்றோர் ஊர்வலக்காகியும் அங்கு நேர்ந்தது. பைபிளுக்கு கொடுத்தபணம் பட்டினிக்கு கொடுத்தால் சோறு போடுமா? என்று பார்க்கலாம்.

லெனின் வழி.

ஒரு விஷயத்தைப் பற்றி ஒருவர் குறை கூறுவதோ பிசகென்று சொல்வதோ, தப்புத் தண்டா என்று யாரும் சொல்லக்கூடாது, சொல்ல முடியாது, சொன்னலும் வியர்த்தம். கூட்டுறவில்மூச்சுவாங்கிமூச்சுவிடும் மனிதன் எந்த விஷயத்தையும் அலசிப் பார்த்து தப்பு ஒப்புக் கூறப் பூரண உரிமையுடையவன். ஆனல், குறை கூறத்துணிவோன் சரியான பாதையைக்காட்டவும் காட்டியதைக் காரியத்தில் காட்டவும் சக்தியுடையவனென்பதை நிரூபித்தால்தான் அவன் பேச்சு செலாவணியாகும். தூருப்பிடித்த கத்தியுங்கள் களைக்கு உதவா. கத்தியார்த்தம் பேசுவதினும் தலைக்கு மேல்வேலை நமக்கு இருக்கிறது. செயல் திறன்படைத்த, கூட்டுத் தோழர் களிடையில் எழும் சந்தேக விபரீதக்கருத்துக்கள் முட்டி மோதி உராசிஒரு முடிவுக்கு வரவேண்டியது அவசியம். செய்கையில் ஐக்யமே நர்த்தனம் புரிய வேண்டும். வெற்றியின் முதற்படி தோழர்களின் ஒற்றுமை. புது உலகச் சிற்பியாகிய லெனின் கூறுவதை ஊன்றி நோக்குங்கள். (Difference of opinion but unity of action is what we must obtain.) "அபிப்பிராயம் கோடுக்கும்போது நமது மாறுபாடுகள் எழலாம். ஆனல் செய்கையில் ஏகோபித்த கருத்துடன் இரண்டறக் கலந்து நிற்க வேண்டும். நாம் கடைப்பிடித்துத் தீரவேண்டிய நீதியிதுதான்" லெனின் வாக்கில் பொங்கி வழியும் உண்மைகளே, சு. ம. தோழர்கள் அவசியம் பருகவேண்டுமென்பது எனது பேராசை.

வேலைத் திட்டம்.

பொதுஜனங்களுக்குக்கஷ்ட நிவாரணத்தில் கட்டுக்கடங்காக் காதல். தலைவர்களென்போர்க்கு, தாங்கள் சரியென்று பிடித்ததை ஸ்தாபிப்பதில் பெரு விருப்பம். உழைக்கும் தோழர் (Workers) நிலைமையோ ஆற்றில் ஒருகால் சேற்றில் ஒருகால். தலைவரென்போரின் உறவும் வேண்டும். சமூகஅவசியம் பூர்த்தி செய்யப்படவும்வேண்டும். இவ்வாறுஎனதுதோழர்கள் சிலரின்போக்கு, இரண்டு குதிரைகளில்சவாரி செய்யும் பரிதாபக் கோலம். மன்னர்குடி மகாநாட்டில் இது தலைகாட்டிற்று. தோழர்களே! சமூக அவசியமே பிரதானம். கோழைத் தலைவர்கள் (Weak leadership) எவராயினும் உதழித் தள்ளுங்கள். காரியத்திற்குதவாத 'பெரிய மனிசர்' நமக்கு வேண்டாம்.

சால்வயிறு குதிர் வயிறுவதற்குஇயக்கமா? ஒட்டி உலர்ந்த வயிறுஉண்ண உணவு பெற இயக்கமா? தரித்திரம் பிடுங்கித் தின்னும் ஏழை எளியவர்க்கே இயக்கம தேவை. ஈரோட்டு வேலைத் திட்டக் கூட்டம் முடிந்ததும் நடந்ததென்ன? பட்டம், பதவி, அந்தஸ்து, அதிகார வேட்டைக்காரர்கள் இருந்த இடந்தெரியாமல் பதுங்கி ஒதுங்கிக்கொண்டார்கள். தொந்தி, தொப்பையை வளர்ப்பதே தொழிலாகக் கொண்ட புல்லுருவி (Parasite) களாகிய பணக்காரர் மறுத்தும் வெறுத்தும் மறைமுகமாகப் பேசித் திரிகிறார்கள். ஆனல் ஏழை எளியவர்களோ முன்னேவிடப் பன்மடங்கு உற்சாகத்தோடு நம் இயக்கத்தில் கலந்து உழைத்து வருவதைக் கண்ணுரக் காண்கிறோம்.

தலைவரென்போரிடையே பல அபிப்பிராயம். ஒருவருக்கு அடிப்படையான கொள்கைகள் பிடிக்கிறது; திட்டம் பிடிக்கவில்லை. மற்றொருவர்க்கு, சமதர்மத் திட்டம் ஒத்துக்கொள்கிறது; கொள்கைகள் வேம்பாயிருக்கிறது. இன்னுமொருவர், தயாரித்துள்ள கொள்கையிலும் திட்டத்திலும் சொற்சோர்வு பொருட்சோர்வு கண்டு பிடிக்கிறார். முதலாளிகளைப்போல் இவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நினுசு, ஒவ்வொரு ரசம்; ஒவ்வொரு மோல்தர். அப்பப்பா! 'பெரிய' இடத்தாரகியம் சூரியனுக்குத்தான் வெளிச்சம்.சிற்சில வேலைத் திட்டக் கூட்டத்திற்குப்பின் உழைப்பும், ஊக்கமும், உத்வேகமும் கொண்ட தீவிரவாதிகளான அநேக வாலிபர்களைச் சந்தித்தேன். அவர்கள்: "இத்தனைவுக்குசந்தோஷப்பட்டு கலந்துழைக்க ஒத்துக்கொண்டதோடு இன்னும் வேகமாகப் போகவேண்டுமென்றும் என்னிடம் கூறினர்கள். ஏழைகளான பொதுஜனங்கள் வேலைத்திட்டக் கூட்டத் தீர்மானங்களை மேளதாளத்துடன் வரவேற்பதைத் தமிழ்நாடெங்கும் பார்த்து வருகிறோம். இந் நிலைமையில் மன்னர்குடியில் சமதர்ம மகாநாட்டிலேயே சமதர்மத் திட்டத்தைச் சில தோழர்கள் மறுத்தார்களென்றால் அது பெரிதும் வருந்தத்தக்கது. சமதர்ம இயக்கமாகிய சுயமரியாதை இயக்கம் ஏழைப் பொதுஜனங்கள் இயக்கமா அன்றி தலைவர் ஆதிக்கத்தையும் தனிப்பட்ட அபிப்பிராயத்தையும் நிலைநாட்ட விரும்பும் சிலருடைய இயக்கமா என்பதைப்பற்றித் தீர்ப்பெழுத இன்னும் விட்டுக்கொண்டிருப்பது சரியல்ல. "தலைவர்களையும் ,தொழிலாளி வகுப்பையும் பொதுஜனங்களையும், பிரிக்க முடியாதவாறு ஒரே கட்சியாய்ச் சேர்க்கக் கற்றுக்கொள்ளாதவரையில், தொழிலாளர் புரட்சிக்கட்சி அப்பெயருக்குலாயக்குடையதாகாது' என்றூர் லெனின். (The Proletaian revolutionary party does not deserve the name until it learns to connect leaders-class-msses, in one indissoluble whole – Left Commuuism) இந்த உண்மைதத் தோழர்கள் ஆராய்ந்தீர யோசித்துப்பார்க்க வேண்டுகிறேன்.

சமதர்ம மகாநாடு.

[காம்ரேட்]

தலைமைப்பேருரை.

புத்தம் புதிய கலைகள் மெத்தவளராத பாஷை நாம் பேசும் தமிழ்ப் பாஷை. பிறநாட்டுநல்லறிஞர் சான்றாங்கள் மொழிபெயர்க்காத குறைப்பாடு தமிழுக்கு ரொம்ப. மிக அவசியமான நூற்கள் இல்லாமல் தமிழ் பஞ்சப்பாட்டுப் பாடுகிறது. ஊமையராய், செவிடர்களாய், குருடர்களாய்த் தமிழ் மக்கள் காலத்தள்ளுகிறார்கள். பிச்சைப் பிழைப்பும் கத்தல் கோலமுமே தமிழர் மீது ஆதிக்கம் செலுத்திவருகின்றன. இச்சிலுமையில் எழைத் தமிழனைக் கரையேற்ற, சமதர்மக் கொள்கை பரவவேண்டியது அத்யாவசியம்.

தோழர். சிங்காரவேலு சமதர்ம மகாநாட்டுக்குத் தயாரித்த தலைமைப் பேருரை, ஆங்கில மறிபாத் தமிழ் மக்களுக்குப் புத்தமுதமாகு மென்பதில் சந்தேகமில்லை. சமதர்ம விஷயஞானப் பசியுள்ளவர்க்கு கல்ல விருந்து அவர் தலைமைப் பிரசங்கம். தோழரின் சித்திரத்தில் காணப்படும் தொழிலாளிக் கூட்டத்தின் ஆறாத்துயரம் நெஞ்சைக்கரைக்கும்; முதலாளிவர்க்கத்தின் ஆதிக்கஅட்டூழியம் ரோஷத்தைக் கிளறிவிடுமளவும். தமிழரிடையில், இன்னறய நிலையில், சமதர்மக் கொள்கையை விளக்கிக் கூறுவதற்குரிய அறிவும், ஆராய்ச்சித் திறனும், அடங்காத ஆர்வமும் உடையவர் தோழர். சிங்காரவேலு ஒருவரே.

மாகாண மகாநாடு.

காலத்திற்கு இசைந்ததாய்க்கூட்ட வேண்டியது சமதர்ம மகாநாடு. அதிலும் தாலூகா ஜில்லா மகாநாடுகளை விட்டுவிட்டு ஒரேயடியாக மாகாண மகாநாட்டைக் கூட்டுவதற்கு வேண்டிய உணர்ச்சியையும் முயற்சியையும் தோள்மேல் போட்டுக்கொண்ட நிர்வாகிகள் ஒவ்வொரு வருக்கும் எனது ஆழ்ந்த நன்றி. மகாநாட்டை வெற்றிகரமாக நடத்திமுடித்த வரவேற்புக் கூட்டத்தாருக்கு எனது வந்தனம்.

ஆனல், சமதர்மிகளுக்கு வாய்த்துள்ள இந்த அரிய பெரிய சந்தர்ப்பத்தை மகாநாட்டுநிர்வாகிகள் போதிய அளவு உபயோகப் படுத்திக்கொள்ளவில்லை என்று தயங்காது கூறித் தீரவேண்டியது என் கடமை. அனல் விழுங்கும் கைமுன்ன வாலிபர்களே, பொங்கிப் பெருக்கெடுத்துச் சுரை புரண்டோடி வரும் சமதர்மப் பெருவெள்ளத்தில், நூற்றுக் கணக்கில் ஆயிரக் கணக்கில், தினேதினே அப்பு அழுக்கின்றி நிர்வாணமாக மூழ்கி முழுகி வருகிறார்கள். தக்க வினம்பரமும் வேண்டிய முன்னறிவிப்பும் செய்து, சிறிதளவு பொறுதியும் காட்டியிருந்தால், பல பாகத்திலும் தெறிக்கிடக்கும் சமதர்ம சுவைஞர்கள், ஆயிரக்கண்க்கில் மொய்த்து, சம் நோக்கத்திற்கு ஆக்கம் செய்திருப்பர். சென்றது இனிமீளாது. சென்ற காலகிழ்ச்சி வருங்காலத்தின்னல்ல கோலாஞல் லாபம்.

காரியமே வீரியம்.

"20000 டன் நிறையுள்ள பெரும் பேச்சைவிட, ஒரு அவுன்ஸ் செய்கைமேல்" என்றூர் அறிஞர் ஒருவர் "வண்டி வண்டியாக வீடி யோகிக்கப்படும் தண்டோரா சாற்றல்களை விட, ஒரு சிறிய செய்கை வெற்றியைத் தரிதப்படுத்தும்" என்று கூறினர் குரோபாட்கின் (Pricen Kropotkin 'சக்தி நிறைந்த செய்கை' தான் லெனின் விரும்பினர். அவசியப் பேச்சுக்கல்ல, வெறும் பேச்சுக்குஎற்ற சூடுகள் இலை. மகாநாடுகளால் ஒரெல்லைக்கு உணர்ச்சி ஏற்படலாம். ஒற்றுமைப் பயிற்சியும், விஷயஞானப் பேறும் தொழிலாளி அடையவேண்டுமானல், அவசியத்தில் எழுந்த உயிரிள்ள சங்கங்களால் தான்முடியும். சங்கங்களின் மூலம் ஞானத்தைப் பரப்பி, பாட்டாளிகளின் தேவையை உணர்த்தி, பின்னர் பெருங்கிளர்ச்சி செய்து அதன் பயனுய்த தொழிலாளிக்குச் சாதகியஞ்செய்யும் சட்டங்களியற்றலாம். [Educate, Agitate & Legislate! ஸ்தாபனம்! ஸ்தாபனம்!! நமது உடனடி வேலை சாடெங்கும் சமதர்மச் சங்கங்கள் ஸ்தாபிப்பதே.

சென்றதினிமீளாது
தோழரே! நீர
எப்போதும் சென்றதையே
சிந்தைசெய்து
சொன்றழிக்கும் அழுக்காறும்
குழியில் வீழ்ந்து
குமையாதீர், சென்றதினைக்
குறித்தல் வேண்டா;
இன்று புதிதாய் முளைத்ததோ
மென்று கீழிர்
எண்ணமதைத்தின்னமுற
இசைத்துக்கொண்டு
ஒன்றுபட்டுத் நிலிரமா
யுழைக்க வாரீர்!
ஒங்குபுகழ் வெற்றி கம்
இயக்கத்திற்கே.

பட்டினி.

[இந்திய பகுத்தறிவு சங்கத்தின் ஆங்கில மாசிகையான ரீசனில் Notes & happenings என்ற தலைப்பின்கீழ் காணப்படுபவைகள். T. N. R.]

மகமதியர்கள் இந்த மாதத்தில் பட்டினியை அனுசரித்துவருகின்றார்கள். வரப்போகிற அமாவாசை தினத்தோடு இது பூர்த்தியாகும். பக்ரீத் பண்டிகையும் அதுசமயம் கொண்டாடப் பெறும். இந்த ரம்ஜான் மாத முழுதும் அதிவைதீக மகமதியர்கள் காலை சூரியோதயமுதல் மாலை சூரியாஸ்தமனம்வரையில் சாப்பிடவோ,குடிக்கவோ, புகைபிடிக்கவோ மாட்டார்கள். ஆனால் இரவிலோ அவரவர் விருப்பப்படி சாப்பிடவும், குடிக்கவும் செய்கின்றார்கள். தினசரி பழக்கத்திலிருந்து திடீரென்று ஏற்படுத்திக்கொள்ளும் இவ்வித மாறுதலால் மனிதனுடைய ஜீரணசக்தி முறையானது கண்டிப்பாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுவிடும். ஆனால் மதசடங்கை அனுஷ்டித்துவருகின்றவர்களை இவ்வாறு அல்லவென்று அறிவுறுத்துவதோடு பெருவாரியான ஆத்மார்த்திக நன்மையை அடைவதாகவும், இதனால் அவர்களுடைய ஆரோக்கிய வளர்ச்சி பெருகுவதாகவும்கூட சொல்லிவருகின்றார்கள்.

இங்கு இந்தியாவில்இந்த பட்டினி விரதம் மிகக்கண்டிப்பான முறையில் அனுசரிக்கப்படுகிறதில்லை. ஆனால் அரேபியாவிலும், பெர்சியாவிலும் இதுவிஷயத்தில் மிகக் கண்ணுங்கருத்துமாக இருக்கின்றார்கள். இத்தகைய பட்டினியை வெளிப்படையாக ஒரு அரபி அனுஷ்டிக்கத்தவறினால் அங்குஅவன் மிகக் கொடிய தண்டனைக்கு ஆளாகின்றான். அந்த நாடுகளில் ஒருவன் தன் விருப்பப்படி தான் நம்புவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. அவன் ஊர்க்கூட்டத்தோடு ஒத்துப்போகவேண்டியதுதான். இந்தச் சம்பவமானது ஸ்பெயின் மத போதகர்கள், மக்கள் மனஎழுச்சியின் எண்ணம் சுதந்திரம் ஆகியவற்றின் விடுதலையை, அனுமதிக்க மறுப்பதை ஞாபகத்திற்குக் கொண்டுவருகிறது. அங்கு பாதிரிகள் கட்டளைக்கிணங்க ஒருவன் கீழ்படியவேண்டியதுதான். ஒருவன் பாதிரியின் அதிருப்திக்குக் கீழ்படியாமல் ஆளாகின்றவன் கொடுந்துன்பத்துக்கும், சிறைவாசத்திற்கும் சொத்துப் பறிமுதலுக்கும் அநேக தடவைகளில் சாவுக்குமான புரோஹிதக் கொடுமைக்கு உட்படுத்தப்படுகின்றான். இந்த வெறுக்கத் தக்க கொடுந் துன்பங்களுக்கு பெரும் குற்றவாளிகளாவோர் யூதர்களேயாவர்.

ஃஃ ஃஃ

பட்டினிகிடப்பது ஒரு கீர்த்திவாய்ந்த செய்கையென்ற தத்துவமும், தெய்வத்திற்கு அது மிகப் பிரியமானதை அளிக்கிறதென்கிற நம்பிக்கையும் ஒரு கீழ்நாட்டுக் கோட்பாடேயாகும். மகமதியர்களும், கிறிஸ்தவர்களும் இவற்றை யூதர்களிடமிருந்தும்; யூதர்கள், ஈஜிப்தியர்களிடமிருந்தும் பாபிலோனியர்களிடமிருந்தும காப்பி அடித்துக்கொண்டார்கள் என்பது வெளிப்படை. இந்துக்கள் மேற்கூறிய பட்டினிவிஷயத்தில் அழுத்தந்திருத்தமானநம்பிக்கைப் படைத்தவர்கள்.கிறிஸ்தவர்கள்இருநூறுஅல்லது முன்னூறுவருஷங்களுக்குமுன் இவற்றில் நெறிதவராதவர்களாகவேஇருந்தார்கள்அந்தக் காலத்திய கிறிஸ்தவமண்டலோபவாச காற்பது தினங்களும் அக்காலத்திய மக்களுக்கு மிகக் கஷ்ட காலங்களாகும். மாமிசம் சாப்பிடலாகாது, ஆனால் மீன் புசிக்கலாம். அந்தக்காலத்தில்இவற்றை உதறித்தள்ள ஒருவர்சட்டத்தைமீறினால், கொடிய தண்டனைக்கு ஆளாகவேண்டியிருந்ததால் யாரும் முன்வரவில்லை. பட்டினியை அனுஷ்டிக்க முடியாதவர்கள் போப்பிடமிருந்து பணம்கொடுத்து விடுதலைபெறவேண்டியிருந்தது.இங்கிலாந்தில்எலிஜபேத் மகாராணியார் காலத்தில் கூட, கிறிஸ்தவ மண்டலோபவாச காலத்திலும் வெள்ளிக்கிழமைகளிலும் மாமிசம் சாப்பிடுவது ஒரு பினல்குற்றமாக இருந்திருக்கிறது. இன்றைய கிறிஸ்தவ உலகத்தில் பட்டினியின் தத்துவம் சூபீகமாக மாண்டுவருகிறது. இருள் சூழ்ந்த கிறிஸ்தவ தேசங்களில் உள்ள கிழஸ்திரீகளும் பிராமணப்பதான பெண்களும் இந்த மதப் பழக்கத்தை விடாப்பிடியாக, கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருக்கின்றார்கள். பட்டினிடானது மதச்சடங்காக ஈஜிப்ட் நாட்டிலிருந்தே எற்பட்டிருக்கவேண்டும். இதனை புரொபசர் இலியட் ஸ்மித்தும் பிற சிந்தனைசக்தர்களும் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். இது மட்டுமல்ல. வியாபாரப் போக்குவரத்துக்கள் அக்கால மதச் சடங்குகள் முதலிய அனுஷ்டானங்களைத் தெளிவுபடுத்துவதன் மூலமும் மேற்கூறியவற்றைத் தெளிவுபடுத்துகிறது. கடவுள்களும் மனிதர்களைப் போலவே விரத அனுஷ்டானங்களை அனுஷ்டிக்கின்றன என்கிற குயுக்தி நம்பிக்கையும், மக்கள் கடவுளர்களை விட அதிக சந்தோஷமனுபவிப்பதை க்கடவுளர்கள் விரும்புவதில்லை யென்ற விபரீதப் புத்தியுமேதான் மேற்காட்டியதற்கும் காரணமாகும். பழங்காலக் கடவுளர்கள் சரித்திரத்தை புரட்டிப் பார்த்தால் அதில் கடவுளர்கள் மனித சந்தோஷ சௌக்கியத்தின்மீது கொண்ட பொறுமையும் எப்பொழுதும் மனித சமூகம் தங்கள் முடிவை நினைத்து நினைத்து உயிரற்றவாழவே கடவுளர் செய்துவந்த கூற்றுக்களும் புலனாகும்.

ஃஃ ஃஃ

கடவுளர்களைத்திருப்திப்படுத்தப்பட்டினி ஒன்றுதான் ஒரே மனித தியாகம் என்று கருதிவிடவேண்டாம். ஒருவன் தனக்கு உண்மையானதும் உயிரானதுமான சகலவற்றையும் அற்பணம் செய்திருக்கின்றான். ஒவ்வொருவர் தங்கள் சிறு குதலைகளைப் பலியிட்டிருக்கின்றார்கள். தங்களையே அழித்துக்கொண்டிருக்கின்றார்கள். தங்கள் திரேகத்தைப் பாழ்படுத்திக்கொண்டிருக்கின்றார்கள். அந்தோ! கடவுளர்களுடைய திருப்திக்காக, பிறருக்கும் சொல்லிலடங்காமுடியாத கொடுந் துன்பங்களையும் விளைத்திருக்கின்றார்கள். கர்னாடக நாடுகளில் மனித பலியிடுதலே ஒரு சர்வ சாதாரண அனுசரணைப் பழக்கமாக இருந்திருக்கிறது. தங்களுடைய மதம் மாத்திரமே உண்மையான கடவுளால் அனுப்பப்பட்டிருக்கிறதென்று பெருமை பாராட்டிக்கொள்ளும் யூதர்கள் மனித பலியைக் கையாண்டிருக்கிறார்கள். ஆப்ரஹாமின் மகனை ஐசக்கை கொன்றுவிடும்படி "ஜெகோவா" ஆப்ரஹாமுக்குக் கட்டளையிட்டதில் ஆச்சரியமொன்றுமில்லை.

ஃஃ ஃஃ

ஆதிகால மனிதர்கள் ஆயிரக்கணக்கான மக்களைக் கடவுளுக்கு பலியிட்டிருக்கின்றார்கள். ஆனால் இன்றைய மக்கள், மனிதர்களுக்குப் பதிலாக மிருகங்களைப் பலியிட்டு வருகின்றார்கள். மனிதவர்க்கத்தின் மனமயக்கத்தின் காரணமே இன்றைய தினம் ஆடு, மாடு, கோழிகள் பலியிடப்படுவதின் தாத்பரியம். தேவதைகளுக்குக் கறிமாமிசங்களும், இரத்தங்களும் மிகப் பிரீதியானதுதானென்று இன்றும் லட்சக்கணக்கான மக்களும் அழுத்தந் திருத்தமாக நம்புகின்றனர் ஆகவே இந்த நம்பிக்கையைப் போக்குவதும் கொடியகாரியங்களின் துஷ்கிரியத்தியங்களோடுஎதிர்த்துப்போராடுவதும்தான் ஒவ்வொரு பகுத்தறிவுவாதியினுடையகடமையாகும். ரோமன் கத்தோலிக்கர்கள் பிரார்த்தனை செய்வதின் மூலம் தனது ஒரே குமாரனை ஆதிமனிதர்கள் செய்த பாவத்திற்காகவும் அவர்களை உய்விப்பதற்காக சிலுவையில் அறையச் செய்த பரம பிதாவான கருணை மூர்த்தி ஆண்டவருக்கு, கிறிஸ்துவின் ஊனையும் உடலையும் பாதிரிகள் அளிக்கிறார்கள் என்கிற நப்பிக்கை இருந்துவருகிறது

ஃஃ ஃஃ

அடிக்கடி ஐரோப்பாவில் உள்ள அறிவியல்வாதிகள் மேஜூட்டில் நிலை பெற்றுள்ள மூட நம்பிக்கைகளைப் போக்கப் பெரிதும் போராடுகின்றார்கள். சிலதேசங்களில் உள்ள மக்கள் மத்தியகால [Middle Ages] த்தில் வாழ்கின்றவர்களாக இருக்கிறார்கள். மிக முற்போக்கடைந்த தேசங்களான பிரான்சு, இங்கிலாந்து, ஜெர்மனியிலும் அர்த்தமற்ற அனேக மூடப் பழக்கவழக்கங்கள் அனுஷ்டிக்கப்படுகின்றன. ஒருமேஜையில் 13 பேர் உட்கார்ந்து அங்கு உணவருந்தமாட்டார்கள், ஒரு ஹோட்டலின் 13-வது கெ. ரூமில் ஒருவரும்வசிக்கமாட்டார்கள், உப்பானது அங்கு சிந்தக்கூடாது, முகம் பார்க்கும் கண்ணாடி உடையக்கூடாது, போர்க் [Fork] கீழே விழ எறியப்படக் கூடாதாம். ரஸ்தாக்கள் தாயத்துகள் நன்மையை உண்டாக்குமென அணிந்து கொள்ளுகின்றார்கள். அது கெட்ட காலப்பயனைப்போக்குமாம். சில கற்களை வைத்திருப்பதால் அது நன்மையுண்டாக்குமென நம்புகிறார்கள். புருக்களை வைத்து வளர்ப்பதால் சஞ்சலம் உண்டாகுமாம். இரவில் நாய் குரைத்தலால் சாவு எற்படுமாம். பாதிரியின் கோபம் சாபக்கேடாம். பந்தயங்களுக்குப் போவதற்கு முன்பு கருப்பு மனிதர்களைத் தொடுவது அதிர்ஷ்டத்தை உண்டாக்குமாம். இதன்எழுத்தாளர் சில வருஷங்களுக்குமுன்பு ஒரு கருப்பு மனிதனைடு இங்கிலாந்தில் கியூ மார்க்சட் ரேஸ் பார்க்கச் சென்றபொழுது அடிக்கடி ஒவ்வொருவராக வந்து கருத்த மனிதரைத் தொட்டுப்போனதானது இருவருக்கும் ஆச்சரியத்தை உண்டாக்கியது. கருத்த மனிதரை அதிருப்திப் படுத்த இந்தக் காரியம் செய்யப்படவில்லை. ஆனால் குதிரைப் பக்தயத்தில் வெற்றி பெறவே இக் காரியம் அனுஷ்டிக்கப்பட்டது. ஒரு குதிரையின் லாடம் தப்பித் தவறி ஒருவருக்குக் கிடைத்துவிடுமானால், அதை அவர் பெரும் பாக்கியமாக வீட்டினுள் வைத்து மதிப்போடு காப்பாற்றுகிறார்கள். அது பெரும் அதிர்ஷ்டத்தை உண்டாக்குமாம்.

ஃஃ ஃஃ

இதுபோன்ற காரியங்களைப் படித்த வகுப்பார்களும் அனுஷ்டிப்பது தான் பெரிதும் பரிதாபப் படக்கூடியதும் வெட்ககரமானதுமான காரியமாகும். இவர்கள் எல்லாம் மத நம்பிக்கையில் பெருத்த பெருமை பாராட்டிக்கொள்பவராவர்!

தொழிலாளர்

'பண்டிகை'

மே தினம் ஒன்றே.

(9ம் பக்கத்தொடர்ச்சி)

(Nudity) நிர்வாணத்தை அனுசரிக்கின்றீரோ நமக்குத் தெரியாது. ஆனால் பச்சைவுண்வு நிர்வாணத்தைப் போல் ஓர்ந்த (Fad) என்பதே நமது தீர்மானம். பச்சையாகத் தின்றுக்கொண்டிருந்த குரங்கு மனிதன் (Ape-Man) நெருப்பைக் கண்டு பிடித்தபிறகே சமைத்து உண்ண நேரிடவும் அவன் மனித உருவத்தையும், அதற்குவந்த நடத்தையும் பெற்றான் என்பது உயிர்ஞானத்தின் முடிவு என்னலாம். இதைப் போலவே ஆடையில்லாமல் நிர்வாணமாக உலாவிக் கிடந்த மனிதக் குரங்கு ஆடையை அணிய நேரிடவும் மனிதக் குரங்கு மனிதனாக மாறிவந்த விஷயமும் உயிர்ஞானத்தின் உண்மைகளில் ஒன்று. ஆனால் தற்போது நாம் அடைந்துள்ள மனித பதவியை விட்டுவிட்டு நமது தூரபந்துக்காளிகளாகிய (Distant Cousins) மனிதக் குரங்குகளைப்போல் [Man-Apes] நாமும் மரங்களில் தொத்திக்கொண்டு கனிவர்க்கங்களை உண்டு வாழலாமென்று கருதுவோர் நிர்வாணமாக இன்றைக்கே நாடுகளை விட்டுக் காடுகளில் சென்று நடமாடலாம். இது நவீன நாகரீகமாகா, இந்த வாழ்க்கை காட்டுமிராண்டி வாழ்க்கையாகும். சமைக்காமல் சாப்பிடுவதும், ஆடை அணியாமல் வாழ்வதும் நமது இயற்கைவாழ்க்கை என்கின்றீர் சிலர். ஆம். அந்த வாழ்க்கை தற்போது நமக்கு உவந்ததானால் [Cannibalism] பிணத்தைத் தின்பதும் [Promiscuosintercourse] வரமுறையற்ற புணர்ச்சியும் Murder] கொலை [Rapine] பலவந்தப் புணர்ச்சி இவையாவும் இயற்கை வாழ்க்கை அன்றோ? இவைகளை என் நாம் கையாளக்கூடாது? ஆனால் இந்த வாழ்க்கையைத் தவிர்த்து ஆடையை அணிந்து வீடுகளிலும், வாசல்களிலும் வாசஞ்செய்து ஒழுங்கான முறையில் வாழ நேரிட்டபிறகே ஒருகாலத்தில் காட்டுமிராண்டிகளாய் இருந்த நாம் தற்கால Decent civilised life என்று வழங்கும் தற்கால நாகரீக வாழ்க்கையை நாம் அடைந்துள்ளோம் நாம் நிர்வாண வாழ்க்கையைவிட்டு பல லட்சம் வருஷமான்தாக உயிர் நூலோர் கணக்கிடுகின்றார்கள். அந்த நிலையை இன்றைக்குக் கோறுவது மிருகத்தன்மையே யொழிய மனிதத் தன்மையாகா. சிறு குழந்தைகள் நிர்வாணமாக இருக்க சிலவேளைகளில் ஆசைப்படுகின்றன இது அவர்களுடைய மூதாதைகளாகிய [Naked Savages] நிர்வாண காட்டுமிராண்டிகளின் ஆதி கால வாழ்க்கையாகும். இந்த வாழ்க்கை முதியோர்களுக்கும் சில காலங்களில் கனவுபோல் தோன்றும். இந்தக் கனவை உதறித்தள்ளாதவர்கள் நமது தற்காலவாழ்க்கையில் நிர்வாண நிலையைக் கொண்டுவரப் பார்க்கின்றார்கள். தற்கால நிர்வாணக் கிளர்ச்சிக்கு ஆதாரம் இதுவே. இதனை ஆங்கிலத்தில் [Survival of savage life] காட்டுமிராண்டி வாழ்க்கையில் நம்மவர்களில் சிலரில் மிந்திருக்கும் தணங்களில் வொன்றென மதித்து அதனை விலக்கவேண்டும்.

தபீப்பு:—மனிதன் ஆதியில் ஆடை அணியவேண்டி வந்த அவசியத்தைத் தெரிந்துகொள்ள விரும்புவோர் இந்நூல்களை வாசிக்கவும்.

1. Origin of Civilisation
2. Ice Age.

By.

MACCAB, WATTS & Co.,
LONDON.

[1. Sh. Each.]

கோவை ஜில்லா சுயமரியாதைச் சங்கம்.

பூர்வாங்கக்கூட்டம்.

கோவை ஜில்லாவில் சுயமரியாதைப்பிரசாரம் செய்வதற்கு இந்த ஜில்லா சென்டிரல் சங்கம் ஒன்று ஸ்தாபித்து அதற்கு கோவை ஜில்லாவிலுள்ள ஒவ்வொரு தாலூகாக்களிலும், சுத்தியுள்ள கிராமங்களிலும் சுயமரியாதைச் சங்கங்கள் ஸ்தாபித்து நமது கொள்கைகளைத்தீவிரமாகப் பிரசாரம் செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் இந்த ஜில்லா சுயமரியாதைத் தோழர்களின் கூட்டமொன்று 25-2-34 ந்தேதி மாலை 7மணிக்கு ஈரோட்டில் தோழர் ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்களின் மாளிகையில் தோழர் ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

எல்லாத் தாலூகாக்களிலிருந்தும் பிரதி நிதிகள் வந்திருந்தார்கள். பின் அடியில் கண்ட தீர்மானங்கள் பலத்த வாதத்துடன் நிறைவேறியது.

(1) ஜில்லாவின் மத்திய சங்கத்தை ஈரோட்டிலேயே வைப்பது.

(2) அடியில் கண்டவர்களை ஒவ்வொரு தாலூகாவின் பிரதி நிதிகளாக மத்திய சங்கத்தின் அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டது.

பி. எம். எஸ். சங்கரலிங்கம், ஆர். கிஸன், கனகராஜன், எஸ். எல். எஸ். மணியம், எஸ். ஆர். சுப்பிரமணியம், கே. எஸ். எஸ். சொக்கப்பா, ஏ. எஸ். பசுவதியப்பா, மயில்சாமி, சுப்பண்ணை, மு. கந்தசாமி, எம். கிருஷ்ணசாமி, டி. டி. கோபால், ஆர். அன்னபூரணி, ஈ. வி. கிருஷ்ணசாமி, ஈ. வி. பழனியப்பன்.

(3) இச்சங்கத்திற்குத் தலைவர், உபதலைவர், காரியதரிசியாக கீழ்க்கண்டவர்களை தேர்ந்தெடுக்கப் பட்டது.

தலைவர்:—

ஈ. வி. கிருஷ்ணசாமி.

உபதலைவர்:—

டி. டி. கோபால்.

காரியதரிசி:—

டாக்டர் எம். கிருஷ்ணசாமி.

(4) இந்த ஜில்லாவிலுள்ள தாலூகாக்களிலும், கிராமங்களிலும் சங்கங்கள் ஸ்தாபிப்பதற்கு கீழ்க்கண்ட மூன்று தோழர்களை ஆர்க்கனசர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

தோழர்கள் டி. பி. ராமசாமி, எல்லாயகம், எஸ். ஏ. மாணிக்கம்.

(5) மத்தியக் கமிட்டியின் நிர்வாகச் செலவிற்கு இரு நூறு ரூபாயிற்குக் குறையாமல் மார்ச்சுமாதக்கடைசிக்குள் வசூல் செய்து காரிய தரிசிக்கு அனுப்ப வேண்டுமென்று மத்தியக் கமிட்டி அங்கத்தினர்களைக் கேட்டுக்கொள்கிறது.

(6) சுயமரியாதைச் சங்கத்தில் அங்கத்தினர்களாகச் சேர விரும்புவோர் சங்கக் கொள்கைகளை ஒப்புக் கொண்டு வருடம் ஒன்றுக்கு காலணா சந்தாவாகச் செலுத்த வேண்டுமென்றும், இதில் எந்தஸ்தல சங்கத்திலிருந்து அங்கத்தினராகச் சேர்ந்து கொள்கிறாரோ அதற்கு 3பங்கும் மத்திய சங்கத்திற்கு 1பங்கும் சேர்க்கப்படவேண்டும்.

(7) சங்கத்தின் கொள்கையும், லெக்ஷியமும் வேலைத்திட்டமும் மத்திய சபையால் அச்சடிக்கப்பட்டு ஜில்லா பூராவும் பரப்புவது.

(8) இந்த ஜில்லாவில் இந்த நடைமுதல் வருடத்தில்ஆயிரத்திற்குக்குறையாமல் அங்கத்தினர்களைச் சேர்க்க வேண்டுமென்று தீர்மானிக்கிறது. தலைவர் முடிவுரையுடன் இரவு 9மணிக்குக் கூட்டம் கலைந்தது.

சேலம் ஜில்லா 3-வது சுயமரியாதை மகாநாடு.

விரைவில் நடைபெறும்.

சேலம் ஜில்லா சுயமரியாதை மகாநாட்டை விரைவில், திருஷ்ணகிரி, ஓமலூர், திருச்சங்கோடு, இந்த மூன்று தாலூக்காகளுக்குள் ஒன்றில் கூட்டுவிக்கப்படும், தோழர்கள். எஸ் வி. லிங்கம். ப. ஜீவானந்தம். இன்னும் மற்ற இயக்கத் தோழர்கள் இது விஷயமாக ஜில்லா பூராவும் சுற்றுப் பிரயாணம் செய்து தீவிர பிரசாரம் செய்வார்கள்.

காந்தி பகிஷ்காரக்கூட்டம்.

14-2-34 மாலை சேலம் சுயமரியாதைத் தோழர்களை போலீஸார் காவலில் வைத்திருந்தமையால் இன்று மாலை நடப்பதாகஇருந்த பகிஷ்காரக் கூட்டம் மறுநாள் மாலை அரிஜிப்பாலயம் சமதர்ம வாலிபர் சங்கத்தில் தோழர். வரதாரஜுலு தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் திருப்பூர் டி. பி. ராமசாமி, ஆர். நடேசன் எ. எம். பாலசாமி முதலியவர்கள் ஹரிஜனக் காந்தியை பகிஷ்கரிப்பதன் அவசியத்தைப் பற்றி பேசினர்கள். கூட்டம் சுமார் 9—மணிக்கு இனிது கலைந்தது.

புரசவாக்கம். உண்மை நாடுவோர் கழகம்.

4-3-34 ஞாயிறு மாலை 5-30மணிக்கு சென்னை புரசவாக்கம் சுந்தரம் பிள்ளை தெருவில்உள்ள கார்பரேஷன் பாடசாலையில் தோழர் டாக்டர். மே. மாசிலாமணி அவர்கள் தலைமையில் ஷை கழகம் "ஆனந்த போதினி" ஆசிரியர். தோழர் எஸ். ராமசாமி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

அதுசமயம் தோழர்கள் ஆர். நாராயணியம்மாள், ஏ. மேரி சவுந்தரியம்மாள், எஸ். குஞ்சிதம் அம்மாள், கே. எம். பாலசுப்பிரமணியம், எஸ். குருசாமி முதலியோர் "சங்கத்தின் அவசியம்" என்பதுபற்றி பேசினர்கள்.

வந்தனோபசாரத்துடன் இரவு 8-மணிக்குக் கூட்டம் இனிது முடிந்தது.

புரசவாக்கம் ரோமன் கத்தோலிக்கர்கள் நிறைந்த இடமாதலால் ஷை பேட்டையில் பெரும் கிளர்ச்சி உண்டாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.

வருத்தம்.

கோவில்பட்டி சுயமரியாதைத்தோழர். எ. ஜே. தேவதாசன் அவர்கள் சமீபத்தில் இறந்த செய்தியை அறிந்து வருந்துகிறோம். இவர் தென்னம்பட்டி, கோவில்பட்டி, பெரிய கோட்டூர் முதலிய இடங்களில் தக்க பிரசார ஆக்க வேலைகளைச் செய்த வராவர். மற்றும் சமீபத்தில் ஈரால் மகாநாட்டிலும் கலந்து தக்க நல்ல ஊழியங்களைச் செய்தவருமாவர்.

தேவை.

நன்கு வேலை செய்யும் நிலையிலுள்ள டிரெடில், பிரஸ் முதலிய அச்சியந்திரங்கள் தேவை. அடியிற்கண்ட விலாசத்துக்குப் பூரா விவரங்களுடன் தெரிவித்துக்கொள்ள கோருகிறேன்.

SECRETARY,
Self-Respect-Readiug-Room
Kottar P. o. S.Travancore.

"சன்மார்க்கன்"

சீர்திருந்த தமிழ் மாதப்பத்திரிகை.

சாதி, சமயம் முதலிய மூடக்கட்டுப்பாடான குருட்டு நம்பிக்கைகளைக் கண்டித்து, பகுத்தறிவுக்கொள்கைக்கேற்றவாறு சன்மார்க்கத் துறையில் புகட்டுவது

ஆசிரியர்:—

சுவாமி சிவநேசம்

	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுச்சந்தா	ரூ. 1-0-0	ரூ. 1-8-0
தனிப்பிரதி.....	0-2-0	0-3-0

மானேஜர் "சன்மார்க்கன்"
திண்டிக்கல் S. I.

(8-ம் பக்கத் தொடர்ச்சி.)

ரிகள், டாங்கர்கள், பிச்சைக் காரர்கள், சோம்பேறிகள், பூசாரிகள், கடன்கொடுத்துவாங்கல், சொத்து தகராறுஇவைகளின்காரணமாயுள்ள சிவில்கோர்ட்டுகளிலுள்ள நியாயாதிபதி சிப்பந்தி வகையறாக்கள், மற்றும் தனிகரென்போர், அவர்களடிமைகளாகக் கொண்டுள்ளோர் இன்னும் எத்தனை எத்தனைவீண்கள். இவ்விஷயங்களை நீக்கினால் உலகம் தழைத்தோங்கும் குடும்பமாக வன் ஜ்வலிக்காது?

தீண்டாமையும் பெண்ணடிமையும்.

மனிதன் நிர்மானித்த தத்துவங்களில் தீண்டாமையும் பெண்ணடிமையும் உலகைப்படுதுழியில் அழுத்துவன வற்றில் முதன்மையானவைகள். வாளினும், துப்பாக்கி பீரங்கிகளாலும் மனிதவர்க்கத்திற்கு ஏற்பட்ட நஷ்டத்தைவிட தீண்டாமையும் பெண்ணடிமையும் ஈடுசெய்ய வொண்ணாத தீங்கிழைத்திருக்கின்றன. இவ்விருபதாம் நூற்றாண்டில் பொதுவுடமைத் தத்துவம் வாலிபர் எழுச்சியைக்கவர்ந்து நிற்குமின்னாளில் இவ்விந்தியா தேசத்தில் தீண்டாமைப் பிரசாரம் செய்வது பொழுது போக்காகிவிட்டது. இதைப்பற்றி ஜனங்களுக்கு உணர்த்தவேண்டுமென்றால் பூர்தான வழக்கம், மதம் சாஸ்திரம் என்பவை நம்மை எவ்வளவு கேடான இழிவான மூர்க்கத்தனமான மிருகத்தன்மையில் ஆழ்த்திவைத்திருக்கிறது என்பது விளங்கும். இத் தாழ்த்தப்பட்ட மக்கள் மதவெறிபிடித்தோர்க் கெல்லாம் எடுப்பார் கைப்பிள்ளையாகித்தவிக்க ஒவ்வொரு மதமும் இவரைக் கவர்ச்சி செய்ய முற்படுகின்றது.

தொழில் முறையால் தீண்டாமை ஏற்பட்டது என்பது ஆதாரமற்றது. வேறு நாடுகளில் இத் தொழில்முறைபால் வேற்றுமை பாராட்டப்படுவதில்லை யென்றறிவோம். மதக்கட்டுப்பாடுதான் இதற்குக்காரணம். தீண்டாமையை ஒழக்குமுன் இத்தீமைகளை உண்டுசெய்த மதங்களை வேருடன் களைந்து வெந்நீரூற்றவேண்டும். நசுக்கப்பட்டுவரும் மக்கள் உதைத்தகாலுக்கு முத்தம் கொடுப்பதைவிடுத்து அக் காலைவெட்டி யெறிய முற்பட்டால் மாதரம் விமோசனம் ஏற்படும். தாங்கள் வாழ்க்கைத் துறையில் உதாசீனம் செய்யப்படட அளவு இனிமேல் சலுகை காட்டப்பட வேண்டும். அவ்வாறு செய்யவேண்டுமானால் சட்டதிட்டங்களும், சட்டதிட்டங்கள் செய்வோரும் தாழ்த்தப்பட்டார் கையில் அடங்கிப் பொம்மையைப்போல் இயங்கவேண்டும்.

எந்த ஒரு நபராயிருந்தாலும், எந்த சட்டமாயிருந்தாலும் அவற்றை தொடிப்பொழுதில் வீழ்த்தும் முறை கையாளப்பட வேண்டும். அவர்களை ஏமாற்றித் தரிவோரை வெளிப் படுத்தி இழிவடையச் செய்தல் வேண்டும். கோழி நிருடிக்கூட இருந்து குளாவுவது போல் அனேகர் இருக்கிறார்கள். அவர்களது கூட்டுறவு உணவில் பாஷாணத்தைக் கலப்பது போன்றது.

பெண்ணடிமையை நீக்கச் சிறந்த வழிகளில் சொத்துரிமை ஆண்களைப்போல் வழங்கப்படல் வேண்டும். கர்ப்பாட்சி முறை அனுசரிக்கப்படவேண்டும். பெண்களை அடிமைப்படுத்தும் நாவையறுப்பது வீரமுள்ள வாலிபர்களின் கடமை என்று துணிந்து கூறுவேன். பெண்களை இழிவு படுத்தும் நூல்களும் சாஸ்திரங்களும் சுட்டுப்பொசுக்கப்படவேண்டும். மேனாட்டைச் சிறந்தே லும் உணர்ந்த யாவருக்கும் பெண்கள் அறிவிலும், ஆற்றலிலும் ஆண்களுக்கு எவ்வகையிலும் இளைத்த வரல்ல வென்று நன்கு தெரியும்.

இன்றயதினம் உலகத்தையே இயக்கிவரும் வாலிபரென் போரின்றில இந்தியாவில் விபரீதமாயிருக்கிறது. அவர்கள் சோம்பேறி வாழ்கையில் ஈடுபட்டு முற்போக்குக்கு முட்டுக்கட்டையாய் இருந்து வாலிபர் என்போரின் பேருக்கு அவமானம் உண்டுபண்ணுகின்றனர். அழும்சமயத்தில் சிரிக்கிறார்கள். சிரிக்கும்சமயத்தில் அழுகின்றார்கள். அவர்களது அறிவும் ஆற்றலும் ஒருமுகப்படுத்தப்பட்டால் நாம் சாதிக்கமுடியாதது எதாவது உண்டா? இவர்கள் ஏழைகளின் தாழ்த்தப்பட்டோரின், பெண் அபலைகளின் காப்பாளராகக்கருதி குன்றாதமனோ எழுச்சியுடன் இருப்பாரேயானால் எதிரிகள் யாவரும் ஓடி ஒழிவதோ, அல்லது சரணடைவதோ நிண்ணம்.

தீங்குசெய்யும் சட்டதிட்டங்களும், மதவெறியர்களும், பணப்பித்தர்களும், அதிகாரம்செய்வோரும் இவர்களது எதிரில் என்ன செய்யமுடியும்? தன்னலங்கருதாத இவர்களை, மனச்சோர்வடையாத இவர்களை, பயம் என்பதரியாத இவர்களை, முன்வைத்த காலை பின்வாங்காத இவர்களை துண்டுதுண்டாய் வெட்டினாலும் ஒவ்வொரு துண்டமும்பலம் பொ

[7ம் பக்கத் தொடர்ச்சி]

னால் வீடுகளும், பூமி அதிர்ச்சியினாலும்அதிக சேதம் உண்டாகாமல் கெட்டியான கடதாசியினால் வீடுகளும், கல்வி அபிவிர்த்திக்காக கலாசாலைகளும், தொழில் செய்வதற்கு பெரிய தொழிலாலையங்களும் மனிதன் மிக உழைப்பால், உண்டாக்குகிறான். மனிதன் மானத்தை மறைக்கவும், வெய்யிலின் கொடுமைக்காகவும், தாங்க முடியாத பனியைக் காக்கவும் மனிதன் கஷ்டப்பட்டு சௌகரியத்திற்கு வேண்டிய ஆடைகளை உற்பத்தி செய்கிறான். மனிதன் இயற்கை உணர்ச்சியாகிய பசியைத் தணித்து உயிர்வாழ, நிலத்தில் தண்ணீர் பாய்ச்சி, உழுது, விதைத்து, கஷ்டப்பட்டு, தான்யத்தையும் இன்பமான பழங்களையும் உழைப்பின் பலனல் உண்டாக்குகின்றான். இன்னும் பலர் சரீரத்தால் உழைத்து உழைத்து மனிதவாழ்கைக்கு வேண்டிய எல்லாப் பொருள்களுக்காகவும் தனித்தனியாகக் கஷ்டப்படுகிறார்கள் ஆகவே வீடுகட்டி, ஆடைநெய்து, பயிர்செய்து, வியாபாரம் செய்து, அரசாங்கத்தையும் ஆட்சிபுரிந்து, இன்னும் மற்ற எல்லாத்துறைகளிலும் வேலைசெய்ய ஒரே மனிதனல் இயலாது. எல்லோரும்சமமாக உழைக்க வேண்டுமென்றால் எல்லோரும் ஒரே வேலையைச் செய்வதல்ல யார் யாருக்கு எந்த எந்த வேலையில் அதிகப் பிரியமும், மிக அனுபவமும் இருக்கிறதோ, [Ex perts] அவர்களை மக்களனைவரும், சோம்பலற்று, சுயநலமற்று குறைந்த நேர உழைப்பும் கூண்டநேர ஓய்வும் அனுபவிக்க வேண்டுமென்றதான் சமதர்மம் கூறுகிறது என்று மிக விரிவாகவும், தெளிவாகவும் ஒரு நீண்ட சொற்பொழிவாற்றினர்.

ருந்திய சூரனுகி வீரனுகி எதிரியை அடிபணியச் செய்புமென்பதில் என்ன சந்தேகம்? இவர்களது பெயரைக் கேட்டமாத்திரத்திரத்தில் எதிரிகள் மனதில் இடிவிழும் என்பதற்கு என்ன ஐயம்?

சுயராஜ்யம் யாருக்கு?

சுயராஜ்யம் யாருக்கு என்ற புஸ்தகத்தின்மூன்றும் பாகம் அகாவது எது வேண்டும்? சுயராஜ்யமா? சமதர்ம ராஜ்யமா? என்ற புஸ்தகம் அச்சாகி விட்டது. புஸ்தகம் வேண்டுமென்று ஏற்கனவே பணமும், ஸ்டாம்பும் அனுப்பியவர்களுக்கு, இவ்வாரத்திற்குள் புஸ்தகங்கள் அனுப்பப்படும். சொற்ப காப்பிகளே கைவசமிருப்பதால், புஸ்தகம் வேண்டுவோர் முந்திக்கொள்ள வேண்டும்.

சுயராஜ்யமா? சமதர்ம ராஜ்யமா? என்ற புஸ்தகத்தில் அடங்கியுள்ள விஷயங்கள்:—

உலக முக்கிய பிரச்சினை, தேசீயமும், மூட நம்பிகையும், சுயராஜ்யமும் தனி சொத்துரிமையும், சமதர்மலக்ஷணம், சமதர்மத்தில் குடும்பம், மதம், ஜாதி, தேசீய அரசுகள் இருக்கா, சமதர்ம ஆக்ஷிமுறை, ஜாதி மதம் ஒழிக்கும் வழி, தனிவுடமையின் கொடுமை, பொதுவுடமை விளக்கம், சமதர்மத்தில் பொருள்கள் விநியோகம், சுயராஜ்யமா? சமதர்ம ராஜ்யமா?

இதன் விலை. 0—3—0

கிடைக்குமிடம்:—

சமதர்ம பிரசுராலயம்,
22, சவுத்பீச்ரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை.

தொழர்கள் விலாசம்.

சி. டீ. நாயகம்
அலிக்ஸ் காட்டேஜ்,
52, பூனமல்லி ரோட்,
பரங்கி மலை சென்னை.

கே. எம். பாலசுப்பிரமணியம்
பி. ஏ., பி. எல்.,
70 அம்மன்கோவில் தெரு,
ஜி. டி. சென்னை.

ஈரோடு முனிஸிபாலிடி

டெண்டர் நோட்டீஸ்.

5360-அடி நீளம் குழாய் போடுவதற்குத் தேவையான பைப்லென் சாமான்கள் சப்ளைசெய்வதற்கு 20-3-34 தேதி 4-மணி வரையில் அடியில் கையொப்பமிட்ட வரால் சீல்வைதத டெண்டர்கள் வாங்கப்படும். எஸ்டிமேட் தொகை ரூ. 12,000. முழுவிபரங்களுக்கு அடியில் கையொப்பமிட்டவருக்கு எழுதவும்.

கே. ஏ. ஷேக்தாவூத்,
சேர்மன்.

தொழிலாளர் துயரம்.

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

(கோவை பஞ்சாலைத் தொழிலாளர்கள் காந்தியாருக்குவாசித்தளித்தவேற்பு இதழில் காணப்படும் துயர் மொழிகள் இதற்குத் தக்கபதில் காந்தியார் அளிக்கவில்லை. மற்றும் இதை ஏலத்தில் விடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.]

முதலாளிகளின்சூட்சியாலும், உலகத்தில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியாலும் பொதுஜனங்களிடம் வறுமை மிகுந்து விலை வாசிகள் குறைத்து விட்டன. இந்த நெருக்கடி ஆலையின் சொந்தக்காரர்கள் தங்கள் சுயநலத்தைப் பெருக்குவதற்கும், பங்கு லாபத்தொகையையும், ஏஜண்டு கமிஷன், டைரக்டர் படி முதலிய வருமானங்களையும் பெருக்கிக்கொள்ளுவதற்கும் அனுகூலமாயிற்று. அதே சமயத்தை அவர்கள் ஏழைத்தொழிலாளர்கள் கூலியைக் குறைக்கவும், அவர்களை திடீரென வேலையினின்று நீக்கித் தெருவில் அலையவிடவும்உபயோகப் படுத்திக்கொள்கிறார்கள்.

பெருவாரியான தொழிலாளர்களுக்கும், கொள்ளையடிப்பதே கொள்கையாகக் கொண்ட முதலாளிக் கூட்டத்திற்கும், நடந்துவரும்இந்தப் போராட்டத்தில் காங்கிரஸ்சபையானது முதலாளிகள் பட்சமே ஆதரவு காட்டி வருகிறது. காங்கிரசின் ஆதிக்கத்தினால் ஏற்பட்ட சுதேசி இயக்கம் முதலாளிகள் லாபம் சம்பாதிப்பதற்கு ஒருவழியாகவும், தொழிலாளர் சமூகத்தை அடக்கி ஆளுவதற்கு ஒரு ஆயுதமாக விளங்கிவருகிறது. அகில சாமான் பகிஷ்காரம் என்னும் கூக்குரலெக்கிளப்பி முதலாளிகள் இந்தியத் தொழிலாளிகளை நசுக்கி வருகிறார்கள். சுதேசி இயக்கமானது, தொலாளிகள் இரத்தக் கண்ணீர் வடிப்பதைக் கவனியாமல் ஆலை முதலாளிகளுக்கு லாபத்தை மட்டும்தவிப்பதிலேயே கண்ணுங்கருத்தாய் இருக்கிறது.

நமது தேசத்தில் இந்தியர்களின் முதலினாலும், இந்தியர் ஆதிக்கத்தினாலும் ஏற்பட்டு இருக்கும் ஆலைகளில் தொழிலாளிகளை நடத்தும் முறையானது, நமது தேசத்திலேயே ஐரோப்பியர் முதலைக் கொண்டும், ஐரோப்பியர்ஆதிக்கத்தைக்கொண்டும் நடத்தப்படும் ஆலைகளின் முறையைப் பார்க்கிலும் மிகவும் கேவலமாய் இருப்பது பரிதபிக்கத்தக்கதாகும். கோவை நகரில் உள்ள பதினேரு பஞ்சாலைகளில் ஒன்பது ஆலைகள் முழுவதும் இந்தியர் ஆதிக்கத்திலேயே நடைபெருகிறது. ஆயினும் இந்த ஒன்பது ஆலைகளிலும் வேலை செய்யும் தொழிலாளர்கள் வேறுதென்னிந்தியாவிலுள்ள எந்த ஆலைகளிலும் காணப்படாத கொடுங்கோலையும், கொடுமைகளையும் அனுபவிக்கள் அதற்காகவே இராப் பகலாய் பாடுபடுகிறார்கள்.

4. இப்படியெல்லாம் இருக்கிற ஒரு கட்சியை ஏன் நிட்டுவார்கள்? பார்ப்பாரே மந்திரிகளாய் இருந்தால்கூட இவ்வளவு சௌக்கியம் கிடைக்காதே!

சொ:- அது கிடக்கட்டும். ஷண்முகஞ் செட்டியாரும்—உஸ்மான் சாகிபும் தேசத்தைக் காட்டிக்கொடுத்து உத்யோகம் வாங்கினார்கள் என்று சொல்கிறார்களே! அது தப்பா!

லோ:- சொல்றேன் கேள்! உத்யோகம் வாங்குவது தப்பல்ல என்பதை தேசபக்தர்களே ஒப்புக்கொள்கிறார்கள். அதுதான் அவர்களுடைய நோக்கமும். ஆனால் வாங்குகிற முறையில் தான் இப்போது வித்தியாசம் இவ்விருவர்களாவது தேசத்தைக் காட்டிக்கொடுத்து வாங்கினதாகச் சொல்கிறார்கள்! அது நிஜமா என்பதைப்பற்றி அப்புறம் பேசுவோம். பார்ப்பனர்களைப் போல வேறு என்னன்னமோ செய்தெல்லாம் உத்யோகம் வாங்கவில்லையே! அது சரிதானே! இருக்கட்டும்.

இந்த ரெண்டுபேரும்தான் தேசத்தைக் காட்டிக்கொடுத்தார்கள்! தேசத் துரோகிகள்!

சர். சி. பி, ராமசாமி அய்யருக்குக் கிடைத்த உத்யோகங்களெல்லாம் எப்படிக் கிடைத்தன? இப்போதுகூட வெகு சொகுசாய் சில ஆயிரரூபாய் மாதம் வருகிறதே அது எப்படி? கனம் சீனிவாச சாஸ்திரியாருக்குக் கிடைத்த உத்தியோகம் எப்படிக் கிடைத்தது? சர் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யருக்கும், செத்துப்போன ரெங்கசாமி அய்யங்காருக்கும் கிடைத்த பெருமை முப்? அவர் என்னமோ! சொம்ப எல்லாம் எப்படி வந்தது தெரியுமா? இவர்களெல்லாம்தானே இன்றைக்கு இந்தத் தேசியப் பார்ப்பனர்களின் கண்ணில் அரசியல் விஷயங்களுக்கு Authorities] பிரமாணங்களாக விளங்குகிறார்கள்! பார்ப்பனப் பத்திரிக்கைகளுக்கு இவர்கள் விளம்பாக்காரர்களாகவும், இவர்களை விளம்பரப் படுத்த பார்ப்பனப் பத்திரிக்கைகளும், இப்படி ஒருவரையொருவர் சொரிந்து கொடுத்துக்கொண்டு இருப்பது தெரியவில்லையா?

ஷண்முகஞ் செட்டியாரும் உஸ்மான் சாகிபும் தேசத் துரோகம்செய்து உத்தியோகம் சம்பாதித்ததற்காக வெறுக்கப் படவேண்டுமென்றால், இதே கணக்குப்படி மேற்சொன்ன கூட்டங்களுக்கு இதே "குற்றத்திற்காக" என்ன தண்டனை விதிக்க வேண்டும் தெரியுமா?

சொ:- சரி! இப்போது எல்லாம் தெரிஞ்சுது. இவர்களெல்லாம்தான் இப்படி! சத்தியமூர்த்தி அய்யருடைய தேசபக்தி கிறார்கள். தொழிலாளி யானவன் தங்களைப்போலவே மனிதப் பிறவியைச் சேர்ந்தவன் என்பதை இந்திய ஆலை மேனேஜர்கள் உணர்வதே இல்லை. மனிதப்பிறவிக்கு வேண்டிய ஓய்வு, நோய்வாய்ப்பட்ட காலத்து சிகிச்சை, மாட்டூட்டிபிராவிடென்டு பண்டு முதலியவைகளை, அளிக்க இந்திய முதலாளிகள் மறுக்கிறார்கள். பெண் தொழிலாளர்களுக்குப் பிரசவ காலத்தில் வேண்டிய உதவியைக் கூடச் செய்ய மறுக்கின்றார்கள். தொழிலாளியை அடிமையாக நடத்தி அவன் எப்பொழுதும் பட்டினியின் கொடுமையினாலும், வேலை போய் விடுமோ என்னும் பயத்தினாலும் வருந்தும் படி செய்கிறார்கள். தொழிலாளியின் படிப்பைப் பற்றியும், அவனது அறிவு வளர்ச்சி, தேக ஆரோக்கியம் முதலியவைகளைப் பற்றியும் கவனிப்பாரில்லை.

லோ:- தம்பீ! அந்தக் கதையைக் கேட்கிறயா? அது சொம்பப் பெரிது. இன்னொரு தடவை சந்தித்தால் சொல்கிறேன். நேரமாய்விட்டது. வா, போவோம்.

"தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தனராதழைப்பவன் தமிழன். வெட்டொன்றுதுண்டு ஒன்று. உயரிய அபிப்பிராயங்கள் அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அறிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.

உள் நாடு ரூ. 3—0—0.

வெளிநாடு ரூ. 5—0—0.

விலாசம்:—

மானேஜர், "தமிழன்"

ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,

சோலார் தங்கவயல்.

நமது புதிய வெளியீடு.

தோழர் சே. நரசிம்மன் எம். ஏ.

அவர்களால் எழுதப்பட்ட

போல்ஷ்விக் முறை.

என்ற தர்க்கவாத நூலை

நீங்கள் படிக்க வேண்டாமா? அப்படியானால்

தனிப்பிரதி விலை அணா ஒன்று தான்

"குடி அரசு" பதிப்பகம், ஈரோடு.



'சுந்தரி ஸ்னே.'

ஒரு சுந்தரிஸ்னே வாங்குவோருக்கு ஒரு கைதட்டை இலவம்.

சுந்தரி ஸ்னே தோலைப் பட்டுப்போல் மிருதுவாகவும், அழகாகவும், பிரகாசமாகவும் செய்வதோடு முகத்தில் உண்டாகும் வேர்வைக்கட்டி, பரு, மரு முதலிய தோல்வியாதிகளையும் போக்கி தோலுக்குப் புத்தியிர் அளிக்கிறது. நறுமணம் கமழ்வது. விலை மலிவானது.

ஏஜண்ட்:- K. V-{R. A.

அடைக்கப்ப செட்டியார்,

52-பந்தர் தெரு, சென்னை.

(4-பக்கத் தொடர்ச்சி)

தயமே உருவாயமைத்த அடிமைகளைப் பற்றி சில வற்றைக் கூறினேன். அடிமை சமூகத்தின் சகோதரிகளைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்லலாமென்று கருதுகிறேன். தினந்தினம் பண்ணை வீட்டுத் தெருவும், புழுக்கடையும் கூட்டுவதிலிருந்து மாட்டுக் கொட்டிலில் சாணி எடுத்து விராட்டி தட்டுவது ஈறாக அவர்களுடைய தினசரி வேலையாகும். நடவு நடுவது, களை எடுப்பது களங்கூட்டுவது முதலிய வேலைகள் அந்தந்த பருவ காலத்தில் செய்யப்படும் உத்தியோகங்களாகும். உலகமே உண்டு களிப்பதற்கு உழைத்துப் போடும் மூல ஜாதியான ஆண் அடிமைகளை கொடுமைக்காரமிராசுதார்கள் அடித்து உதைத்துக் கஷ்டப்படுத்துவது ஒரு புறமிருக்கட்டும். பெண்பாலார்களையும், அதுவும் கர்ப்பத்தோடு இருக்கும் சகோதரிகளைக் கதறக்கதற அடிப்பதுமான மகத்தான கொடுமைகளை நீங்கள் பார்த்ததுதான். மார்துணி போட்டுக் கொள்வது, இடுப்பில் குடம் தூக்குவது, பொன் நகைகள் போட்டுக் கொள்வது, அடிமை ஜாதிவழக்குக்கு பங்கமென்று சொல்லப்படுகிறது. கைப்பிள்ளையைக் கரையில் போட்டு விட்டு, குனிந்த தேகம் நிமிராமல் நடவு வேலை செய்யும் சகோதரிகளைப் பண்ணை அதிகாரிகள் செய்யும் கடுமை யாவரும் அறிந்ததே! கரையில் போட்ட கைபிள்ளை பாலுக்கு ஏங்கி வீர் வீர் என்று கத்துகிறது. பண்ணை அதிகாரிகள் உத்திரவு பெற்று அங்கம் பூராவும் படிந்திருக்கும் சேற்றை அலம்பிக்கொண்டு, அழுத பிள்ளைகளுக்குப் பரிபூரணமாக பால் கொடுப்பதற்குள் பண்ணை அதிகாரிக்கு ஆவேசம் வந்து விடும் பறப்பையல் பிள்ளைக்கு பால் கொடுத்துக் கொண்டிருந்தால் அப்பன் வீட்டு வேலையை யார் செய்வதடி என்று..... .....,!!! என்பது போன்ற தகவல் வம்ச பரம்பரையில் புத்திர பௌத்திர பாரம் பரியமாகக்கற்றுக்கொண்டிருக்கிற ஆபாச வார்த்தைகளோடு இரண்டு உதையும் கொடுத்து நடவு தலையில் இறக்கி விடுகிறார்கள். கர்ப்ப ஸ்திரீகளாக இருந்தாலும் இதே கதிதான்.

மேலே சொல்லப் பட்ட மகத்தான கொடுமைகளைத்தங்கள் சமூக வாழ்க்கையில் ஒரு பெரிய பாக்கிய மாகக் கொண்டு சாந்தியடைய "வந்த வழி" "வினைப்பயன்" 'போனஜென்மத்தின் பாவம்' போன்ற புராதன காரணங்கள் ஒரு கருவியாகச் சொல்லப்படுகிறது. இக்கருவிகளை என்றும் அழியாமல் நிலை நிறுத்த "கடவுள் கட்டளை" என்ற செப்படுவித்தை ஒன்று அநாதியாக இருந்து கொண்டிருக்கிறது. பணக்காரத்தன்மையும், ஏழ்மைத்தன்மையும் நிலை நிறுத்துவதற்கு இந்தக் கடவுளே மூல பலமாக இருக்கிறது. கடவுள் பேரால் இது போன்ற பல்லாயிரக் க்க வேண்டும் என்கிற இறுமாப்பும் கணக்கான கொடுமைகள் நம் நாட் பரிபூரணமாக இருக்கிறது என்பதை டில் நிகழ்ந்து கொண்டிருப்பது உங் இம் மகோதாரை பலமாக ஆட்சேபி களுக்குத்தெரியும். உழைக்கும்ஜாதி, ப்பதிலிருந்து சவிஸ்தாரமாகத்தெரிந் தின்று கொழுக்கும் ஜாதி என்று துகொள்ளலாம். இக் கூட்டத்தாரை இரு ஜாதிகள் உலகம் பூராவும் விபா க்கொஞ்சம் கூட மனம் இளகாமல் பித்து இருக்கும் கொடுமைகளை ஆதரிக்கும் கல்நெஞ்சம் படைத்த விளக்கிக்காட்டவே, தமிழ் நாட்டு மி சட்டசபை மெம்பர்களும் பலர் இருக் ராசுதாரார்கள் பண்ணையடிப்பவர்களு கிறார்கள். அவர்கள் எல்லாம் யார் க்குச் செய்யும் கொடுமைகளை உதார என்பது உங்களுக்குத் தெரியும். ணமாக எடுத்துக் கொண்டு இது அவர்கள்தான் பகிதாகம் என்பதை வரையில் சொல்லி வந்தேன். இன்னது என்று உணராதவர்கள் என்பதோடும், பசித்தவனுக்கும், இனி நின்று கொழுக்கும் ஜாதி உழைப்பவனுக்கும், தொழிலாளிக் யைப் பற்றியும் அதை நிலை நிறுத் கும், விவசாயிக்கும் பிரதிநிதியாக திக்கொள்ள செய்யப்படும் சூழ்ச்சிக சட்டசபைகளில் அங்கம் வகிப்பவர் ளையும் கொஞ்சம்சொல்லலாம்என்று களாகும் இவர்கள் எல்லாம் பெரு நினைக்கிறேன் சிற்றரசர்களுக்கும், ம்பாலும் பணக்காரர் ஜமீன்தார்,சிற் ஜமீன்தார்களுக்கும் சமஸ்தானாதிப றரசர், மத பாதகாப்பாளர், ஒருபொ திகளுக்கும் பாதகாப்பு என்றபெரிய ய்யிற்கு ஒன்பது பொய்யை உற்பத்தி கூச்சல் எங்கு பார்த்தாலும் கேட்கப் செய்யும் வக்கீல்கள் போன்றவர்களே படுகிறது. இக் கூச்சல் பிரபல அர யாகும். இன்றைய பொதுஸ்தாப சியில் வாதிகளுக்குள்ளும், சர்க்கார் னங்களில் இக் கூட்டத்தாரே ஆதிக் அறிக்கை, வட்டமேஜை மகாநாடு, கம் செலுத்திக் கொண்டிருப்பதால் காந்தி இர்வின் ஒப்பந்தம் போன்ற ஏழை உலகத்துக்கு நன்மை வைகளிலும் இரண்டறக் கலந்து என்பதை எப்படி எதிர்பார்க்கமுடி தாண்டவமாடுகிறது. இந்த சப்தத் யும்?

தின் அந்தரங்க நோக்கம் என்ன? மிராசுதார்களுக்குச் சொந்தமான சரித்திர பூர்வமாகப் பணக்காரர்கள் நிலங்களின் இந்தியை சர்க்கார் அதி செய்யும் கொடுமை தெரிந்திருக்கும் கப்படுத்தி விட்டதாக எங்கு பார்த் போது அக் கூட்டத்திற்கு பாதகா தாலும் மிராசுதார் மகாநாடு கூடி ப்பு அளிப்பதிலேயே சர்க்காரின் போட்ட சத்தமும், கவர்னர் பேட்டி விசேஷகவனமும், தேசிய மகாசபை களும் தற்காலம் நடந்து கொண்டிரு என்று சொல்லப்படுகிற காங்கிர க்கும் சம்பவங்களாகும். கிஸ்தி உய வின் மூலாதாரத் தீர்மானமும் இரு ர்வுக்கு நிலச்சுவான்தார்கள் சொல் ந்தால், கர்ண பரம்பரையாக நசுக்கப் லும் காரணங்கள் மார்க்கெட்டு நில படும் ஏழை உலகம் கடைத்தேறு வரங்கள் மோசமாக இருக்கிறது. வதற்கு வழி உண்டா? ஏழை உல பொருளாதார நெருக்கடி உலகத்தை கிற்கு ஏகாதிபத்திய செருக்குக்கொ யே வாட்டுகிறது. தானிய விலைகள் ண்ட எந்த அரசாங்கமும் நல்ல உத சம்பலாகப் போய்விட்டது, கிஸ்தி விசெய்வதாக எதிர்பார்க்க முடியவே சுமையை மிராசுதாரர்களாகியநாங்கள் முடியாது. அப்படி ஏதாவது செய்ய தாங்க முடியாது என்பதேயாகும். முன் வந்தாலும், அதுவும் பொது இக் கூச்சலுக்கு சர்க்காரும் கொஞ் ஜன அபிப்பிராயம், சட்டசபை ஆத சம் செவி வணங்கினார்கள். 100-க்கு ரவு என்கிற சலுகை மீது இறந்து 12½ விகிதம் கிஸ்தி வஜா செய்யப்ப பட்டுவிடுகிறது. உதாரணமாக, சமீ ட்டது என்றாலும் இந்த கவர்னர் பத்தில் நமது சென்னை சட்டசபை பேட்டிகளும், மிராசுதார் மகாநாடுக யில் பிரஸ்தாபிக்கப்பட்ட இனம்தார் ளும் இரண்டு படி நெல்லுக்கு இராப் களின் மசோதாவின் முடிவையும், பகல் உழைக்கும அடிமை விவசாயி அதன் பிறகு நடக்கும் கிளர்ச்சியை க்கு ஒருபடி நெல் சேர்த்துக்கொடு யும் சிந்தனை செய்து பாருங்கள். க்க சிபார்சு செய்தார்கள் இல்லை. பிரஸ்தாப மசோதாவில் கொஞ்சம் உலக நெருக்கடி இந்த கூச்சல்களு நன்மை கிடைக்கும் என்று ஏழை க்கு தலைவணங்கிய சர்க்காரும் அடி உலகத்தின் சார்பாக எதிர்பார்க்க மை விவசாயிக்கு அரைப்படி நெல்லு ப்பட்டது. அதற்குள் இனம்தார் க்காவது அபர்யம்அளித்து, மிராசுதா களின் கூச்சல் பலப்பட்டு விட்டது. களுக்கு சிபார்சு செய்தார்களா என் இக் கூச்சலில் பிரபலமாக விளங்குப றால் இல்லவேயில்லை- இந்த அர வர்கள் தஞ்சை ஜில்லா வாசிகள் சாங்கத்தின் குடை நிழலில் எப்படி என்பதை இங்குக் குறிப்பிடாமலிரு காலந்தள்ள முடியும் என்பதை யோ ப்பதிற்கில்லை. புத்திகெட்ட பரா சித்துப் பாருங்கள். ஏகாதிபத்ய தீன காலத்து அரசர்கள் பைத்தியக் செறுக்குக்கொண்ட அரசாங்க நிழ காரத்தனமாய் இனம் வழங்கி விட்ட லில் சஞ்சரிக்கும் தனவந்தர்களின் ஒரு காரணத்தை ஆதாரமாய் வைத் கொடுமைகளுக்குத்தக்கஒரு பரிகார துகொண்டுஅடிக்கும்கூற்றுவையும் த்தை செய்ய வேண்டுமென்ற ஒரு சர்க்காரும் பொதுஜனத் தலை பெரிய நோக்கத்தோடு தான் சென்ற வர்கள் என்று சொல்லப்படுகின்ற ஆண்டு ஈரோட்டில் சுயமரியாதைத் இந்திய பிரபலஸ்தர்களும் அறியா தோழர்கள் ஒன்று கூடி, ஒரு வேலை தது அல்ல. இனம்தார்களுக்கு எப் த்திட்டதை நிர்மாணித்தார்கள். பொழுதும் கஞ்சிக்கு வழியில்லாத அந்தத் திட்டம் இனி கூடப் போ ஒரு கூட்டம் எக்காலத்திலும் இரு

கும் மகாண சுயமரியாதைமகாநாட் டின் அங்கீகாரத்தைப் பொறுத்து இருக்கிறது. அதை அடிப்படை யாகக்கொண்டு இன்றுகூடியிருக்கும் சமதர்மிகளாகிய நாம் அரசியல் சபைகளைக் கைப்பற்றினால் தான், ஏழைகள் அடைய வேண்டியவைக ளில் சிலவற்றிலும் அடைய முடி யும். இது சம்பந்தமான நல்ல ஓர் முடிவை இம்மகாநாட்டில்செய்வீர்கள் என்று நம்புகிறேன்.

நாம் சொல்லுவது என்ன?

இதுவரை சொல்லி வந்த கொடுமைகளை அனுபவிக்க ஒரு பெரிய கூட்டமும், சுகபோகத்தை அனுபவிக்க ஒரு சிறிய கூட்டமும், அழுத்தமாகக்கொண்டிருக்கும் புராதனமான எண்ணத்தில் ஒரு பெரியமாறுதலை உண்டுபண்ணவே, சமதர்மிகளாகிய நாம் நினைக்கிறோம். ஏழை பணக்கார வித்தியாசம் கூடாதென்பதை பசித்தவனுக்கும் புசித்தவனுக்கும் பகிரங்கமாகச் சொல்லுகிறோம் என்றாலும் சமதர்மிகளுடைய நிலைமை இரு சாராரிடத்திலும் கேவலமாயிருக்கிறதென்பதை சொல்லாமல் இருக்க முடியவில்லை. இதற்கு காரணம் ஏழையாய் இருக்கும் ஒருவனும், பணக்காரனை இருக்கும் ஒருவனும் ,தங்கள் தங்களுக்கு ஏற்பட்ட சுகத்துக்கு சொல்லும் மூலகாரணங்களேயாகும்: இவ்விரு சாராரும் தங்கள் தங்களுக்கு ஏற்பட்ட சுகம், துக்கம் தெய்வாம்சம் உடையதாக இருக்கும் என நினைக்கிறார்கள். கடவுள் மதவாதிகள் கட்டிவிட்ட இந்த கற்பனைகளைக் கருவியாகக்கொண்டு சமதர்மிகளாகிய நம்மை பலங்கொண்ட மட்டும் எதிர்க்க முன் வருகிறார்கள். இதனால் சமதர்ம வாதிகளுக்கு மதம்,கடவுள், மோட்சம்,நரகம், பாபம், புண்ணியம் பழக்க வழக்கம் போன்ற புராதன கோட்பாடுகள் எல்லாம் புறமபானதாக இருந்துகொண்டிருக்கிறது.

ஆகவே, இக் கற்பனைகளை அடியோடு ஒழிப்பதுதான் சமதர்மிகளின் முதல் வேலை என்று கண்டிப்பாகச் சொல்லுகிறேன். கடவுள் மத கற்பனைகளில் மக்களுக்கு இருக்கும் பலமான பக்தியை நாங்கள் அறிவோம். என்றாலும் புது உலகச் சரித்திரத்தை உற்று நோக்கும் சமதர்மமிகளாகிய நீங்கள் அதற்கு செவிசாய்க்க முடியாது. நமது பரம் பரையில் கடவுளுக்கும், மதத்துக்கும் செய்த கைம்மாறும் பக்தி பரவசங்களும் சரித்திரத்தில் மலிந்து கிடக்கின்றன. இந்தியாவை ஆண்டு வந்த கடந்த கால அரச வர்க்கத்தார், தனது இராஜீய நிர்வாகத்தில் கடவுளையும்,மதத்தையும் கவனிக்க வேண்டுவதே முதல் வேலையாகச் சொல்லப்பட்டது. அந்த அரச வர்க்கத்தின் பரம்பரையும், க்ஷேமலாபங்களும் எங்கே? அவர்கள் பேரைச் சொல்வதற்குக் கூட ஆள் இல்லையே!அவர்கள ஆண்டஅரண்மனைகளெல்லாம் எரு க்கு முளைத்து வௌவால் அடைந்து

இருள் சூழ்ந்து கேட்பாரற்ற இடிந்த குட்டிச் சுவர்களாகக் கிடக்கும் காசுமீ கலையும் நம் கண்முன்னேநாம்பார்க் கிறோம். கடவுளையும், மதத்தையும் கட்டியழுத காரணமே இன்று அன் னிய ஆட்சி ஏற்படுவதற்கு மூலகார ணம் என்பது அத்தரங்க சமாச்சார மாகும். இவைகளை எல்லாம் அனு பவ பூர்வமாகக் கவனித்துக்கொண் டிருக்கிற நம் தேச மக்களுக்கு, இன் றும் கடவுள் மத உணர்ச்சி ததும்பு வது என்றால் அதைப் பார்த்துக் கொண்டு சமதர்ம வாதிகளாகிய நாம் எப்படி சும்மா இருக்க முடியும்? இந்தக் கடவுள் மத கற்பனையை அப் படியே வைத்துக்கொண்டு சீர்திரு த்தி விடலாமென்று மனப்பால் குடி த்தவர்கள் ஆசாரி புருஷர்களாகவும், அவதார புருஷர்களாகவும், மகாத் மாக்களாகவும் ஆனார்களே யொழிய எழைகள் அடைந்த பலன் ஒன்று மில்லை. அவ்வக்காலங்களில் தோ ன்றிய சீர்திருத்த மகான்களே சமத ர்மப்பிரசாரத்துக்குமுற்றும் தடைக் கல்லாக இருந்துகொண்டும் வந்தார் கள். நம்முடைய சமதர்ம பிரசாரத் துக்கு தோழர் காந்தியார் ஒரு பெ ரிய முட்டுக்கட்டையாக இருந்து கொண்டிருப்பதால், கடவுள் மத ஆதிக்கத்தையும், பணக்கார ஆதிக்க த்தையும் ஒழிப்பதோடு காந்தியத் தையும் சேர்த்து ஒழிக்க வேண்டிய வேலை சமதர்மிகளுக்கு ஏற்பட்டிருக் கிறது. ஆகவே, இதுவரைக் கட்டி யழுத கடவுள் மதங்களைக்கொஞ்சம் பரீட்சார்த்தமாகவாவது ஒதுக்கி வை த்து மாதிரி பார்க்கவேண்டும் என்ற யோசனையை சமதர்மத்துக்கு புறம் பான தோழர்களைக் கேட்டுக்கொள் ளுகிறேன். சமதர்மத்துக்குப் புறம் பான பல்வேறு கொள்கையுடைய கடவுள் மதவாதிகள் தங்கள் ஆதிக்க த்தைக்கொண்டு சமதர்மிகளாகிய நம்மை எதிர்க்கக் கையாளும் அவர்க ளுடைய வேத திட்டம் எவ்வளவு பலவீனத்தோடு காணப்படுகிறது என்பதைப் பாருங்கள். ஒவ்வொரு மத வாதிகளும், தங்கள் தங்கள் மத க்கொள்கையே கடவுளால் சொல்ல ப்பட்டது, என்று சொல்லி நம்மை எதிர்த்தாலும், எல்லா மதவாதிகளும் ஒன்று சேர்ந்து தோழமையுடன் எதிர்க்க வல்லமையற்று இருக்கிறார் கள் என்பது தெளிவாகவில்லையா? இதிலிருந்து பார்த்தால் மத வாதிக ளுக்கு ஏற்பட்டிருக்கும் பலவீனம் ஒருவாறு விளங்கிவிடும். கடவுளை க்காப்பாற்றும் மத வாதிகளையும், பணக்கார வாதிகளையும், அடியோடு ஒழித்துச் சமதர்மத்தை நிலவுவத ற்கு இன்னொரு காரணமும் உண்டு. அதாவது மதத்துறையில் பாடி பிடி த்துக் கிடக்கும் பொருளாதாரமே யாகும். உலகில் உள்ள பெரும் பகு திகளான பணம், நிலம் முதலியவை யார்கள் கூடி, பொருளாதார மகா நாடு நடத்துகிறார்கள். இம் மகாநா டுகளிலும் பொருளாதார நிலை பற்றி பட்டிருக்கிறதா என்பதைக் கவனித் துப் பாருங்கள். இந்தப் பொருளா தார புத்திசாலிகளுக்கு, மத பொக்கி ஷத்தில் அடைத்து கிடக்கும் கோடி க்கணக்கான பொருள், அவர்கள் கண்களுக்கே படுவதில்லை. பட்டா லும் அதைப்பற்றிச் சிந்திப்பதே யில்லை. அதோடு மதத்தின் பே ரால் கோடிக்கணக்காகப்பணக்காரர் கள் செய்யும் பொருள்களைப் பொறு த்தாவது எந்தப் பொருளாதார நிபு ணர்களாவது கவனம் செலுத்தினார் களா வென்பதை யோசித்துப் பாரு ங்கள். மதத்தின் பேரால் இவர்கள் செய்யும் திருட்டு கூற்றுகள் எல்லாம் எழைகளுடைய உழைப்பு அல்லவா? ஊதியமில்லாமல் உழைத்துக் கொடு த்த நம் எழைகள் பணம் தாசில் கோர்ட்டுவிவகாரம் போன்றதர்வினி யோகங்களில் இறைக்கப்படுவது அனந்த கோடிகளாகும். இம் மகத் தான கொடுமைகளை ஆதரிக்கிறவர் களையும் அவைகளுக்குப் பாதுகாப்பு அளித்துக் கொண்டிருக்கிற எந்த அரசாங்கமும் அழிய வேண்டும் என்று சொல்வதில் என்ன குற்றம் இருக்கிறது. நேரம் அதிகமாகி விட் டபடியால் நான் சொல்வதை இதோ டு நிறுத்திக்கொண்டு, முடிவுரையாக சிலவார்த்தைகளைச்சொல்லாம்என்று நினைக்கிறேன்.

சமதர்ம உணர்ச்சியுள்ள தோழர் களே! இதுவரை நான் சொல்லிவந்த வைகள் எல்லாம் எனது மனதிற்கு சரி என்று பட்டதையும், அனுப வ பூர்வமாகக் கண்டதையுமே சொல்லி வந்தேன். இன்னும் உலகத்தில் கட க்கும் கொடுமைகளைப் பற்றி மகா நாட்டிற்குத் தலைமைவகிக்கும் உலக அனுபவம் வாய்ந்த தோழர் விரிவாக சொல்லுவார்கள். சமதர்ம வாதி களாகிய நமக்குத்தக்க வழி காட் டியாக தோழர் சிங்காரவேலு இருப் பதால் நமக்கு எவ்வித கவலையும் இல்லை நமது நிலைமை தற்சமயம் மிக நெருக்கடியானது என்பதை சொல்ல வேண்டுவதில்லை. இது வரை நம்மை எதிர்த்து வந்தவர்க களோடு அரசாங்கமும் ஒத்துழைக் கத் தலைப்பட்டிருக்கிறது. ரகசிய போலீஸ் மேல்பார்வையிலேயேநாம் இருந்து கொண்டிருக்கிறோம். அதைப்பற்றிக் கவலையில்லை. நமது சமதர்ம திட்டத்தை நிலைநிறுத்த நியாயமாகச் செய்யும் கிளர்ச்சிகளி னால், நமக்கு ஏற்படும் எத்தகைய எதிர்ப்புகளையும் முழுபலத்தோடு தாங்கிக்கொள் வோம். சிறை வாசம் கிடைக்கலாம். தூக்குத் தண்டனை ஏற்பட்டாலும் ஏற்பட லாம். மனித வாழ்வில் சாவது என்பது நிச்சயம். சோற்றுப் பர்வ தமாக இருந்துகொண்டு, இந்த அடி மை உலகத்தில் இயற்கையாகச் செ த்து மடிவதைவிட, சமதர்மத்துக் காகத்துக்கு மேடையில் செத்து மடிவது என்ற நியதியை சமதர் மத் தோழர்களாகிய ஒவ்வொருவரும் கொள்ளவேண்டுமென்பதே எனது யோசை. இத்துடன் எனது வர வேற்பு பிரசங்கத்தை முடித்துக்கொ ண்டு, மீண்டும் உங்கள் அனை வரையும் மகிழ்ச்சியுடன் வரவேற்ற இம் மகாட்டுக்கு தோழர் எ-ராம நாதன் எம். ஏ. பி. எல். அவர்களை தலைமை வகித்து நடத்தித்தர க்கோருகிறேன்.

உத்திரவாதமுள்ளது.

கியாரண்டி கொடுக்கப்படும்.

எவ்வித மருந்து சாப்பிட்டும் தீராத வியாதிகள், குஷ்டம், கூயம், ரீரழிவு, குன்மம், இருந்தால் இதில் அவசியம் குண மாகும். இதாவியாதிகளுக்கு எல்லா ஔஷதங்களும் கிடைக்கும்.

தாம்பா பஸ்பம் அனுபானத்துடன் ½ மண்டலம் ரூ. 25.

ஏழைகளுக்கு ரூ. 12-8-0.

தாளக பஸ்பம் அனுபானத்துடன் ½ மண்டலம் ரூ 25.

ஏழைகளுக்கு ரூ 12-8-0.

ஆர். எம். நாராயணசாமி,

தன் மந்திரி வைத்தியசாலை, பழனி.



"பானியால் டூத் பேஸ்ட்"

பல்லுக்கு உறுதியளிக்கவல்லதென பல நூற்றாண்டுகளாக ஆன்றோர் களால் போற்றப்படும் ஆலம் விழுதின சத்தினால் தயார்செய்யப் படுவது, வாயை சுத்தம் செய்து, சுறுசுறுப்பைக் கெடிப்படுத்தி, பற்களுக்கு உறுதியளித்து, பற்களை முத்துப்போல் பிரகாசிக்கச் செய்கிறது.

ஏஜண்ட்கள் தேவை.

பானியால் கம்பெனி "லெனின் அவஸ்,"

தியாகராய நகர், சென்னை

மணம் நிறைந்தது! குணம் உயர்ந்தது!!

இதைச் சாப்பிடுங்கள்.

காபி, ஓவல், டீ, கொக்கோ முதலான பானத்திற்குப்பதி லாக அரேகவிகமான மூலிகையின் வேர், பூ, வித்து வகைகளால் தயார் செய்யப்பெற்றுள்ள

சுகானந்த பானச் சூரணம்.

ஒன்றே யாவராலும் விரும்பத்தக்கது. வெட்டைச்சூடு, ரீரழிவு, நீர்க்கடுப்பு, காமாலை, சோகை, அஜீரணம், பலஹீனம் ஆகிய வியாதிகளை அடியோடு போக்கி இரத்த சுத்தி, ஞாபகசக்தி சுறுசுறுப்பு இவைகளை பூரணமாகத்தரத்தக்கது.

காலை மாலை இரண்டு வேளைகளிலும் மற்ற பானங்களைப் போன்றே உபயோகிக்கலாம். இதனை ஒருமுறை வாங்கி சாப்பிடுங்கள்.

1-டப்பியின் விலை அணா 10.

வியாபாரிகட்கு தக்க கமிஷன் உண்டு.

விலாசம்:— தேசிகஷண்முகமூர்த்தி தமிழ் வைத்தியசாலை

திருச்சோஷ்டியூர், (ராமநாதபுரம் ஜில்லா.)

[3-ம்பக்கத்தொடர்ச்சி]

கிரைய மதிப்பென்ன, வரும்படி என்ன, வேறு தொழில் செய்வோர் ஒவ்வொரு தொழிலிலும் எத்தனை; அத்தொழில் ஒவ்வொன்றிலும் முடக்கியிருக்கும் பணம் எவ்வளவு, வரும்படி எவ்வளவு, ஒவ்வொரு தொழிலாளரும் அத்தொழிலுக்கு வேண்டிய பணத்துடன் இருக்கிறார்களா, அல்லது போதியபணம் இல்லாமல் பணமுடைப்படுகிறார்களா, மேலே கண்டஇனத்தார்கள்நிலத்திலோ, தொழிலிலோ முடக்கியதுபோக அதிகமான பணம் வைத்திருக்கிறார்களா, இருந்தால் எவ்வளவு எங்கே, என்னவட்டியில் இருக்கிறது, ஒரு தொழிலிலுமில்லாமல் தபால் ஆபீசிலோ, கூட்டுறவு சங்கங்களிலோ, பிற பாங்குகளிலோ வட்டிக்கடைகளிலோ, பணம் போட்டு வட்டியிலிருந்து சாப்பிடுகிறவர்கள் எத்தனை, அத்தொகை என்ன, அவ்வித வரும்படி எவ்வளவு, இவைபோன்ற விவரங்களை கூடியவரை துள்ளிய மாகக் கணக்கிட்டுக்கொள்ள வேண்டும். பிறகு பணம் படைத்தவர்களை அப்பணத்தைக் கூட்டுறவு சங்கத்தில் போடவும், பணம் வேண்டியவர்களை அதிலிருந்து வாங்கவும் கூடியவரை கட்டுப்பாடு செய்ய முயலவேண்டும். பிறகு பயிரிடுபவர்களுள் பணம் இல்லாதவர்களை சொற்பம் சொற்பமாகக் கூட்டுறவு சங்கம் மூலமாகப் பணம் சேமிக்க ஊக்கப் படுத்தவேண்டும். பணம் சேமித்து வைத்திருப்பவர்களை நிலம் வாங்க ஊக்கப்படுத்தி அவ்வழியில் உதவி செய்யவேண்டும். பயிரிடாமல் நிலம் வைத்திருப்பவர்களைப் பயிரிடுபவர்களுக்கு விற்கவும், அதை வாங்கப் பயிரிடுபவர்களிடம் பணக்குறைவு ஏற்பட்டால் கூட்டுறவு சங்கங்களிலிருந்து கடன் கொடுக்கச்செய்யவும் உதவி செய்யவேண்டும். இவ்வாறு செய்த முயற்சியின் முடிவை அவ்வப்போது குறித்து வைத்துக்கொண்டு ஆண்டுதோறுமாவது, அல்லது அரை ஆண்டு தோறுமாவது முதலில் கணக்குப்பார்த்த புள்ளிகளுடன் ஒப்பிட்டுத் தங்கள் தேர்ச்சியையும், அதில்வந்த அநுபோகத்தையும் "புரட்சி" மூலமாக வெளியிட்டு வரலாம். இதனால் பல இடங்களில் வேலை செய்வோர் ஒருவர் மற்றவரிடமிருந்து வேண்டியதை அறிந்துகொள்ளவும் இடமாகும். அறிவியல் முதலிய மகாநாடுகள் கூடும்பொழுது இவைகளைப்பற்றி ஏட்டுச்சுரைகாயாக இல்லாமல் செய்கை அறிவோடு பேசும் ஆற்றலுமடைவோம். அறிவு இயக்கத்தவர் வெறும் பேச்சுக்காரர்கள் என்ற கூற்றுக்கும் இடமாகாமலிருப்போம்.

மேற்சொன்ன திட்டப்படி நடப்பதால் முதலில் பயிரிடும் பாட்டாளி கண்ணிலைமையை அடைகிறான் என்பது வெளிப்படை. தானும் தன் மனைவி மக்களும் தங்களுக்குள்ள ஆற்றலையும் நேரத்தையும் தங்கள் நிலத்திலேயே செலவிட்டு வரும்படியைப் பெருக்கி வாழ்கிறார் உண்டு வாழ்கிறார்கள். இப்படி நாடெங்கும் அல்லது நாட்டின் பெரும்பாகத்தில் நடைபெறுவதால், நாட்டின் விளைவு பெருகி, நாட்டில் உள்ளோர் பலரும் நன்மையடைகிறார்கள். நிலத்தை வைத்துக்கொண்டு நிலத்தில் வேலைசெய்யாமல் பிறர் உழைப்பால் வந்த வரும்படியைச் சுரண்டித் நின்று கொண்டிருந்த, வரும்படி போதாதென்று முணக்கிக்கொண்டும், வரிப்பழு அதிகமென்று கதறிக்கொண்டும், இருந்த நிலைமை மாறி, நிலத்தை விற்ற தொகையால் தன் தொழிலைப் பெருக்கியோ, அல்லது தொழிலில்லாவிட்டால் கூட்டுறவு சங்கத்திலோ, தபால் ஆபீசிலோ, அல்லது தூரைத்தனக்கடனிலோ தன் முதலைப்போட்டு விட்டு, குறிப்பிட்ட காலத்தில் வட்டியை வாங்கியோ, தனக்கும் கவலையில்லாமல், பிறருக்கும் இடையூறில்லாமல், வாழ இடமாகிறது. இதனால் பாட்டாளி, நாட்டார், முதலாளி யாவரும் நலம் அடைகிறார்கள்.

முன்னேற்றம்.

பிரிட்டிஷ் மலேயா நாடுகளில் முதன்மை வாய்ந்த நமது சுயமரியாதை இயக்கப்பத்திரிகை.

மலாய் நாட்டிற்கு வருட சந்தா வதில்லிங். 5—0—0.

வெளிநாடுகளுக்கு ரூ. 8-0-0

'பிரசண்ட மாருதம்'

சுயமரியாதை இயக்கக்கொள்கைகளை அடிப்படையாகக்கொண்ட சிறந்த மாதப்பத்திரிகை

உள்நாடுவருடசந்தா ரூ. 1—0—0
வெளிநாடு ..... ரூ. 1—8—0
தனிப்பிரதி 1½ அணா

விலாசம்:—
மானேஜர்.
பிரசண்டமாருதம் ஈரோடு.

The Right of Temple Entry.

By.

P. Chidambaram B.A., B.L.M.L.A.

Price Re. 1. Only.

SOME OPINIONS.

"The book is undoubtedly an *intellectual feast and is characterised by a remarkable measure of research.* It is both interesting anb instructive, each chapter containing in a nutshell important and thought-provoking statements....The publication of this book is very opportune in as much as Mahatma Gandhi is even now touring the whole of South India for Harijan uplift in general and to gauge and guide public opinion with reference to the Temple-Entry Bill which has been introdnced in the Indian Legislative Assembly. The Government have invited the opinions of organizations and prominent leaders of the people. A book like this, which is at once a *treasure of learning and feast of logic*, will be of very great help both to those who wish to submit their views and to the Government of India. Every Government official, in particular, ought to own a copy of this book. The book is very powerfully and carefully written and will more than repay a perusal."

"The Bombay Chronicle," 14—1—34.

ஃ ஃ ஃ

"This work most opportunely meets the needs of the time, ... Can you not bring a Tamil translation of this important book?"

Swami Vedachalam, the famous Tamil Scholar of Pallavaram.

ஃ ஃ ஃ

"Mr. P. Chidambaram Pillai's book on the Right of Temple-Entry is a monumental work on the subject aud deals with the question elaborately from the historical and legal stand-points. ..... It may be that some feel the smell of his infiifference to things of religion and contempt for caste glories, but it cannot be gainsaid that he has laid the Hindu community under a deep debt of obligation by embodiying his very useful researches in this book of his."

K. Subramania Pillai M. A., M. L., Advocate, Tagore Professor of Law, Tinnevelly.

ஃ ஃ ஃ

"I feel really that it is a challenge to the Sanatanists especially those aggressive ones of the type of Sankarachariya of Puri. I am sure that it is not too much if I say that it is the fruit of a laborious research which any Tamilian can well be proud of."

S. Guruswamy, B. A. former Editor of 'Revolt.'

Copies can be had of:-

"Kudi Arasu" Publishing House, Erode.
R. B. P. Society Ltd., Erode.

குடி அரசு பதிப்பக புஸ்தகங்கள்.

மதமும், லெனினும்.
விலை அணு 0—4—0

கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

பொதுவுடமைத்தத்துவங்கள்.
விலை அணு 0—3—0.

இராமாயண ஆராய்ச்சி.
முதற்பாகம் பாலகாண்டம் அணு. 0—4—0
இரண்டாம் பாகம் அயோதயா காண்டம் அணு. 0—8—0

ஞானசூரியன்.
பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணு. 0—4—0

ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.
இதன் விலை அணு. 0—2—0.

தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.
இதன் விலை அணு 0—3—0

பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.
இதன் விலை அணு 0—4—0

மேயோகூற்று மெய்யா? பொய்யா?
இதன் விலை அணு 0—3—0

அகத்தியர் ஆராய்ச்சி.
இதன் விலை அணு 0—2—0

ரஷ்யாவைப் பற்றி பெர்னட்ஷா.
விலை அணு 0—1—0.

கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?
இதன் விலை அணு 0—2—0

கடவுளும், பிரபஞ்சமும்.
இதன் விலை அணு 0—4—0.

சத்தியாக்கிரகமா சண்டித்தனமா?
விலை பை. 0—0—3

இராமசாமியின் இலங்கை உபன்யாசம்.
விலை பை. 0—0—6

இந்தியாவின் குறைபாடுகள்.
டாக்டர் பராஞ்சிபை எழுதியது விலை அணு. 0—8—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணு. 0—6—0
Crux of the Indian Problem இங்கிலீஷ் விலை ரூ. 1—0—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணு. 0—8—0

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.
விலை அணு. 0—2—0

சுயமரியாதைப்பாடல்.
விலை அணு 0—2—0.

கதர்-மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)
விலை அணு 0—2—0

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

பகுத்தறிவு வெளியீடுகள்.

பெண் ஏன் அடிமையானாள்?
இந்நூல் ஈ. வெ. இராமசாமி அவர்களால் கற்பு, காதல், விபசாரம், கைம்மை, மறுமணம், விவாகரத்து, சொத்துரிமை ஆகியவைகளை தர்க்கரீதியாய் ஆராய்ந்து எழுதப்பட்ட தொகுப்பாகும் விலை அணு 5.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை
இந்நூல் சார்லஸ் T. கோர்ஹாம் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு K. M. பாலசுப்பிரமணியம் B. A. B. L. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இதில் மக்களின் முன்னேற்றத்தையும், விஞ்ஞான வளர்ச்சியையும், மதம் எவ்வாறு தடுத்து வந்தது என்பதைச் சரித்திர பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணு 5.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல?
இந்நூல் பெர்ட்ரண்ட் ரசல் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு S. குருசாமி B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இது கடவுளைப்பற்றியும், கிறிஸ்தவைப்பற்றியும் தெள்ளத்தெளிய ஆராய்ந்து எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல். விலை அணு 3.

மதம் என்றால் என்ன?
இந்நூல் ராபர்ட் G. இங்கர்சால் அவர்களால் ஆங்கிலத்தில் இயற்றப்பட்டு சோழர் S. லட்சுமிரதன்பாரதி M. A., B. L., அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூலில் மதக்கதையின் தன்மையையும், கடவுளின் தன்மையையும் நன்கு விளக்கிக்காட்டப்பட்டிருக்கிறது.
விலை அணு 2.

கடவுள்.
இந்நூல் கர்னல் ராபர்ட் ஜி. இங்கர்சால் அவர்களின் ஒரு அரிய சொற்பொழிவாகும். இதில் உலகிலுள்ள பல்வேறு கடவுளின் தன்மையும் உலகத்தோற்றத்திற்குக் காரணமாக ஓர் கடவுளிருக்க முடியாது என்பதையும் விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.
அழகிய லேப்பருடன் இங்கர்சாலின் வரலாறும், ஆர்ட் பேப்பரில் ஆசிரியர் உருவப்படமும் சேர்க்கப்பட்டுள்ளது. 100 பக்கங்கள் கொண்டது. விலை அணு 5.

மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன?
இந்நூல் Hon. பெர்ட்ரண்ட் ரசல் M. A. F. R. C. S. அவர்களின் சொற்பொழிவு. தோழர் C. K. மருதாச்சலம் B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. மதம் எவ்வாறு மக்கள் முன்னேற்றத்திற்கு தடையாயிருக்கிறது எனபதை விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.
விலை அணு 3.

நான் சம்சயவாதி ஆனதேன்?
இந்நூல் ராபர்ட் ஜி. இங்கர்சாலின் சொற்பொழிவு. இதில், தான் கடவுளைப்பற்றிக் கவலைப்படாத வழுப்பிருப்பதற்குரிய காரணங்களைத் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டியிருக்கிறார்.
விலை அணு 3.

புத்தகங்கள் வேண்டுவோர் புத்தகம் ஒவ்வொன்றிற்கும் ஒரு அணு ஸ்டாம்பு கூடுதலாக அனுப்பவேண்டும்.

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட், ஈரோடு.

நடைபெறும் பந்தயத்தின்

பெயரும், தேதியும்.

டெர்பி

6—6—34.

முதல் பரிசு பெற்றவர்.

டெர்பி மியூட்சுவல் லாட்டரி கிளப்

டிக்கட் 1க்கு விலை

ரூ.

4—0—0

டிக்கட்டிற்கு பணம்பெற

முடிவு தேதி 15-5-34

முதல் பிரைஸ் படவ 6800

(லெஸ்ட் இந்தியா தந்தி)

I. C. D. ஜேகோடபஸ் கிங்ஸ் டன் மியூட்சுவல் கிளப் கிரேண்ட் நேஷனல் டிஸ்ட்ரிபியூஷனில் முதல் பிரைஸ் 6,800 பவுனை ஜேமேக்காவைச் சேர்ந்த கையிலிருக்கும் சி. ஏ. டைலர் பெற்றார், மியூட்சுவல்

சுவிட்ஜர்லாந்துக்கு பக்கத்திலுள்ள லீச்டென்ஸ்டன் கவர்ன்மெண்டின் லைசென்ஸ் பெற்ற கவர்ன்மெண்ட் பிரதிநிதி, போலீஸ் இவர்கள் மேற்பார்வையில் பத்திரிகை பிரதிநிதிகள், பொது ஜனங்கள் முதலியவர்கள் முன்னிலையில் நடை பெறுவது. 15 நாளுக்கு ஒருமுறை நடைபெறுகிறது. வருடத்தில் முப்முறை மார்ச்சு, ஜூன், அக்டோபர் ஆகிய நவம்பர் ஆகிய மாதங்களில் நடைபெறுகிறது.

ஒவ்வொரு சந்தாதாருக்கும் டிக்கட் நம்பர் லிஸ்டு, தலைமை ஆபீஸ் சீது, டிராலிண்டு முதலியவை அனுப்பப்படும்.

டெர்பி தினம் காலை எடுக்கும் காட்சி.

லீச்டென்ஸ்டன் மகாண வியாபாரச்சங்க காரியதரிசி அபிப்பிராயம்.

மியூட்சுவல் கிளப் லிமிடெட் நடத்தும் குதிரைப்பந்தய லாட்டரி சந்தாதாரர்கள் எல்லோருக்கும் பூர்ணதிருப்தி ஏற்பட்டிருக்கிறதென்பது, பிரைஸ் கிடைத்தவர்களுக்கு லக்ஷக்கணக்கான பவுன்கள் கொடுக்கப்பட்டதாகவும் உள்ள ஆதாரங்களையும், உலகத்தின் பலபாகங்களிலிருந்து கிடைத்திருக்கும் நற்சாட்சி பத்திரங்களையும், எந்த ஆஸ்பத்திரி பொது ஸ்தாபனங்கள் முதலியவற்றின் அபிவிருத்திக்காக இது முதலில் நடத்தப்பட்டதோ அவைகளிடமிருந்து வந்துள்ள கடிதங்களையும் நான் பார்த்ததிலிருந்து எனக்குத்தெரிய வருகிறது. மற்ற பொது குதிரைப்பந்தய லாட்டரிகள் விபர வெளியீடுகளிலிருந்து, மியூட்சுவல் கிளப் லிமிடெட் பிரைஸ் விஷயத்திலும் இதர விடங்களிலும் ஏற்படுத்தியுள்ள தாராளத்தன்மையும் அனுகூலங்களும் நிகரற்றது என்ற முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது.

பிரைஸ் லிஸ்டு ஒவ்வொரு சந்தாதாருக்கும் நேராக அனுப்பப்படுகிறது.

மியூட்சுவல் கிளப்பை அவர்களுடைய பூரண எதிர்பார்ப்பிற்கும் நேர்மைக்கும் பாராட்டவேண்டும். இதுபோன்ற காரியத்துக்கு வேண்டிய ஆதாவும் நிர்வாகமும் தகுந்த அளவு இருக்கிறது.

[ஒப்பம்] G. FEGER,

லீச்டென்ஸ்டன் (ஐரோப்பா) 1928 ஜூன் 14.

அதிகாரம் பெற்ற ஏஜண்டு:—

S. K. வரதராஜலு, திருச்செங்கோடு, சேலம் ஜில்லா S. I.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு தோழர் ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்களால் வெளியிடப்பட்டது.